# யாழ்பாடி

கலாசார மலர் - 07



யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 07

### ஆக்க இலக்கிய சிறப்பு மலர் - 2023

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

11272 (P)
PL Arch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி

## கலாசார மலர் - 07

ஆக்க இலக்கிய சிறப்பு மலர்

**2023**

யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | யாழ்பாடி, கலாசார மலர் – 07 |
| பதிப்புரிமை | : | யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2023 |
| பக்கங்கள் | : | xx + 103 |
| பக்க அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 125 |
| அட்டைப்படம் | : | சகாதேவன் ஷதூர்ஷன் |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாணம். |
| அச்சுப் பதிப்பு | : | ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ், இல. 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| தொ.பே. இல. | : | 021 222 8266 / 021 221 4777 |
| ISSN | : | 978-624-6074-00-5 E |



இந்நூலில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு
ஆக்க இலக்கிய கர்த்தாக்களே
பொறுப்பாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொலுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!
பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணியம் - பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேச செயலகக் கீதம்

## பல்லவி

யாழோடு பிறந்ததெங்கள் நகரம் – யாழ்ப்பாணம்
ஈழ நாட்டினது சிகரம் – தமிழர் (யாழோடு)

## அனுபல்லவி

கடலலைகள் தாலாட்டுக் கேட்டு
கண்ணயர நாயனமும் பாட்டும்
வடபுலத்து மக்கள் உழைப்பாளர் – எது
வந்தாலும் ஓயார், படிப்பாளர் (யாழோடு)

## சரணங்கள்

ஒல்லாந்தர் கோட்டை ஒரு பக்கம்
உயர்ந்தமரம் ஓங்குபழம் பூங்கா
வல்லாளர்கள் வலைவீசுவார்கள் – கடல்
வளம் வாரிவருவார்கள், ஓயார் (யாழோடு)

கல்லூரிகள் பொலியும் நகரம் – சகல
கலைகளுக்கும் உறைவிடம், யாழ் நூலகமும்
நெல்வயல்கள், அங்காடி, கடைகள்
நெடுந்தூரப் பேருந்துவிரையும் (யாழோடு)

நான்கு மதம் சமரசமாய் விளங்க
நாதசுரகானம் எங்கும் முழங்க
ஓங்குநகர் யாழ்ப்பாணம் என்போம் – இதை
உயர்த்துவது நம் கடமை என்போம் (யாழோடு)

## ஆக்கம்

✍கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப)✍

## பாடல், இசையமைப்பு

✍திரு. தவநாதன் றொபேட்✍



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிரதேசக் கலாசாரப் பேரவைக் கீதம்

வாழிய வாழியவே – எங்கள் யாழ் பிரதேச
கலை கலாசார பேரவை வாழியவே – 02
கடல்படு திரவியம் தரை தரு பயிர் வளம்
ஆயிரம் ஆயிரமே – உடன்
அறிவியலொடு பல கலை வளம் இங்கே
வளர்வதும் ஆனந்தமே

பாணன் கலை பாடி பெற்ற பரிசெங்கள்
யாழ் மண் என மகிழ்ந்ததே – தினம்
நாமும் கலை பாடி பாரில் நிலைபெறவே
பணி பல புரிந்திடுவோம் (வாழி)

கூத்தொடு பண்ணிசை நடனமும் வளமுற
வளருது யாழினிலே – உடன்
சேர்த்துயர் கலைஞர்கள் மனமகிழ்ந்தொன்றாய்
உயர்ந்திடும் நாளிதுவே (வாழி)

மண்ணின் கலையாவும் விண்ணைத் தொட நின்று
வளர்ந்திடக் கரம் தொடுத்தே – யாழ்
மண்ணின் கரை பாரில் ஓங்கி உயர்ந்திடவே
உறுதியாய் உழைத்திடவே (வாழி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி - 7

## மலர்க் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்**

**திரு. எஸ். சுதர்சன்**

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவரும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

**மலர் வடிவமைப்பு**

**திரு. இ. ஜோன்சன்**

கலாசார உத்தியோகத்தர்,
செயலாளர், கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

திரு. நீ. ம. பாலச்சந்திரன்

திரு. கு. இராயப்பு

திரு. இரா செல்வவடிவேல்

திரு. பா. வின்சன்ற்

செல்வி. நா. பவித்திராயணி

திருமதி. சி. கனிஸ்ரா

செல்வி. ப. தர்மினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை

# 2022 - 2024

## பதவி நிலையினர்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. எஸ். சுதர்சன் |
| உபதலைவர் | :- | திரு. பி. யூல்ஸ்கொலின் |
| செயலாளர் | :- | திரு.இ.ஜோன்சன் |
| உபசெயலாளர் | :- | திருமதி. ந. சேர்ச்சிலம்மா |
| பொருளாளர் | :- | திரு. பா. வின்சென்ற் |

## செயற்குழு உறுப்பினர்கள் :-

திரு. இ. விஜேந்திரன்
திரு. M. K. சுமண்ராஜ்
செல்வி. ப. தர்மினி
திரு. கு. ஐயாத்துரை
திரு. அ. தயான்
திரு. சி. சிவஞானம்
செல்வி. நா. பவித்திராயணி
திரு. கு. இராயப்பு
திருமதி. பா. பானுகா (கணக்காய்வாளர்)

திரு. தே. சத்தியசீலன்
திரு. கி. மா. நெல்சன்
திரு. ம. அன்ரன் யோசப்
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. நீ. ம. பாலச்சந்திரன்
திரு. அ. பிராங்கிளின்
திரு. பி. அருள்கிருபாகர்
திருமதி. சி. கனிஸ்ரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடியின் நுழைவாயில்.....


01) நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி ix

02) யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி x

03) மதிப்புக்குரிய மௌலவி ஏ. எம். ஏ. அஸீம் அவர்களின் ஆசிச் செய்தி xi

04) அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xii

05) மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xiii

06) கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி xiv

07) பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xvi

08) பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி xvii

09) கலாசாரப் பேரவைச் செயலாளரின் உள்ளத்திலிருந்து xi

10) மலர்க்குழுவின் பார்வையில் xx

11) வழக்கிழந்து வரும் யாழ்ப்பாண வழக்குச் சொற்கள் 1

12) பாஷையூர் பிரதேச கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியமும் அதன் சமகாலப் போக்கும் 6

13) ஈரடியால் உலகளந்த வள்ளுவனின் திருக்குறள் காட்டி நிற்கின்ற வள்ளுவ வாழ்வியல் நெறிகள் 15

14) கலையோடு இணைந்த வாழ்வு 22

15) நாமே நமக்குள்.................... விழித்திருங்கள்! 27

16) வீட்டில் பயிர் வளர்ப்போம், நாட்டின் வளம் பெருகட்டும் 29

17) அழிந்துவரும் பாரம்பரிய கலைகளுள் ஒன்றான நடசாரி மற்றும் அதனோடு இணைந்த செயற்பாடும் புகழ் பூத்த பாஷையூர் கிராமமும் 34

18) கலையோடு இயைந்த வாழ்வு 43

19) இயற்கை அன்னை 48

20) சத்தமில்லா யுத்தம் 51

21) “ஹைக்கூ” என்றால்.......? 54

22) எமது சமுதாயத்தில் பெண் விடுதலை 59

23) நட்பு 63

24) அம்மா 66

25) தாய்மொழியைப் போற்றுவோம் 69

26) ஒளியாய் வந்த விடியல் 71





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) உழைப்பு 75

28) அன்புடைமை 78

29) எங்கள் ஊர்.... 82

30) தலைமுறையும் தலைமுறை இடைவெளியும் 84

31) கொரோனா எனும் இராட்சதனே............நீ 88

32) முயற்சி 90

33) தமிழே... அமுதே 91

34) தொலைந்த செங்கோல் 94

35) காற்றே நீ பேசவா 96

36) பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள் 97


37) வாழ்வின் வெற்றிக்கு சிரிப்பே சிறந்த மருந்து 98

38) அட்டைப் படம் விளக்கவுரை 103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிகள்



**இரண்டாவது குருமஹாசந்நிதான**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

அன்புள்ளவர்களுட்கு......

யாழ்ப்பாண பிரதேச செயலகம் வருடா வருடம் வெளியிட்டு வரும் யாழ்பாடி என்னும் நூல் ஏழாவது மலர் ஆக மலர்வதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். உலகம் முழுவதும் வாழும் அனைத்து மக்களும் யாழ்ப்பாண பண்பாட்டினையும் யாழ்ப்பாண கலாசாரத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிவரும் மலர் பிரதேச செயலகத்தின் பணிகளையும் அறியும் வண்ணம் வெளியிடுவது சிறப்புடையதாகும். இயல், இசை, நாடகத்தையும் ஊக்குவிக்கும் வகையில் யாழ்பாடி நூல் இவ்வருடம் வெளிவருவது அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியினையும் பெருமையினையும் தருகிறது. இதனை வெளியிடும் கலாசாரப் பேரவைத் தலைவர் திரு. எஸ்.சுதர்சனையும் அனைத்து பணியாளர்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். மலர் சிறப்புற அமைய இறையருளை சிந்திக்கின்றேன்.


என்றும் வேண்டும் இன்ப அன்பு

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட ஆயரின்



## ஆசிச்செய்தி

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,**

**மேதகு ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**

**யாழ் மறைமாவட்ட ஆயர்**

யாழ் பிரதேசக் கலாசாரப் பேரவையினால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்ற யாழ்பாடி மலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"பட்டை தீட்டப்படும் போது வைரம் ஜொலிக்கும்" என்பது போலத் தான் பெற்ற அறிவினை எழுத எழுத ஒருவரது அறிவு கூர்மையாக்கப்படுவதோடு, எதிர்கால சமூகத்திற்கு பயனுள்ள விதமான படைப்பினையும் உருவாக்க முடிகின்றது. தொழில்நுட்ப யுகத்தில் வாழும் இத்தலைமுறையினர் மத்தியில் எழுதுகின்ற பழக்கம் அருகிவரும் நிலையில், எமது சமூகத்தில் எழுத்தாளர்களை உருவாக்க களமமைப்பதோடு, எமது சமூகத்தின் கலை, கலாசாரம், பாரம்பரியம், ஒழுக்கம், அறிவு, சமயம் சார்ந்த விடயங்களை வெளிக் கொணர்ந்து, ஆவணப்படுத்தும் ஒரு களமாகவும் இந்த யாழ்பாடி நூல் மலர்வு அமைந்துள்ளது என்பது சிறப்பாக குறிப்பிட வேண்டிய ஒரு அம்சம் ஆகும்.


எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த மலரினை அனைவரும் வாசித்து பயன்பெற வாழ்த்துவதோடு, மலரினை வெளியிடுவதற்கு உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளையும், செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

★★★ நன்றி ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை பிரார்த்தனையேற்ற
# ஆசிச் செய்தி



*அல்ஹம்து லில்லாஹ்!!*

**தேசாபிமானி அல்ஹாஜ்**
**மௌலவி ஏ. எம். ஏ. அஸீஸ் (காஸிமி),**
**யாழ்/ கிளி மாவட்ட உலமாசபை**
**முன்னாள் தலைவர்,**
**யாழ் மாவட்ட சர்வமதத் தலைவர்,**
**அகில இலங்கை சமாதான நீதிவான்.**

யாழ்ப்பாணத்திலே கலை இலக்கிய கலாசார விழுமியங்களை வாழும் காலமெல்லாம் வழி நடாத்தி போற்றி புகழும் ஓர் உன்னத ஊக்கியாக செயல்படும் யாழ் பிரதேச செயலகம் வருடா வருடம் தன்நிலை மாறாது தயவோடு தரும் "யாழ் பாடி - 07" மலரானது அனைத்து கலை உள்ளங்களை, எழுத்தாளர்களை, புத்தி ஜீவிகளை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. வெளிவரும் மலரதை வாழ்த்துகிறேன்.

இதில் வெளிவருகின்ற பல்துறை சார்ந்த கதைகள், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் எல்லாம் படைப்பாளிகளின் படைப்புகளால் அலங்கரிக்கப்பட்டு உற்று நோக்கப்படுவதுதான் இம்மலரை மேலும் மேலும் மெருகூட்டி வளப்படுத்துகின்றது. காரணம் யாழ் மண் தன் வாசனை நுகர்வும், கலாசாரப் பேணுதலும், ஒழுக்கமும் ஒன்றிணைக்கப்பட்டு உலாவருவது உயர்வு பெறுகிறது.


எனவே, இதில் முனைப்பாயுள்ள யாழ்ப்பாண கலாசாரப் பேரவைக்கும் இதற்காக கடமையே கண் என ஒத்துழைப்பு நல்கும் எம் பிரதேச செயலாளர் திரு. எஸ். சுதர்சன் அவர்களுக்கும் கலாசார உத்தியோகத்தருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அளவிலா அன்பும் இணையில்லா கிருபையும் கொண்ட அல்லாஹ்விடம் அனைவரும் தம் வாழ்வியலும் செழுமை பெற்று நலமும் வளமும் பெறவும் அனைத்து மத கலாசார மார்க்க விழுமியங்களும் பிரதிபலித்து தழைக்க இன்னும் பல யாழ் பாடி உலாவர பிரார்த்தித்து ஆசிக்கின்றேன்! ஆமீன், யாரப்பல் ஆலமீன்!

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



**அ. சிவபாலசுந்தரன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**

★★★★★★

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இலைமறை காயாக வாழ்ந்துவரும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஊக்குவிக்கும் நோக்கோடு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படும் “யாழ்பாடி - 07” மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். யாழ்ப்பாண பிரதேசம் தொல்லியல் வரலாற்றையும் தனித்துவமான பண்பாட்டம்சங்களையும், சிறப்பாக சிந்துநடைக்கூத்து, நாட்டுக்கூத்து, இசைநாடகம் போன்ற பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுத்த பூமியாகவும் விளங்கும் இப்பிரதேசத்திலே கலை வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்கிட காலத்துக்குக் காலம் கலைஞர்களும், அறிஞர்களும் தோற்றம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் குறிப்பாக குருநகர், நாவாந்துறை, பாஷையூர் போன்ற கிராமங்களில் இன்றும் கூத்து வடிவங்கள் பாரம்பரியங்கள் சிதைவுபடாது பேணப்படுகிறது.

யாழ்ப்பாண பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு போன்றவற்றினையும் கவிதை, கட்டுரை, வரலாறு சிறுகதை போன்ற ஆக்க இலக்கியங்களையும் தாங்கியதாக இம்மலர் வெளிவருவது சிறப்புக்குரியது. இம்மலரினை வெளியீடு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், மலர்க்குழுவினர், ஆக்கங்களை வழங்கியோர் அனைவரும் பாராட்டுக் குரியவர்கள். இப்பிரதேசம் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு இம்மலர் பேருதவியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனிவரும் காலங்களிலும் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாக இம்மலர் வெளியீடு செய்யப்பட வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றேன்.

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



மருதலிங்கம் பிரதீபன்
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படும் யாழ்பாடி இதழ் - 07 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

ஒவ்வொரு பிரதேசமும் தனக்கென சில தனித்துவங்களையும் சிறப்புக்களையும் கொண்டு விளங்குவது அனைவரும் அறிவர். அந்த வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகம் யாழ் நகரை தன்னகத்தே கொண்டமைந்த வகையில் தனிச்சிறப்பை பெறுகின்றது எனலாம். இங்குள்ள மக்களின் வாழ்வியல் கூறுகள், பண்பாட்டு அம்சங்கள், கலை கலாசார பின்னணியை வெளிப்படுத்தும் வகையில் வெளிவரும் யாழ்பாடி அப்பிரதேசத்தின் சிறப்புக்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் எனலாம். மேலும், யாழ்பாடி இதழ் வல்லமை மிக்க கலைஞர்களை ஊக்கப்படுத்தி அவர்களது படைப்புக்களை வெளிக்கொண்டு வருவதன் ஊடாக இப்பிரதேச மக்களின் வாழ்வியல் உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ளக் கூடியதாக அமைகின்றது.

"செப்பம் உடையான் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கும் ஏமாப்பு உடைத்து"

என்னும் வள்ளுவனின் வாக்குக்கு அமைய தொடர்ந்து அப்பிரதேச மக்களின் கலை கலாசார பண்பாட்டு அம்சங்களை அழிவடையாது பாதுகாக்கும் ஓர் ஆவணமாக யாழ்பாடி அமைகின்றது. இவ் அரிய முயற்சியினை சிரமேற் கொண்டு பணியாற்றி வரும் பிரதேச செயலாளர், மலர்க்குழுவினர் மற்றும் யாழ்பாடி இசை மீட்ட தமது கலைப் படைப்புக்களை வழங்கிய அறிஞர் பெருமக்கள் அனைவரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

★★★ நன்றி ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**அ. உமா மகேஸ்வரன்,**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு.**
**வடமாகாணம்.**

பாணன் பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாணத்து யாழ்பாடி மலர் மணிமுடியாய்த்திகழ நல்வாழ்த்துக்கள்.

இலங்கையின் சிரசாய் விளங்கும் யாழ்ப்பாணம் தனக்கென்றதான பண்பாட்டு விழுமியங்களையும் கல்வி, கலை மேம்பாட்டிலும் முதன்மையான மாவட்டமாகத் திகழ்வதுடன் மரபையும் பண்பாட்டையும் பேணிக்காத்து வரும் மரபார்ந்த மாவட்டமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார செயற்திட்டத்தின் ஓர் செயற்பாடாக ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்ற யாழ்பாடி-7 என்னும் பண்பாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நிலம், நீர், தொழில்வாண்மை அமைவிடங்கள், ஆன்மீக மையங்கள் என அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் வரலாற்றுத் தொன்மைமிக்க பூமியாகும். தொல்லியல் அமைவிடங்களும், மரபுரிமை அடையாளங்களும் நிறையவே காணப்படும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் பேறு பெற்றவர்களாவர். அவர்கள் தமது முன்னைய வரலாற்றினை தேடி ஆவணப்படுத்தும் ஓர் முயற்சியாக யாழ்பாடி என்னும் பண்பாட்டு மலரை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணன்பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டு வரும் யாழ்ப்பாணம் இசை நாடகம், தென்மோடிக்கூத்து, பரதம் மற்றும் இன்னோரன்ன கலைகளின் எழுச்சிக்கூடமாகவும் இத்துறை வல்லுனர்கள் பலரை உருவாக்கிய பிரதேசமாகவும் மிளிர்கின்றமை மனங்கொள்ளத்தக்கது. இப்பிரதேசத்தில் வாழும் கலைஞர்கள் ஒன்றுகூடி பிரதேச செயலரின் வழிகாட்டலிலும் செயற்படுத்தலிலும் ஆக்க இலக்கியப் புலமையாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் என அனைவரையும் ஒன்றிணைத்து ஆக்க இலக்கியப் பணிகளின் முன்னோக்கிய பயணமாக களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

பிரதேசவளம் பற்றியதாய், கலை, இலக்கிய ஊட்டமுடையதாய், வரலாற்றுப் பொக்கிஷமாக யாழ்பாடி அமைந்து பாணன்பாடிப் பரிசு பெற்ற யாழ்ப்பாணத்தின் மணிமுடியாய் யாழ்பாடி-7 மலர் வரலாற்றில் தடம் பதிக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகையதொரு அரும்பணியை செயற்படுத்தி வருகின்ற யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்களுக்கும், அதன் தலைவராய் வழிகாட்டும் பிரதேச செயலருக்கும் மற்றும் அவர் வழிதொடர்கின்ற கலாசார உத்தியோகத்தருக்கும் இந்நூலாக்கத்தோடு பயணிக்கின்ற அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து யாழ்பாடி-7 மலர் சிறப்பாக வெளிவருவதற்கு என்மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★★★★★★

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப்



### பிரதிப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி

**ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா,**
**பிரதிப் பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**

வடமாகாணங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வெளியிடும் "யாழ்பாடி - 07" கலாசார மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் கலை, பண்பாட்டுப் பாரம்பரியங்களை உரியவாறு பாதுகாத்து முன்னெடுத்து செல்ல வேண்டும் என்பது தொடர்பில் எமது திணைக்களம் மாவட்டங்கள், பிரதேசங்கள் தோறும் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்தகைய செயற்றிட்டங்களின் வெளிப்பாடே இன்று யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் பண்பாட்டு விழாவும், கலாசார சிறப்பு மலரான யாழ் பாடி - 07 வெளியீடும் ஆகும்.

பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இலை மறை காயாக ஒளிந்திருக்கும் கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் மலராகவும், கற்றல் கற்பித்தல் ஊடாகவே சமுதாய மேம்பாட்டினை அடைய முடியும் என்ற நிலையினைக் கடந்து எம் முன்னோர்கள் விட்டு சென்ற தொன்மையான அடையாளங்கள், பண்பாடு, பாரம்பரியங்களினை பேணிப் பாதுகாத்து இளம் தலைமுறையினருக்கு பயன் பெற வைக்கும் நூலாகவும் வெளிவருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டு தோறும் பிரதேச செயலகங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டங்களில் ஒன்றான கலாசார அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலமாக இவ்வருடமும் யாழ் பாடி மலர் வெளிவருகின்றமை சிறப்புக்குரியதாகும். எனவே இம்மலர் வெளிவர உதவிய யாழ்ப்பாண பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், கலாசார பேரவையினர் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி




எஸ். சுதர்சன்
பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினாலும் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினாலும் வெளியீடு செய்யப்படுகின்ற 'யாழ்பாடி' 07 என்னும் நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நூல்கள் அறிவின் வாயில்கள். எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை எழுத்துருவில் அடுத்த சந்ததிக்குக் கடத்துதல் இன்றியமை யாததாகும். அந்த வகையில் இம்மலரானது காலத்தின் தேவைகருதி கனதியாக வெளிவருகின்றது. இளைய சமுதாயம் கலை இலக்கியப் படைப்புக்களை தொடர்ச்சியாக எழுத்துருவில் வடிப்பதற்கு இவ்வாறான மலர்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை இலத்திரனியல் படைப்புக்களை இலத்திரனியல் சாதனங்களினூடாக படைத்தும் வாசித்தும் வரும் இன்றைய தலைமுறைக்கு இவ்வாறான மலர்களின் வருகை வன்பிரதிகளாக புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை அருகிவிடாமல் பேணுவதற்கு வழிசமைக்கும்.

யாழ் மண்ணானது கலை இலக்கிய பண்பாட்டு பாரம்பரியத்தில் தனக்கென ஒரு தனித்துவத்தினை நிலைநிறுத்தி பேணி வருகின்றது. மொழியின் திறவுகோல்தான் இலக்கியம். அறிவைச் சேகரித்து களஞ்சியப்படுத்தி மனிதவர்க்கத்தின் வளர்ச்சிக்கு பெருந்துணை புரிவதாக இலக்கியங்கள் உள்ளன. அவை எந்தவொரு காலகட்டத்திற்கும் வேறுபட்ட குணா அம்சங்களைக் கொண்டமையினாலேயே காலத்தைப் பிரதி பலிக்கும் கண்ணாடி என்று கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இனத்தின் வரலாறும் கலைகலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங்களும் இலக்கயத்தின் ஊடாகவே வெளிப்படுத்தப் படுகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவில் இலைமறை காயாக உள்ள கவிதை, இலக்கியம், இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், கூத்து, போன்ற பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் உள்ளக்கிடைக்கைகளை வெளிக் கொணர்வதற்கு யாழ்பாடி எனும் நூல் பேருதவியாக விளங்குகின்றது. அந்த வகையில் தொடர்ச்சியாக 7வது ஆக மலருகின்ற மலரின் உள்ளே தமிழர்களுடைய பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை தாங்கி வருகின்ற கவிதைகள் கட்டுரைகள், சிறுகதைகள், ஒரு மாலையில் தொடுக்கப்பட்ட பூக்களைப் போல அழகு பொருந்திவர அமைந்துள்ளமை இதன் சிறப்பாக அமைந்துள்ளது.

தொடச்சியாக அதிகாலை உதிக்கும் சூரியனாக ஆண்டு தோறும் உதித்து கலைஞர்களுடைய கருத்துக்களை சித்திரமாயத் தாங்கி வருகின்ற இம்மலரின் வருகையால் தமிழன்னை பூரிப்படைவாள் என்பதுடன், பிரதேசத்தில் உள்ள கலைஞர்களின் திறமைகளை வெளியுலகிற்கு காண்பித்து மேலும் பல புதிய இளங்கலைஞர்களை உருவாக்குவதற்கு ஆர்வமும் ஊக்கமும் வழங்குவதோடு கலை ஆர்வத்தை தூண்டுவதற்கும் இம் மலர் மிகவும் உறுதுணையாக உள்ளது. அத்தோடு இம்மலரை வெளியீடு செய்வதற்கு தொடர்ச்சியாக நிதி அனுசரணை வழங்கி வருகின்ற வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் ,இப்பணியினை ஆண்டுதோறும் செவ்வனே நிறைவேற்றி வரும் யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவையினருக்கும், கலாசார உத்தியோகத்தர்களிற்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு யாழ்பாடி மலர் வெளியீடானது பல ஆண்டுகள் தொடந்து இடம்பெற வேண்டுமெனவும் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.


**நன்றி**

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவைச் செயலாளரின் உள்ளத்திலிருந்து...



**இ.ஜோன்சன்**

**கலாசார உத்தியோகத்தர் (செயலாளர்)**

**யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப்பேரவை,**

**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாண கலாசார பேரவையினால் இவ்வருடம் வெளியிடப்படும் யாழ்பாடி - 07 எனும் பண்பாட்டு மலர் பல்வேறு சிறப்பம்சங்களுடன் புகழ் மணம் பரப்பி வெளிவருவதனை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாண மண்ணில் இலைமறைகாயாக வாழ்ந்துவரும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கலை ஆர்வலர்களின் படைப்புக்களைத் தாங்கி புதுப்பொழிவுடன் ஆக்க இலக்கிய மலராக வெளிவருவது சிறப்பம்சம் ஆகும்.

இவ் ஆவணப்படுத்தலுக்கு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திரு.எஸ்.சுதர்சன் அவர்களுக்கும் ஆசிச்செய்திகள் வழங்கிய மதப் பெரியோர் களுக்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய மதிப்பிற்குரிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் அவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலர் வெளியீட்டுக்கு காலத்தின் தேவையறிந்து அனுசரணை வழங்கிய வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக் களத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மலரினை அலங்கரிக்க ஆக்கங்கள் மற்றும் படைப்புக்கள் தந்து உரமூட்டிய கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இம்மலர் வெளியீட்டுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகக்குழு மற்றும் மலர்க் குழுவினருக்கும் விளம்பரங்களைத் தந்து உதவிய அன்பர்களுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலருக்கான அட்டைப் படத்தினை சிறப்புற வரைந்து இம்மலருக்கு அழகூட்டிய ஓவியர் திரு.சகாதேவன் ஷதுர்சன் அவர்களுக்கும் சிறப்புற அச்சிட்டு வழங்கிய ஸ்ரீ மாருதி அச்சகத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாழ்பாடி இதழ் 7"

# மலர்க் குழுவின் பார்வையில்

சமூக நீரோட்டத்தை மடை மாற்றம் செய்யவல்ல சக்தி மிக்க சாதனை படைக்கும் ஆயுதங்கள் இரண்டு. அவை சொல்லும் எழுத்துமே ஆகும். விண்ணளாப் பறக்கும் வில்லம்பு போல் சிந்தனை நாணிலிருந்து பாயவல்லது. சொல்லம்பு, நெம்புகோலாக நின்று ஆட்சி மலைகளையும் அசைக்க வல்லது. எழுதுகோல், எழுத்தும் சொல்லும் நிகழ்த்திய சமுதாய மாற்றங்களைப் பற்றிய சரித்திரங்கள் நிறைய உண்டு. இந்த வகையில் எமது யாழ்பாடி இதழும் சமுதாயத்தில் நல்ல விழிப்புணர்வை எழுதத்தக்கதாக வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யாழ்ப்பாணக் கலாசாரப் பேரவையின் "யாழ்பாடி இதழ் 7" இற்கான மலர்க் குழுவின் மதிப்பீட்டை எழுதுவதில் உள்ளம் மகிழ்கின்றேன். யாழ்பாடி மலர் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை மலர்க் குழுவின் மதிப்பீட்டின் ஒரு பார்வையே காணப்படுகிறது.

ஆரம்பகால மலர்களில் யாழ் பிரதேச செயலகப் பரப்பிற்குள் கட்டுரையாளர்கள் முடக்கப்பட்டிருந்தனர். இதற்குக் காரணம் பிரதேச எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளிக்கப் படல் வேண்டும் எனும் எண்ணமேயாகும்.

அடுத்த நிலையாக "தலைப்பு" கொடுக்கப்பட்டு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டன. நல்ல அறுவடை பெறப்பட்டது. எழுத்தாளர்களின் எழுத்து முறை கூராக இருந்ததை கண்டு யாழ்ப்பாண கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அளவற்ற உவகை கொண்டோம்.

அடுத்த நிலையாக கட்டுரையாளர்களின் எல்லைப் பரப்பை நீக்கி அகலப்படுத்தினோம். நல்ல ஆக்கபூர்வமான கட்டுரைகள் பெறப்பட்டன. இருப்பினும் பல கட்டுரைகள் முன்பு வேறு மலர்களுக்கு எழுதப்பட்டவையாக இருந்தமையால் அவற்றை நீக்க வேண்டி இருந்தது.

இத்தகைய அனுபவங்களினூடாக யாழ்பாடி மலர் தனது பொழிவு மாறாமல் இவ்வாண்டும் (2023) கவிதைகள், சிறுகதைகள், அர்த்தமுள்ள கட்டுரைகளைத் தாங்கியுள்ளது. பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஆக்க இலக்கியங்களும் சிறப்பாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இவ்வாண்டு மலரில் எமது பிரதேச மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற திருக்குறள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருவள்ளுவரும் திருக்குறளும் எனும் விடயத்தில் நடைபெற்ற கட்டுரை, கவிதைப் போட்டியில் பிரிவு வாரியாக முதலாம் இடம் பெற்றவர்களின் ஆக்கங்களும் இதழில் இடம்பெற்றுள்ளது. மாணவர்களின் எழுத்தையும் வரவேற்பீர்கள் என நம்புகிறோம்.

நம் உயிரினும் மேலான தமிழ்மொழியை காத்துப் பாதுகாக்கும் பாரிய கடமை நமக்குண்டு. தமிழ்த்தாய் வாழ்த்தும், தமிழ்மொழி வாழ்த்தும் இசைப்பதன் மூலம் தமிழ் மொழியை வளர்த்து விட முடியாது. எத்தனை மொழி தாய் மொழியாகவே இருக்க முடியும். எனவே நல்ல சொல்லும் எழுத்தும் இன்றைய அத்தியாவசிய தேவையாகும்.

**மலர்க்குழு சார்பாக ........**
**யாழ்ப்பாணப் பிரதேசக் கலாசாரப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. சாம்பசிவம் சுதர்சன்**

பிரதேச செயலாளர் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை - 2022 / 2024




இருப்பவர்கள் (இ-வ): திரு. கி. மா. நெல்சன், திருமதி. ந. சேர்ச்சிலம்மா, திரு. பா. வின்சென்ற் (பொருளாளர்) திருமதி. சோபிகா றோய் றொபின்சன் (உதவிப் பிரதேச செயலாளர்), திரு. எஸ். சுதர்சன் (பிரதேச செயலாளர் / தலைவர்), திரு. பி. யூல்ஸ்கொலின் (உபதலைவர்) திரு. இரா. செல்வவடிவேல், திரு. சி. சிவஞானம், திரு. நீ. ம. பாலச்சந்திரன், திரு. இ. ஜோன்சன் (கலாசார உத்தியோகத்தர்)

நிற்பவர்கள் (இ-வ) : திரு. தே. சத்தியசீலன், திரு. M. K. சுமண்ராஜ், செல்வி. ப. தர்மினி, திரு. அ. தயான், திரு. கு. ஜயாத்துரை திரு. ம. அன்ரன் யோசப், திரு. கு. இராயப்பு, திருமதி. பா. பானுகா, திரு.பி. அருள்கிருபாகர்

வருகை தராதோர் : திரு. இ. விஜேந்திரன் திரு. அ. பிராங்கிளின், செல்வி. நா. பவித்திராயனி திருமதி. சி. கனிஸ்ரா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்பாடி 7 மலர்க்குழு




இருப்பவர்கள் (இ-வ): திரு. பா. வின்சென்ற் (பொருளாளர்), செல்வி. ப. தர்மினி, திருமதி. சோபிகா றோய் றொபின்சன் (உதவிப் பிரதேச செயலாளர்), திரு. எஸ். சுதர்சன் (பிரதேச செயலாளர் / தலைவர்), திரு. இரா. செல்வவடிவேல், திரு. நீ. ம. பாலச்சந்திரன், திரு. கு. இராயப்பு, திரு. இ. ஜோன்சன் (கலாசார உத்தியோகத்தர் / செயலாளர்)

வருகை தராதோர் : செல்வி. நா. பவித்திராயனி திருமதி. சி. கனிஸ்ரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்





பண்பாட்டு மலர்கள்








கலைஞரின் படைப்புக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கிழந்து வரும் யாழ்ப்பாண வழக்குச் சொற்கள்



செ. திருச்செல்வநாதன்
காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள தமிழ் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது என பல்வேறு தமிழ் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் நீண்டகாலமாகவே இருந்துவரும் வடமொழிச் செல்வாக்கு, ஆங்கிலம் போன்றவற்றின் கலப்பு, இலத்திரனியல் ஊடகங்களின் பெருக்கம் போன்ற காரணிகளால் யாழ்ப்பாணத் தமிழ் வழக்கிலிருந்து தூயதமிழ்ச் சொற்கள் பல மறைந்து வருகின்றன. இவ்வாறு பயன்பாட்டிலிருந்த அருகிவரும் சொற்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ் வேர்ச்சொற்களிலிருந்து கிளைத்தெழுந்த சொற்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வேர்ச்சொல் “அம்” – பொருத்தற் கருத்து

அம்பலம் = கூட்டம் , கூடுமிடம்
எ-டு:- அவன்ர திருட்டு வேலையெல்லாம் இப்ப அம்பலத்துக்கு வந்திட்டுது.

அம்முக்கள்ளன் = ஒன்றும் தெரியாதவன் போல் நடிப்பவன்
எ-டு :- அவன் ஆரும் சந்தேகப்படாத மாதிரி நடிப்பான், அம்முக்கள்ளன்

அம்முதல் = கூடுதல், குவிதல்
எ-டு :- காயப்பட்டு ஒருத்தன் கிடக்கிறான், சனம் அம்மிக் கொண்டு நிக்குது

அமர்க்களம் = போர்க்களம், ஆரவாரம்
எ-டு :- என்ன அங்கால ஒரே அமர்க்களமாய் கிடக்குது?

அமளி = 1. மிகுதல்
எ-டு :- இப்ப சந்தையில் பிலாப்பழம் நல்ல அமளி
2. ஆரவாரம்
எ-டு :- காலையிலிருந்து அங்கால ஒரே அமளியாக்கிடக்கு

அமுக்கடி = நெருக்கடி
எ-டு :- இந்த அமுக்கடிக்க, எனக்கு அங்கை வரேலாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கன் = மறைவாக வினை செய்பவன்

எ-டு :- அவன் சரியான அமுக்கன், ஒருத்தருக்கும் தெரியாம வேலையைக் கொண்டு போயிருவான்.

அமுக்கி = இரவில் படுக்கையில் அமுக்குவது போன்ற உணர்வு

எ-டு :- படுத்திருக்கேக்க அமுக்கி நெஞ்சில அமத்தி செத்துப் போனான்

ஆம்பல் = பகலிற் குவியும் அல்லி

எ-டு :- இரவிற் குவிவதால் அல்லி என்றும், பகலிற் குவிவதால் குமுதம் எனவும் அழைக்கப்படுகிறது.

உம்முதல் = கூடுதல், பொருத்துதல்

எ-டு :- பிள்ளை, அம்மாக்கொரு உம்மா தாங்கோ

அருளுதல் = அஞ்சுதல்

எ-டு :- அந்தக் காயத்தைப் பாத்து அரண்டுபோனேன்

அரந்ததல் = துன்பத்திற் கதறுதல்

எ-டு :- அந்தப் பிள்ளை காணாமல் போனாப்பிறகு தாய் நெடுக அரட்டிக்கொண்டிருக்கிறா

அரிக்கன் = அரிசியிலிருக்கும் கல்லை அரிக்கும் சட்டி, மாவை அரிக்கும் அரிதட்டு

அரிதாள் = கதிரறுத்த நெல்தாள்

எ-டு :- அரிதாள் எல்லாத்தையும் கூட்டி உப்பட்டியாக்கி சூடுவைக்க வேணும்

அரிவாள்மணை = அரிவாள் பதித்த பலகை அல்லது கட்டை

எ-டு :- மீன்வெட்டுற அரிவாள்மணையில் நாங்க மரக்கறி வெட்டிறயில்லை

அரை = அருகில் அல்லது சிறுத்த இடை

எ-டு :- சின்னப் பிள்ளையளுக்கு அரையில் அறுநாக்கொடி கட்டவேண்டும்

அருக்காணி = அருமை

எ-டு :- என்ரகாசை வைச்சுக் கொண்டு அருக்காணிபண்ணுறான்

அருக்குதல் = அருமை பண்ணுதல்

எ-டு :- காசை சுளையா வாங்கிப் போட்டு அருக்கியுருக்கித்தாறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமந்த = அருமருந்தன்ன

எ-டு :- அருமந்தபிள்ளை அவங்களோட சேர்ந்து அழிஞ்சு போனான்.

அருந்தல் = விலையுயர்வு, பொருளருமை

எ-டு :- முருங்கைக்காய் அருந்தலாப் போச்சு

அறவு = நீக்கம்

எ-டு :- அவனிட்ட காசை அறவாக்கேலாது

அறுதி = நீக்கம்

எ-டு :- ஈடுவைச்ச காணி அறுதியாப்போச்சு

அறைக்கீரை = அறையறையாய் வகுக்கப்பட்ட பாத்தியில் விளையும் கீரை

## வேர்ச் சொல் “இல்” - இளமைக் கருத்து

இளக்கம் = நெகிழ்வு, இறுக்கமற்ற தன்மை, உறுதியற்ற தன்மை

எ-டு :- இந்தச் சுடுதண்ணிப் போத்தல் இளக்கம், சூடு நிக்குதில்லை

இளக்கரித்தல் = தளர்தல்

எ-டு :- பலகாரம் இளக்கரிச்சுப் போச்சு

இளக்காரம் = கழிகண்ணோட்டம்

எ-டு :- நாங்கள் என்ன, அவைக்கு இளக்காரமாப் போச்சோ?

இளக்கு = தளத்துதல்

எ-டு :- மாட்டுக்கு கழுத்தை இறுக்குது, கட்டைக் கொஞ்சம் இளக்கிவிடு

இளங்கால் = வெற்றிலையிளங் கொடி

எ-டு :- இளங்கால் கொஞ்சம் வாங்கி நட வேண்டும்.

இளங்கொடி = ஆவின் நஞ்சுக்கொடி

எ-டு :- இளங்கொடியை பால் மரங்கள்ளதான் கட்டுறவை

இளங்கோயில் = கோயிலை திருத்துவதற்காக சுவாமியை வைக்கும் குறுங்காலக் கோயில் (பாலஸ்தானம்)

இளஞ்சார்வு = குருத்தோலைச் சார்வு

எ-டு :- இளஞ்சார்வில இழைச்ச பெட்டியள் கனகாலம் பாவிக்கும்

இளஞ்சூல் = முதிராக்கரு

எ-டு :- அந்தமாடு இப்பதான் இளஞ்சூல்பட்டிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளத்தல் = மெல்லிதாதல்

எ-டு :- அவன் வருத்தம் வந்தாப் பிறகு இளத்துப்போயிற்றான்

இளந்தாரி = இளைஞன், இளைஞை

எ-டு :- நான் இளந்தாரில ஒரு மூடை நெல்லை தனியதூக்குவன்

இளந்தெய்வம் = சிறுதெய்வம்

எ-டு :- முந்தி ஊர்கள்ல இளந்தெய்வங்களை கும்பிடுறவை

இளந்தோச்சல் = அலகைச் சிறிது பதப்படுத்துதல்

எ-டு :- கத்திமொட்டையாப்போச்சு ஒருஇளந்தோச்சல் போட வேணும்

இளநாக்கடித்தல் = உடன்பாடின்மைபோற் காட்டுதல்

எ-டு :- என்ர பெடியனுக்கு அவன்ர பெட்டையைக் கேட்டதுக்கு இளநாக்கடிச்சுக் கொண்டு போறார்

இளநீர்க்கட்டு = உண்ணாக்கு நோய்

எ-டு :- இளநீர்க்கட்டு வந்தா ஆரையேன் கொண்டு உச்சிமயிரை இழுக்க வேணும்

இளநெஞ்சு = இரக்கமுள்ள மனம்

எ-டு :- அவனுக்கு இளநெஞ்சு, இதைத் தாங்கமாட்டான்.

இளப்பம் = மதிப்புக் குறைவு , தாழ்வு

எ-டு :- அவைக்கு நாங்க என்ன இளப்பமாயிருக்கோ

இளம்பசி = சிறுபசி

எ-டு :- எனக்கு ஒரு குழல்புட்டுத் திண்டாத்தான் இளம்பசிஆறும்

இளம்பதம் = 1. முற்றாத நிலை

எ-டு :- வெண்டிக்காயை இளம்பதத்தில் புடுங்க வேணும்

2. சிறிது வெந்த அல்லது காய்ந்த நிலை

எ-டு :- (அ) பச்சைஅரிசியை இளம்பதமாய் வடிக்கவேணும்

(ஆ) ஓலைச்சார்வை காயப்போட்டு இளம்பதமாய் எடுக்க வேணும்

இளம்பறியல் = முற்றாத நிலையில் பறிக்கும் காய்

எ-டு :- ஒரு குலை தேங்காயை இளம்பறியலாய் புடுங்கு புட்டுக்கு வேணும்

இளம்பிறை = சிறு பிறை

எ-டு :- இண்டைக்கு இளம்பிறை தெரியாது மழைமேகமாயிருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமழை = சிறு பெயல் முகில்

எ-டு :- ஒரு இளமழை பெய்தாத்தான் வெக்கையடங்கும்

## வேர்ச்சொல் "இள்" இணைதற் கருத்து

இசைவு = 1. உடன்பாடு

எ-டு :- நான் கேட்ட விலைக்கு இசைவான் போல இருக்கு

2. பொருந்துகை

எ-டு :- இந்தத் திறப்பு அந்தப் பூட்டுக்கு இசையும் எண்டு நினைக்கிறன்

இசைவுகேடு = 1. பொருத்தமின்மை

எ-டு :- இப்பநாங்கள் அங்கபோனா இசைவுகேடாய்ப் போகும்

2. கருமத்தவறு

எ-டு :- வீட்டிலிருந்து வெளியே போகும் போது பூனை குறுக்க வந்தா இசைவுகேடாப் போகும் எண்டு ஒரு நம்பிக்கை

இணக்கு = 1. இசைப்பு

எ-டு :- பிள்ளையை கொஞ்சம் இணக்கு ஒரே அழுகையாக்கிடக்கு

2. உடன்பாடு

எ-டு :- அவைரெண்டுபேரையும் இணங்கினாத்தான் நல்லது

இணாப்பு = ஏய்ப்பு – பொருந்தச் சொல்லி ஏமாற்றுதல்

எ-டு :- எனக்குத்தாறன்எண்டு சொல்லிப்போட்டு இணாப்பிப்போட்டான்

இணை = 1. இரண்டு

எ-டு :- இந்தக் காப்புக்கு இணையாய் ஒண்டு செய்ய வேணும்

2. சேர்வு

எ-டு :- இவை ரெண்டுபேரும் இணைஞ்சுதான் பாடினவை

இணைபிரியாமை = இணைந்தவர்கள் கடைசிவரை பிரியாமலிருத்தல்

எ-டு :- அவங்கள் ரெண்டுபேரும் இணைபிரியாத கூட்டாளிகள்

இழைத்தல் = பின்னுதல்

எ-டு :- அதுகள் பாயிழைச்சுத்தான் வாழ்க்கையை நடத்துதுகள்

இழைதல் = நெருங்கிப் பழகுதல்

எ-டு :- அதுகள் இளசுகள், இழைஞ்சுகொண்டு திரியுதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் பிரதேச கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியமும் அதன் சமகாலப் போக்கும்





திருமதி. சிவறஞ்சன் கனிஸ்ரா BA(Hons)

கொழும்புத்துறை.

## அறிமுகம்

இன்றைய முதலாளித்துவப் பொருளாதாரச் சூழலில் உலகமயமாக்கலின் விளைவாக கணினிமயமாக்கலும் இலத்திரனியல் தாக்கமும் ஒரு மனிதரின் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய தன்மையில் இருந்து விடுபட முடியாதவர்களாக முதலாளித்துவ பொருளாதார ஆதிக்கத்தில் சிக்கித் தவிக்கும் மனிதரின் சிந்தனையிலும், வாழ்வியல் கூறுகளிலும் புத்துணர்ச்சி ஊட்டி மகிழ்வூட்டலுக்கும், பொழுதுபோக்கிற்கும் மற்றும் மனிதரின் கூட்டுப் படைப்புக்கும் வாய்ப்புக்களை வழங்கி இக்காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கிறிஸ்தவக் கூத்துக்களின் ஆற்றுகைகள் யாழ்.மாவட்டத்தின் பாஷையூர் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன.

பாரம்பரியக் கூத்தரங்கானது ஒரு சமுதாய அரங்காகும். இது மக்களின் வாழ்வியலோடு அவர்களின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் கலைவடிவமாகும். ஈழத்துக் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியத்தில் கிறிஸ்தவக் கூத்துக்கள் குறிப்பாக தனித்துவமான சமூக வரலாற்றுப் பொருளாதாரப் பின்புலத்தைக் கொண்டதாக உள்ளன. பாஷையூர் பிரதேசத்திலே இக்கூத்து தொன்மத்தின் பழமை வாய்ந்த ஒரு மரபாகக் காணப்படுகிறது. அவ்வூர் மக்களின் பண்பாட்டில் வாழ்வியலோடும் சமய வழிபாட்டுச் சடங்குகளுடனும் பின்னிப் பிணைந்து அந்தச் சமூகத்தினுடைய ஐதீகம், நம்பிக்கை சார்ந்து பிரதான பங்கை வகிப்பதுடன் அவர்களினுடைய பாரம்பரிய ஆற்றுகைக் கலைவடிவமாகவும், தனித்துவமானதாகவும் அந்த சமூகத்தினரால் தலைமுறை தலைமுறையாக அவர்களினுடைய வாழ்தல் அனுபவம். செயற்பாடுகள் ஊடாக அவர்களின் அறிவுத்திறன், நிபுணத்துவம் என்பவற்றின் அடிப்படையில் பெறப்பட்ட சமூகத்தின் சுயசார் பெறுமானமாக விளங்குகின்றன. ஆனால் இன்றையகாலச் சூழ்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கேயுரித்தான இக்கூத்து மரபானது அதன் தனித் தன்மையிலிருந்து விலகி அருகிவரும் போக்கினையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தையும் அதன் அழகியல் அம்சத்தினையும் அதன் சமகாலப் போக்கினையும் அடையாளங் காணவும் வெளிப்படுத்தவும் மீண்டும் அக்கூத்து மரபு சமூகமயமாக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட வேண்டும். கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியத்தின் தேவை, அதன் இருப்பு, சமூக ஊடாட்டத்தின் உயிர்ப்பு, சமூக இணைவு, அழகியல் தன்மை, சமகாலப்போக்கு ஆகியவற்றை வெளிப்படுத்துவதும் அவை சமூகமயமாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதும் இக்காலகட்டத்தின் மிகக் கட்டாயமான தேவையாகவே காணப்படுகின்றன.

## பாஷையூரில் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியம்

ஈழத்து நாடக மரபிலே கிறிஸ்தவக் கூத்துகளுக்கு பிரதான இடம் உண்டு. விடிய விடிய ஆடப்படும் கிறிஸ்தவக்கூத்து பாரம்பரியமொன்று யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்த கரையோரப் பகுதிகளில் நிலவியது. பாஷையூர், கரையூர், நாவாந்துறை, பறங்கித்தெரு, சுண்டுக்குளி, குருநகர், அராலி, மாதகல் ஆகிய இடங்களில் கிறிஸ்தவக் கூத்துக்கள் அதிகமாக ஆற்றுகை செய்யப்பட்டன.



பாஷையூர் பிரதேசமானது பாரம்பரியக் கலைகளின் தொன்மை வாய்ந்த இடமாகவும் கலை வாழ்கின்ற ஊர் என்னும் பெருமையைத் தாங்கி நிற்கின்ற பிரதேசமாகவும் காணப்படுகிறது. அதிலும் கிறிஸ்தவக் கூத்துக்கு பெயர்போன ஊராகக் காணப்படுகிறது. மதத்தைப் பரப்பும் நோக்கில் வெள்ளைக்கார சுவாமிகளால் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியம் பாஷையூர் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக ஒரு கிராமத்தில் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு வந்தாலும் கூத்துக்கள் ஊடாக மக்களுக்கு மறைக்கல்வி அளிக்கும் நோக்கமும் முக்கியமாகும். ஆரம்பத்தில் இந்த மண்ணில் இறைபணியாற்றிய மறைப்பணியாளர்கள் கூத்துக்களை மறைக்கல்வியளிப்பதற்கான ஊடகமாகப் பயன்படுத்தினார்கள். "குழந்தைகள், இளைஞர், வளர்ந்தோர் ஆகியோரை விசுவாசத்தில் வளர்ப்பதற்கான கல்வியாகவே மறைக்கல்வி விளங்குகின்றது. இத்தகைய கல்வி கிறிஸ்தவ கோட்பாட்டை மையமாகக் கொண்டுள்ளது" என அருளப்பர் சின்னப்பர், விசுவாசத்தின் புதிய விடியல் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ சரித்திரங்களை கதைகளாக்கி கூத்துக்களை ஆற்றுகை செய்தனர். புனித இராயப்பர், புனித அந்தோனியார், இயேசுநாதரின் 12 அப்போஸ்தலர்களின் கதைகள், புனித செயஸ்தியார், சந்தியோகுமையோர், கிறிஸ்தவ பாடுகள் சார் கதைகளை கொண்டமைந்தவையாகவே இப்பிரதேச கூத்துக்கள் காணப்படுகின்றன. கிறிஸ்தவக் கூத்துக்கள் என்னும் போது தென்மோடி சார்ந்தவையான கூத்துக்களே அதிகம் பாஷையூரில் ஆற்றுகை செய்யப்பட்டன. இவ்வூர் வடமோடிக் கூத்துக்கள் மட்டக்களப்புக் கூத்துக்களுடன் ஒப்பிடும் போது வித்தியாசமானவையாகவே காணப்படுகின்றன. வடமோடிக் கூத்துக்கள் ஜதியோடு சேர்ந்தவையாக காணப்படுவதுடன் கூத்து ஆற்றுகை செய்யும் கூத்தர்கள் பாடல் பாடமாட்டார்கள். ஆடுதல் என்னும் பண்பை மட்டும் கொண்டமைந்ததாகக் காணப்படுகிறது. பிற்பாட்டு பாடுவோர் என கூறப்படுகின்ற கலைஞர்கள் பாட கூத்தாற்றுகையாளர்கள் அதற்கு ஆடுவதாகவே வடமோடிக் கூத்துக்கள் காணப்படுகின்றன. ஆனால் தென்மோடிக் கூத்துக்களில் கூத்தாற்றுகையாளர்களே பாடியும் ஆடியும் ஆற்றுகை செய்வார்கள். கிறிஸ்தவக் கூத்துக்கள் என்னும் போது தென்மோடி கூத்துக்களே அதிகம் பாஷையூர் பிரதேசத்தில் ஆற்றுகை செய்யப்பட்டன.

## பாஷையூரில் ஆற்றுகை செய்யப்பட்ட கிறிஸ்தவக் கூத்துக்கள்

ஞானசௌந்தரி, கண்டியரசன், எஸ்தாக்கியர் போன்ற கிறிஸ்தவக் கூத்துக்கள் பாஷையூர் பகுதிகளில் அதிகம் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவை தவிர்ந்த செபஸ்தியார், கிறிஸ்தோப்பர், புனிதவதி, யூதகுமாரன், பூதத்தம்பி, இம்மனுவேல், வெடியரசன் போன்ற பல கூத்துக்கள் இங்கு ஆற்றுகை செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் இன்றும் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரித்திற்கு பெயர் பெற்று விளங்குகின்றமைக்கு முக்கிய காரணமாகத் திகழ்வது அவ்வூர் மக்கள் இக்கிறிஸ்தவக் கூத்து மரபை அழியவிடாது பாதுகாக்க மேற்கொள்கின்ற முயற்சிகளாகும். அதாவது பாஷையூரின் மிகவும் பிரசித்தமான கோயிலாக "பாஷையூர் புனித அந்தோனியார்" கோவில் காணப்படுகிறது. ஆரம்ப காலங்களில் அக் கோயிற் பெருநாள் ஆரம்பமாகி இறுதிநாள் கூடு சுற்றும் தினத்தன்று கூத்தானது கட்டாயம் ஆற்றுகை செய்யப்பட வேண்டும் என்ற ஒரு மரபு காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. கூடு சுற்றுவதென்பது கடவுளை ஊர்வலமாக ஆலய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவீதியில் கொண்டு வருவதாகும். ஆரம்ப காலத்தில் பல்லக்கு போன்ற வடிவத்திலே புனித அந்தோனியாரை வைத்து கூடு சுற்றும் நிகழ்வு இடம்பெற்றதால் கூத்தாற்றுகையை கோயில் முன்றலில் ஆற்றுகை செய்வதற்கு இலகுவாக இருந்தது. ஆனால் தற்பொழுது தேரில் சுற்றும் நிகழ்வு இடம்பெறுவதால் அதிக மக்கள் கலந்து கொள்வதாலும் அத்தினத்தன்று கோயில் முன்றலில் மேடை அமைத்தோ அல்லது கோயில் அரங்கில் ஆற்றுகை செய்வது கடினமாக காணப்பட்டது. அதனால் கூடு சுற்றிய மறுநாள் இக்கூத்தாற்றுகை நடைபெறுவது வழமையாகக் காணப்படுகிறது. இம் மரபே இன்றும் கிறிஸ்தவக் கூத்து பாரம்பரியம் அவ்வூரில் பேணப்பட்டு வருவதற்கு வழிகோலியது.

## பாஷையூர் பிரதேச கிறிஸ்தவக் கூத்துமரபின் அழகியல் அம்சங்கள்

ஆரம்ப காலங்களில் இப்பிரதேசத்தில் வட்டக் கொட்டகைகளில் தான் கிறிஸ்தவக் கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்பட்டன. இவ் வட்டக் கொட்டகைகள் ஓலைகளால் அமைந்தவையாகக் காணப்பட்டன. அதன் பின் ஒரு பக்கம் அடைத்து சதுர கொட்டகைகளிலும் தற்பொழுது படச்சட்ட மேடைகளிலும் இக்கூத்துக்கள் பாஷையூர் பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்றன. ஆரம்ப காலத்தில் தீப்பந்தங்களைப் பயன்படுத்தி ஒளியமைப்பைச் செய்தார்கள். அதன் பின் பெற்றோல்மெக்ஸ் பயன்படுத்தினார்கள். தற்பொழுது நவீன ஒளிவிளக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். கூத்தாற்றுகைக்குரிய நடிகர்களை தெரிவு செய்வதற்கு முன் அண்ணாவியார் அவர்களை ஏதாவது பாடல்களை பாடச்சொல்லி அதன் பின் அவர்களின் குரல்வளம் தோற்றம் என்பவற்றை கருத்தில் கொண்டு பாத்திரத்திற்கேற்ற ஆற்றுகையாளர்களை தெரிவு செய்வார். அவ்வாறு பாத்திரத் தெரிவு நடைபெறுவதை சட்டங்கொடுத்தல் எனக் கூறுவார்கள். அத்தினத்தன்று சிற்றுண்டி வகைகள் பரிமாற்றத்துடன் இந்நிகழ்வு நடைபெறும். அதன் பின்னர் நாளொன்று குறித்து அந்நாளில் இருந்து கூத்தானது பயிற்றுவிக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்படும் மரபு காணப்படுகிறது. கூத்து பயிற்றுவித்தலின் கடைசிநாள் பணக்கூத்து என்னும் மரபு காணப்பட்டது. ஒவ்வொரு பாத்திரமும் முதன் முதலில் தோன்றும் போது வெள்ளை வேட்டி ஒன்றினை விரிப்பார்கள். அதிலே அவர்களின் உறவினர்கள் தமது பெயர் எழுதிய உறை ஒன்றினுள் பணம் வைத்து அதிலே போடும் வழமை காணப்பட்டது. 20 வருடத்திற்கு பின்னர் இம்மரபு இல்லாது வழக்கொழிந்து அதன் தனித்தன்மையிலிருந்து விலகி அருகிவருவது கவலைக்குரிய விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூர் பிரதேசக் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியத்திலே தென்மோடிக்கூத்தில் அனைவரும் சதங்கை அணியும் மரபு காணப்படவில்லை. முக்கிய பாத்திரங்கள் மட்டுமே சதங்கை அணிவர். அதாவது "அரசன் சாம்புவன் போன்ற பாத்திரங்கள் சதங்கை அணிவார்கள். ஆனால் வடமோடிக் கூத்துக்களில் அனைவரும் சதங்கை அணியும் மரபு காணப்பட்டது.

அரங்கேற்றத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வேட உடை ஒப்பனைக் கலைஞர்களை சந்தித்து அக்கூத்தாற்றுகைக்குரிய வேட உடை ஒப்பனை தொடர்பான விடயங்களை கலந்தாலோசிப்பர். முன்பு ஒப்பனைக்கான வீதியில் காணப்பட்ட "மக்கி" என்னும் பொருளை எடுத்து வந்து அதனை அரித்து முகப் பூச்சுக்கு பயன்படுத்தினார்கள். ஆனால் தற்பொழுது நவீன ஒப்பனைப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இறுதியாக அரங்கேற்ற நிகழ்வு இடம்பெறும்.

இக்கிறிஸ்தவக் கூத்துக்களானது முன்னைய காலத்தில் மூன்று இரவுகள் தொடர்ச்சியாக ஆடப்பட்டன. அதன்பின்னர் ஒரு நாள் இரவு ஆடுவதாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது கால மாற்றங்களின் தாக்கங்களால் அக்கூத்துக்கள் இரண்டரை மணித்தியாலங்களாக மாற்றப்பட்டன. இக் கிறிஸ்தவக் கூத்து மரபானது அதன் பின்பு சிதைந்து போகாமலும் அதன் தன்மை மாறாமலும் ஆற்றுகை செய்யப்பட வேண்டியதுடன் ஆண்கள் மட்டும் கூத்தாற்றுகையில் ஈடுபட்ட காலம் போய் பெண்கள் கூத்தாற்றுகைகளில் பங்குபற்றுவது மட்டுமல்லாது பெண்கள் ஆண் பாத்திரம் ஏற்று நடிக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்ததாகவும் தமிழருக்கேயான அடையாளத்தை பிரதிபலிக்கும் கூத்து கலைமரபில் கிறிஸ்தவமத அடையாளத்தை பிரதிபலிக்கும் கூத்து கலைமரபில் கிறிஸ்தவமத அடையாளத்தை பிரதிபலிக்கும் கிறிஸ்தவக் கூத்து பாரம்பரியம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாஷையூர் பிரதேசக் கிறிஸ்தவக் கூத்துப் பார்பரியத்தின் சமகாலப் போக்கு

கட்டமைந்த காலனித்துவ சிந்தனைகளும் நுகர்வுப் பண்பாட்டு தாக்கங்களும் எம் முற்று முழுதான வாழ்க்கையில் பாரிய தாக்கத்தினையும் அதனோடு இணைந்த மாற்றத்தினையும் ஏற்படுத்தியேதான் சென்றுள்ளது. தம் உறவுகளோடு உறவுகளாக மனம் விட்டு பேசி, சிரித்து, அழுது, உரத்து கத்தி, சத்தம் போட்டு கத்தி, கொண்டாடி சந்தோசமாக வாழ்கின்ற வாழ்க்கையினை இழந்து கொண்டு செல்கின்ற இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஓர் ஊரையே ஒன்றிணைக்கும் சக்தியாக இக் கிறிஸ்தவக் கூத்துக்கள் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஷையூர் பிரதேசக் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியமானது அப்பிரதேசத்துக்குள் உள்ளடக்கப்பட்டதாகவே காணப்பட்டது. அதாவது அவ்வூரின் வழக்கப்படி பாஷையூர் பிரதேச மக்கள் அவ்வூரைச் சேர்ந்தவர்களைத் தான் திருமணம் செய்ய வேண்டும் என்னும் நிலை காணப்பட்டது. அவ்வாறில்லாமல் வேறு ஊரைச் சேர்ந்தவர்களைத் திருமணம் செய்தால் அவர்கள் அதன் பின் அவ்வூரில் இருந்து ஒதுக்கி வைக்கும் பண்பு காணப்பட்டது. அத்துடன் கிறிஸ்தவக் கூத்தினை ஆடுபவர்கள் அதில் பங்குகொள்பவர்கள் கட்டாயம் அவ்வூரைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். வேறு ஊரவர்கள் பங்குகொள்ள அவ்வூரவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற நிலையில் பாஷையூர் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியம் அவர்கள் ஊருக்குள் மட்டுப்படுத்தப் பட்டதாகவே காணப்பட்டது. ஆனால் தற்பொழுது அந்நிலைமை தளர்வடைந்து காணப்படுகின்றது.

கிறிஸ்தவக் கூத்து மரபினை நிலைநிறுத்த முற்பட்ட இச்சமூகத்தின் பாரம்பரிய கலைவடிவம் பிற்பட்ட காலங்களில் திருமறைக்கலாமன்றத்தினால் ஆற்றுகை செய்யப்பட்டன. அவ்வூர் கலைஞர்களும் திருமறைக்கலாமன்றத்துடன் இணைய ஆரம்பித்தனர். அன்றிலிருந்து தற்பொழுது வரை திருமறைக்கலாமன்றத்தில் கிறிஸ்தவக் கூத்தாற்றுகைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாரம்பரிய கிறிஸ்தவக் கூத்து மரபில் இரண்டு, மூன்று இரவுகள் தொடர்ந்து ஆடப்பட்டு அதன் பின்பு இரவிரவாகக் கூத்தாடும் மரபே காணப்பட்டது. கூத்துப் பனுவலும் அதற்கேற்ற விதத்திலே அமைக்கப்பட்டிருந்தது. அதாவது நீண்ட ஒரு பிரதியாகக் காணப்பட்டது. வட்டக் கொட்டகைகளில் கூத்தாடும் மரபுடன் வெள்ளுடுப்பு அரங்கேற்றம், பணக்கூத்து முறை, பீரங்கி வெடித்தல், தீப்பந்தம் பிடித்தல், திரை பிடித்தல், வீட்டுக்கு வீடு ஆடுதல் போன்ற மரபுகள் காணப்பட்டன. ஆனால் இன்றைய காலப்பகுதியில் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியமானது சுருக்கப்பட்டு இரண்டு, மூன்று மணித்தியாலக் கூத்துக்களாகவே ஆற்றுகை செய்யப்படுகின்றன. அதிலும் அவ்வூரில் பிரசித்தி பெற்ற பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் ஒன்று காணப்படுகின்றது. அவ் ஆலயத் திருவிழா பத்து நாட்கள் நடைபெறும். அவ் ஆலய திருவிழாவின் இறுதிநாள் கட்டாயம் கூத்து ஆற்றுகை செய்யப்பட வேண்டும் என்ற மரபு காணப்படுகிறது. இக்கூத்து மரபினை கோயிற் சடங்குடன் இணைத்து இன்றும் கூத்து மரபானது நிலைத்திருக்க வழிசெய்துள்ளதை குறிப்பிடத்தக்கதாக இருந்த போதிலும் அதன் ஆரம்பக் கால பாரம்பரியத் தன்மை வலுவிழந்த நிலையிலும் ஒரு நாள் மட்டும் ஆற்றுகை செய்யப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துப் பிரதியினைச் சுருக்கி அதில் ஆரம்பகாலத்தில் வட்டக்கொட்டகைகளில் ஆடப்பட்ட கூத்தினது பாரம்பரிய அரங்கினை மாற்றியமைத்து படச்சட்ட மேடையில் கிறிஸ்தவக் கூத்து ஆடப்படும் மரபே காணப்படுகின்றது. ஆடல்கள் விடுபட்ட நிலையில் பாடல்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு இன்றைய கால கிறிஸ்தவக் கூத்துக்கள் காணப்படுகின்றது. கூத்துப் பனுவல் என்பது முன்னோர்களான பெரும்புலவர்களின் அறிவு, மொழி, அவர்களின் ஆளுமைகளை கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றது. புலமை வாய்ந்த பெரும்புலவர்களால் எழுதப்பட்ட கூத்தின் பாரம்பரியத்தை சிதைவடையாமல் பதிப்பிக்கப்பட வேண்டும். பனுவலை சுருக்கிச் ஆற்றுகை செய்யும் போது அதன் பாரம்பரியத் தன்மை சிதையாமல் பாதுகாக்கப்படல் வேண்டும். ஒரு கூத்தானது அதன் பாரம்பரியத் தன்மையுடன் காணப்படுவதற்கு கூத்துப் பிரதியானது முக்கிய பங்கு வகிக்கிறது. சில கூத்துக்கள் அச்சுப்பதிப்பு பெற்றிருந்தாலும் அவற்றில் பெரும்பாலான பாரம்பரியமான கூத்துப் பிரதிகள் சிதைவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அதாவது கூத்துப் பிரதி சுருக்கப்பட்டு ஆடப்படும் போது அதன் மூலப்பிரதி காணப்படுகின்றமையினால் தமக்கு பொருத்தமான வாக்கியங்களை அதற்குள் சேர்த்து அக் கூத்தினை மாற்றியமைத்து ஆற்றுகை செய்கின்றனர். இதன்மூலம் இன்றைய நிலையில் பாஷையூர் கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியமானது ஆரம்பகால பாரம்பரியத் தன்மையில் இருந்து சற்று விடுபட்டதான மரபே காணப்படுகிறது.

பாரம்பரிய கூத்தரங்கானது அது சார்ந்த மக்களின் வாழ்தலுக்குரிய களமாக விளங்குகின்றது. அந்தவகையில் பாஷையூர் பிரதேசத்தில் கூத்துப் பாரம்பரியமானது கோவில் சார்ந்து அவர்களினுடைய சமூகத்திற்கே உரித்தான தன்மையில் ஆற்றுகை செய்யப்பட்ட நிலையில் யுத்த சூழ்நிலைகளின் காரணமாகவும், நவீனமயமாக்கப்பட்ட கல்வி முறைகளாலும் அதன் பிற்பட்ட காலங்களில் ஒரு பிரதேசத்திற்கே உரித்தான அச்சமூகத்தின் பாரம்பரிய கலைவடிவம் மாற்றம் பெற்று அவர்களினுடைய பாரம்பரியத் தன்மையில் வலுவிழந்து காணப்படுகின்றது. கூத்தினைப் பழக்குகின்ற அண்ணாவிமார்கள் சமூகத்தில் அக்கூத்தாற்றுகையினைப் பழக்கும் போது தமது வித்துவத்தினை தமக்கு ஏற்றாற் போல் வெளிப்படுத்தி கூத்தினைப் பழக்கி சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துமிக்கவராகவும் அவரினுடைய உழைப்புக்கு சமூகம் மதிப்பதாகவும் காணப்பட்டது.

ஊர்கூடி தலைமை தாங்கி ஊரோடு ஒன்றித்து செய்யப்படுகின்ற கூத்தாற்றுகையானது பாஷையூர் பிரதேசத்தின் பொதுவான இடமான பாசையூர் அந்தோனியார் ஆலயத்தினைப் பிரதானமாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்டது. அவ்வாலயத்திலேயே ஒத்திகையினை மேற்கொண்டு ஆற்றுகை செய்யும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலுள்ள அனைவரும் அதில் பங்குகொள்ளும் வாய்ப்பும், சமூக ஏற்றத்தாழ்வு என்ற மனப்பாங்கும் இல்லாமல் அதில் ஈடுபாடுள்ள அனைவரையும் உள்வாங்கி ஆற்றுகை செய்யும் சமூகக் கலையாகக் காணப்பட்டது. ஆனால் இன்று இவ் ஆற்றுகைகளில் பங்கு கொள்பவர்களின் விகிதம் குறைவடைந்து செல்லும் போக்கினையே காணக்கூடியதாக உள்ளது.

## முடிவுரை

தமிழர் பண்பாட்டு அடையாளங்களிலும் மாற்றங்கள் நிலவுகின்றமை தவிர்க்க முடியாத ஒன்றாகும். பாரம்பரிய அரங்கும் அதன் இருப்பைத் தக்க வைப்பதற்குப் பல வழிகளில் சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அந்தவகையிலே கூத்துக்கள் வழங்கும் அழகியல் திருப்தி கூத்துக்காக மக்களை இணைப்பதில் முக்கிய சக்தியாகச் செயற்படுகிறது. பல கிராமங்களில் கூத்துக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகக் காணப்படுவது கூத்துச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொருளாதாரச் செலவை ஈடுசெய்ய முடியாமை மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கூத்தாடுவதற்கு தடைவிதிப்பதுமாகும். இந்நிலையிலேயே பல கிராமங்களில் கூத்துச் செயற்பாடுகள் விடுபட்டுப் போனதற்கு அடிப்படையானதொரு காரணமாகும்.

சமூகம் ஒன்றுகூடி கொண்டாடி மகிழ்ந்த அச்சமூகத்தை இன்று வெறும் பார்வையாளர்களாக மட்டும் மாற்றியமைத்திருக்கிறது. சமூக ஊடாட்டம், ஒன்றிணைவு இல்லாமல் சமூகமயமாக்கலற்ற நிலையில் பார்வைக்குரியதொன்றாக தராதரங்களை மட்டும் மதிக்கும் தன்மையில் சமூகமயமான ஆற்றுகை இன்று வேரோடு கிள்ளியெறியப்பட்டதான நிலையில் நவீன சமூக வலைத்தளங்களின் பால் ஈர்க்கப்பட்டு இன்றைய தலைமுறையினர் வேறு திசை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது வேதனைக்குரிய விடயமே. இன்றைய சூழலில் சமூகத்தில் உயர்வு தாழ்வு, பெரியவர் சிறியவர் என்ற ஏற்றத்தாழ்வுடன் காணப்படுகின்ற நிலையில் ஒரு சமூகத்தினை ஒன்றிணையச் செய்யும் சமூகக் கலையான இக்கிறிஸ்தவக் கூத்துப் பாரம்பரியம் மீண்டும் சமூகமயப்பட வேண்டும். அனைவராலும் தமது பாரம்பரியமென மேலும் வளர்த்திட வித்திட வேண்டும். யுத்த கால சூழல் முடிவுற்று இன்றைக்கு பல ஆண்டுகள் கழிந்தும், பாரம்பரிய அரங்கக் காலனிய நீக்கக் கோட்பாடுகளின் பின்னரும் பாஷையூர் பிரதேச கிறீஸ்தவக்கூத்து பாரம்பரியமானது இன்று பாரம்பரியத் தன்மையில் இருந்து விடுபட்டதாகவும் காணப்பட்ட சூழ்நிலையில் மீண்டும் சமூக அரசாங்கக் கிறிஸ்தவக் கூத்தினை முன்னெடுக்கின்ற அவசியம் இன்று வலியுறுத்தப்படுவதுடன் அதனைச் சமூக உடைமையாகக் கொண்டு செல்வதற்கான எத்தனங்களில் ஈடுபடவேண்டியுள்ளமை அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணைகள்

### நூல்கள்

1) அகஸ்தியார். எஸ். 1989, நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப்பு, யாழ்ப்பாணம்.

2) சிவத்தம்பி கார்த்திகேசு, 1978, ஈழத்துத் தமிழ் நாடகங்கள் வகைகளும் வளர்ச்சியும், ஈழத்துத் தமிழ் இலக்கியம், தமிழ் புத்தகாலயம், சென்னை.

3) தியோகுப்பிள்ளை வ. 1994, ஈழத்துக் கத்தோலிக்க இலக்கியங்கள், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.

4) சிங்கராயர். மு. 2009, பாஷையூரும் நாட்டுக்கூத்தும், பாஷையூர் அபிவிருத்திக்குழு, பிரான்ஸ் வெளியீடு

### மலர்கள்

1) ஆற்றுகை, 1994 - 2004, நாடகமும் அரங்கியலுக்குமான இதழ்கள், திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.

2) நீ. மரியசேவியர் அடிகளாரின் அகவை அறுபதின் சிறப்பு மலர், 1999, திருமறைக்கலாமன்றம், யாழ்ப்பாணம்.

3) தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளார் நினைவு விழாச் சிறப்பு மலர், 1981, மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணம்.

4) மரியசேவியர். நீ. 1994, சைவப்புலவரின் கிறிஸ்தவக் கூத்து, தமிழ் கலைவிழா சிறப்பு மலர், இந்துசமய கலாசார அலவல்கள் திணைக்களம், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு, கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




### தலைமையகம்

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 399 480

### கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரடியால் உலகளந்த வள்ளுவனின் திருக்குறள் காட்டி நிற்கின்ற வள்ளுவ வாழ்வியல் நெறிகள்





**செல்வி. சயூரி அகிலன்**

**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**திருக்குறள் கட்டுரைப் போட்டி மேற்பிரிவு**
**முதலாம் இடம்**

## வள்ளுவனின் வாழ்வியல் நெறியில்......

## நம் வாழ்க்கை வளம் பெற



இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி மட்டுமல்ல எதிர்கால வாழ்க்கை எனும் அரிய பொக்கிஷத்தை ஏணிப்படியில் ஏற்றி வைக்கும் ஏடுகள். இலக்கியத்தைப் படைத்தவன் இறந்து போகலாம். இலக்கியங்களை படைத்தவர்களின் உயிரும் உடல் மாறிப் பயணிக்கலாம். ஆனால் இலக்கியங்கள் இறவாவரம் என்கின்ற சாகாவரம் பெற்றவை. இலக்கியங்கள் எம்மை எமது இலட்சியத்தினை நோக்கி, இலக்கினை நோக்கி நகர்த்திச் செல்பவை. அந்தவகையிலே வள்ளுவன் எமக்குத் தந்தது வானத்தின் அமிர்தம். அவ் அமிர்தத்தின் சில துளிகளைச் சிற்றறிவுடன் உங்களிற்கு தருகிறேன்.

**கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு**
**முன்தோன்றிய மூத்த குடி நம் தமிழ்க்குடி”**

என்பது வரலாற்றுப் பதிவு. இத்தகைய வரலாற்றுப் பதிவைத் தன்னகத்தே புதைத்து, தமிழையும் தமிழ் இனத்தையும் தரணியிலே தலைநிமிர வாழவைத்து தமிழகத்தின் அரும்புதல்வன் வள்ளுவன் இயற்றித் தந்த திருக்குறள் பெட்டகம். ஆம், மாணிடர்களே! சற்றுச் சிந்தித்துப் பாருங்களேன்! திருக்குறள் எனும் பொய்யா மொழி தோன்றிய காலத்திலே அச்சுக்கூடங்கள் அறவே இல்லை. எழுதுதாள்களோ, எழுது பொருட்களோ கூட இல்லை. கடதாசியைக் கூட யாரும் கண்ணால் பார்த்ததும் இல்லை. அப்படியென்றால் வள்ளுவம்? ஆம் ஓலைச்சுவடிகளை துணைக் கொண்டு எழுதுகோல்களின் துணையில்லாது எழுத்தாணி கொண்டு உருவானதாகவே சிறப்பிக்கப்படுகின்றது. முப்பால் கொண்டமைந்த அறநூல் திருக்குறள். இதனாலேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவம் இன்றும் தலைநிமிர்ந்து தம் அரிய வாழ்வியல் நெறிகளை எமக்கு பகர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த வகையிலே வள்ளுவமானது மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று அறுதியும் உறுதியும் இறுதியுமாகக் கூறி நிற்கின்றது. அந்தவகையிலே வாழ்க்கைக்குத் தேவையான வழிவகைகளைத் தேர்ந்து, மானிடர்களிற்கு எடுத்துரைக்கும் வாழ்வியல் நெறியாகவும் விளங்குகின்றது.

அறத்தின் வழி நடந்தால் துன்பமில்லை. அறத்தின் வழி மறந்து நடந்தால் இன்பமில்லை. அறம் என்பது அனைத்து உயிர்களிற்கும் குறிக்கோளாய் அமைந்து விட்டால் அகிலமே அல்லலில் இருந்து அகலும். அறத்தை நீங்கள் போற்றுங்கள் அகிலமே உங்களைப் போற்றும் என்கின்றார் பொய்யாமொழிப் புலவர். அறத்தின் பால் நீங்கள் நடவுங்கள். அன்பினால் எல்லா உயிர்களும் உங்கள் பின்னால் வரும். அல்லாத வழியில் நீங்கள் நடந்தால் துன்பங்களே உங்களைத் தொடரும். அறவழிப்பாதை ஒன்றும் மலர்களால் நிரப்பப்பட்ட மலர்ப்பாதை அல்ல.

அங்கே முட்களும் கற்களும் கூட உங்கள் வருகைக்காய் காத்திருக்கும். அந்தப் பாதைகளை எல்லாம் சவால்களை எல்லாம் தாண்டிப் பயணியுங்கள். நீங்கள் நிச்சயம் வெற்றியின் சிகரத்தை விரைவில் தொடலாம். அறத்துப்பால் அறன் வலியுறுத்தல்,

**"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல"**

என்கிறார். ஆகவே அறம் என்பது வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகளில் ஒன்று. அறத்தைப் பேணுவதனூடாக உங்கள் வாழ்க்கையைச் சிறப்பானதாய் மாற்றிடுங்கள்.

இன்று உலகெல்லாம் பகலவனின் வெம்மையால் பரிதவித்துக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமா? இல்லை. அன்பு எனும் ஆணிவேரின்றி அல்லாடிக் கொண்டும் இருக்கின்றது. அன்பில்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போலத்தான். கடன் கொடுக்க வேண்டுமா? அன்பை அள்ளிக் கொடுங்கள். கடன் வாங்க வேண்டுமா? உங்களை மூழ்கடிக்கும் அளவிற்கு அன்பை வாங்கிக் கொள்ளுங்கள். அன்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வீர்களாயின் பாலைவனமும் பஞ்சுமெத்தையாகவும் பசுஞ்சோலையாகவும் மாறும் அன்பில்லையா? பஞ்சுமெத்தை கூட சுடுகாட்டுச் சாம்பலே. இதனையே ஈரடியால் உலகளந்த இறையும்,

**"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரம் தளிர்த் தற்று"**

என்கின்றார். வாழ்க்கைக்கு உயிரூட்ட அன்பை ஆதாரமாக்கிக் கொள்ளுங்கள். வாழும் காலம் வசந்தமாகும். அன்புக்கடலில் மூழ்கி இறந்து போங்கள். சொர்க்கமே உங்களைக் கொண்டாடும். ஆம் மானிடர்களே! அன்பு, என்பதும் வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகளிலே ஒன்று. தாழிட்டு அடைத்திடும் பொருளல்லவாம் அன்பு. ஆகவே அன்பை என்றும் பரப்பிடுங்கள். வாழ்வை பூஞ்சோலை ஆக்கிடுங்கள்.

தட்டுக்களாலான தரணியிலே தட்டுப்பாடுகள் தான் அதிகம். அந்தவகையில் மனிதர்களிடத்தே கட்டுப்பாடும் காலாவதியாகிக் கொண்டு வருகின்றது. கட்டுப்பாடு இல்லா வாழ்க்கையோ **"காட்டாற்று வெள்ளம் போல"**

ஆகவே வாழ்க்கை கரைகளையும் உடைத்துப் பீறிட்டு பாயும். ஏன்! உங்களை கண்ணீரிலும் ஆழ்த்தும். ஆம்! இன்றைய மனிதர்கள் மறந்து போன வார்த்தைகளில் ஒன்று அடக்கம். அடக்கத்தை அடக்கம் செய்து மயானத்திற்கு அனுப்பிவிட்டு அகங்காரத்தோடு அலைகின்றான். மனிதன் விஞ்ஞானமானது விண்வெளி வரை தன் வேரை ஊன்றி கிளைகளைப் பரப்பி நிற்கின்றது. ஆனால் மனிதர்களிடத்தே நல்மனிதம் என்கின்ற விதையை விதைக்க ஏனோ தவறிவிட்டது. அடக்கத்துடன் வாழ்ந்தால் அமரருலகமும் போற்றும். அடக்கமின்மை அறியாமை எனும் இருளிலே உங்களைத் தள்ளிவிடும் என்கின்றார், நற்றேன் தந்த வள்ளுவர்.

**"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**

**ஆரிருள் உய்த்துவிடும்"**

என்று தன் குறளால் சான்றும் பகருகின்றார். அடக்கமும் வள்ளுவரின் வாழ்வியல் நெறியே. அடக்கம் உடையவர்களை அறிவிலி எனும் தப்புக்கணக்கு போட்டுவிடாது இனியாவது வள்ளுவநெறியில் அடக்கத்துடன் வாழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் என்பது உலகத்திற்கே பொது விரதம். ஒழுக்கத்தைப் பேணுபவன் ஆகாயத்தின் வழி சொல்வான். ஒழுக்கத்தை கொண்டிராதவனோ, இருளுக்குள்ளே தன் இருப்பைக் கொண்டிருப்பான். மதங்கள் என்ற பாகுபாடு, பேதம் இந்தப் பொது மதத்திற்கு மட்டுமே இல்லை. ஒழுக்கம் என்பது மிருகங்களிடத்தே கூட எங்கோ ஓர் மூலையில் ஒளிந்து கொண்டு தான் இருக்கும். ஆனால் மனிதன் மட்டுமே ஒழுக்கம் என்பதை மறந்துவிட்டான். மறந்தது மட்டுமா? மிருகங்களும் தோற்றுப் போகும் மிருகமாய் மாறி விட்டான். ஒழுக்கத்தின் படி நடவுங்கள், அது உங்களை என்றென்றும் காக்கும் என்று எத்தனையோ நூற்றாண்டுகளிற்கு முன்னே பகர்ந்து சென்றுவிட்டான். ஈரடிக்கதிரால் உலகைக் காத்த பகலவன். அப்பகலவன் தந்த பொக்கிஷ வார்த்தை இது.

**"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை – இழுக்கத்தின்**

**எய்துவர் எய்தாப் பழி"**

ஆம்... ஒழுக்கம் பேணி வள்ளுவநெறி தன்னில் உயர்ந்து வாழ்வோம்.

புகழ் என்பது ஒவ்வோர் மனிதனும் தங்களது முடியிலே பதிக்க நினைக்கும் மரகதம். புகழோடு வாழ்பவனையே இவ்வுலகம் போற்றும். இப் பூமியிலே ஜனனிக்கின்ற ஒவ்வொரு மனிதனும் பூலோகம் விட்டு புறப்பட முன்னர் அணிய வேண்டிய மற்றோருயிரே புகழாகின்றது. வாழும் காலத்தில் புகழோடு வாழ்பவனே இறந்த பின்னும் மக்கள் மனங்களிலே வாழ்வான். அவனை மரணம் தொட்டாலும், மக்கள் மனங்களில் மரணிக்காது வாழ்வான். இசையோடு வாழ்வீர்களாயின் உலகமும் உங்களை இசைக்கும் வசைகளோடு வாழ்வீர்களாயின் வசைகளே உங்களைத் தொடரும். மறைதந்த வள்ளுவரும்,

**"வசையொடு வாழாதவரே வாழ்வர் – இசையொடு**

**வாழ்வரே வாழ்வர்"**

என்று தன் குறளால் சான்றும் பகருகின்றார். ஆகவே இன்சொல் பேசுதல் கூட வள்ளுவர் கூறும் வாழ்வியல் நெறியிலே முக்கியமானதே. இன்சொல் பேசி புகழுடன் வையத்துள் வாழ்வீராக!

மனித வாழ்க்கையோ நீர்க்குமிழி போன்றதாகும். உடல் என்பது ஐம்பூதங்களின் சேர்க்கை. சேர்க்கை என்பது என்றோ ஒரு நாள் தன் இருப்பிடம் போய்ச் சேரும். உயிரென்பது வண்டினைப் போல. வண்டானது மலர்களை நாடித் தேன் அருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வது போல, உயிரும் பல உடல்களை நாடிச் செல்லும். அந்தரத்தில் சுழல்கின்ற இந்த உலகத்திலே உங்கள் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய் மாற்றிடுங்கள். பொய்யாமொழியின் வாய்மொழி பொய்யாகிவிடுமா? வள்ளுவநெறியில் வாழ்ந்து பாருங்கள். காலன் உங்கள் வாழ்க்கையைக் களவாடிச் செல்ல முன் புன்னகைக்கத் தவறி விடாதீர்கள்! வாழ்க்கையின் துன்பங்களை கொஞ்சம் ஒதுக்கி வையுங்கள். கண்ணீர்த் துளிகளிற்கு சற்றே விடை கொடுங்கள். வசந்தத்தின் வழியில் வாழ்வைக் கொண்டு செல்லுங்கள். இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

**"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையேல்**

**பெருமை உடைத்தது இவ்வுலகு"**

என்று கூறி இருக்கின்றார். நிலையற்று இருக்கின்ற இவ்வாழ்க்கையை நிலையானதாய் மாற்றிடும் வழிவகைகளை வள்ளுவம் செப்பி நிற்கின்றது. அதன் படி வாழ்ந்திடுங்கள். நிச்சயம் உங்கள் வாழ்வு சிறக்கும்.

வாய்மை என்பதாலும் மனித வாழ்வு உயர்நிலை அடைகின்றது. வாயினாலும், மனத்தினாலும் மற்றவர்களிற்கு கேடு பயக்காத வகையில் உண்மையைக் கூறிடுங்கள். வள்ளுவர் கூறி இருப்பது தன்னலம் கருதாது பிறர்நலத்திற்காய் கூறும் பொய் கூட உண்மை தானாம். வாய்மை என்பது நிச்சயமாக மனிதனை ஈடேற்றும் ஒரு கருவியே. உதாரணமாய்

**"வாய்மை எனப்படுவது யாது ஒன்றெனின்**

**யாதொன்றும் தீமை பயக்காதன சொலல்"**

என்ற குறள் நமக்கு வாய்மையின் மகத்துவத்தை வெள்ளிடைமலை போல காட்டி நிற்கின்றது. ஏன்? அரிச்சந்திர மகாராஜாவின் கதையை சற்றே மீட்டிப் பாருங்கள்! சத்தியத்தை தனது வாழ்வின் இலட்சியமாய் கொண்டதினூடாக அழியாப்புகழ் பெற்றவன். இதனையே வீரகவிராசரும்

**"பதியிழந்தனம் பாலனையிழந்தனம் படைத்த நிதியிழந்தனம்**

**இனித் தனக்கென இருக்குங் கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்"**

என வாய்மையின் தார்ப்பரியத்தை நமக்கெல்லாம் உணர்த்தி நிற்கின்றார். ஆகவே வள்ளுவநெறியில் வாய்மை பேணி உயர்வாழ்வு அடைந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது தற்காலத்திலே விஞ்ஞானம் பரப்பிவிட்ட கிளைகளில் ஒன்று. அறிவு என்பது வள்ளுவன் காட்டும் வாழ்வியல் நெறிகளுள் ஒன்றும், எம் எல்லோரிடமும் காணப்படும் அறிவார்ந்த பொக்கிஷமும் ஆகும். இந்த கல்வியையே

**"கேடில் விழுச்செல்வம் கல்வி"**

என்று புகழ்கின்றார்கள். அது மட்டுமா? இல்லை. கல்வியானது கற்க கற்கப் பெருகிக் கொண்டே செல்லும், இதனையே ஈரடியால் உலகளந்த தெய்வப்புலவரும்

**"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத்தூறும் அறிவு"**

என்கிறார் தம் குறள் வாயிலாக. கல்வியானது ஒரு தடவை கற்றுவிட்டால் ஏழேழு பிறவியிலும் உங்களிற்குக் கைகொடுக்கும் என இலட்சியத்தின் வழியைக் காட்டுவதாய் கல்வியின் மகத்துவத்தை வள்ளுவம் செப்பி நிற்கின்றது. இவ்வாறு வாழ்வியல் நெறிகளுள் ஒன்றான கல்வியை வள்ளுவ நெறியிலே பயின்று பயன் பெறுவோமாக!

அடுத்து வள்ளுவம் ஜாதி, மத, இன பேதங்களை எல்லாம் கடந்து, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடுகளை எல்லாம் தகர்த்தெறிந்து தனி வழியில் தலைநிமிர்ந்து நிற்கின்றது. இதனால்தான் தமிழர்களிடத்தில் மட்டுமல்லாது உலகத்திற்கே பொதுமறையாய் மாறி நிற்கின்றது. வள்ளுவநெறியில் ஜாதி, மத, இன பேதங்களைத் தகர்த்தெறிந்து விடுங்கள். நிச்சயமாக தனிமனிதனை, சமுதாயத்தை, நாட்டினை நல்லதோர் வழியில் கொண்டு சென்றிட வள்ளுவநெறி எக்காலமும் கைகொடுத்திடும்.

வள்ளுவ நெறியின் மகத்துவம் அறிந்ததினால் தான், பாரதியாரும்

**"வள்ளுவன் தன்னை உலகினிற்கு தந்து**
**வான்புகழ் பெற்ற தமிழ்நாடு"**

என வள்ளுவனின் சிறப்பைப் பாடுகின்றார். தமிழ் இனத்தை மட்டுமா? தமிழை மட்டுமா? வள்ளுவம் தலைநிமிரச் செய்தது. நிச்சயமாக இல்லை. இத்தரணியையே நல்வழியில் நடத்திட வள்ளுவம் புரியும் முயற்சிகள் தான் எண்ணிலடங்கா. வள்ளுவன் மறைந்து விட்டான், ஆனால் அவன் கூறிய பொக்கிஷ வார்த்தைகளோ இன்றும் எம் தரணியை தலைநிமிர வாழவைத்துக் கொண்டிருக்கின்றது. இன்றைய மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ ஏவுகணைகளை வீசுகின்றான். ஆனால் வள்ளுவனோ தன் ஓலைச்சுவடியால் பல்லாயிரம் வருடங்களிற்கு முன்னே ஏவுகணைகளை மக்கள் மனதிலே ஏவிவிட்டார். இதனையே ஒளவைப் பிராட்டியும்,

**"அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டி**

**குறுகத் தறித்த குறள்"**

என வள்ளுவத்தை சிறப்பித்து நிற்கின்றார். இத்தகைய பெருமைகள் நிரம்பப் பெற்றது வள்ளுவரின் உலகப் பொதுமறை. விஞ்ஞானமானது தன் கிளைகளைப் பரப்பி மானிடனை காந்தத்தால் இழுத்து தன்னோடு ஒட்டி வைத்திருக்கின்ற இக்காலத்திலே வள்ளுவநெறிகளை மானிடர்கள் கடைப்பிடித்தொழுக வழிசெய்வோம் என திடசங்கற்பம் பூண்டிடுவோம்.

முடிவாய், இவை யாவும் வள்ளுவக் கடலில் நான் சுவைத்த சில சுவைகளே வள்ளுவ நெறியில் வாழ்ந்திடுங்கள்; வள்ளுவத்தை போற்றிடுங்கள்; ருசித்துப் பாருங்கள்; உயிர் மூச்சாக்கிடுங்கள், வீழ்ந்த பின்பும் இறந்த பின்னும் வாழலாம். மரணம் என்பது வாழ்க்கையின் முடிவு; வாழ்க்கைச் சிறுகதைக்கு இறைவன் வைத்த முற்றுப்புள்ளி. ஆகவே வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய் மாற்றிய வள்ளுவ நெறியில் வாழ்ந்து சாதனை படைத்திடுவீர்.

**"வள்ளுவம் பேணி உயர்ந்திட நாளும் வள்ளுவம் பயின்றிடுவோம்"**

**வள்ளுவமே எந்தன் உயிர் மூச்சு! வள்ளுவ நெறியே எந்தன் நெறி!**

## பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்கள் - 2022

**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்)**

1) ***கீதவாஹினி இசைக்கல்லூரி - கொழும்புத்துறை***
2) ***வீணாவிஹார் - யாழ்ப்பாணம்***
3) ***கிழவன்காடு கலைமன்றம் (யாழ் கிளை) - யாழ்ப்பாணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையோடு இணைந்த வாழ்வு





நடனத்திலகம் ஸ்ரீமதி வசந்தி குஞ்சிதபாதம்
நடன ஆசிரியை (ஓய்வுநிலை)
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



இக்கட்டுரையை இறைவனுக்கும் என் குருமார்க்கும் சமர்ப்பணமாக நன்றியையும் வணக்கத்தையும் செலுத்தி எழுதத் தொடங்குகிறேன். கலை என்ற சொல் அழகின் செறிவு, கருத்தின் பதிவு, கவர்ச்சியின் நிறைவு, மகிழ்ச்சியின் உறைவிடம், பண்பாட்டின் சிகரம், வளர்ந்த நாகரீகத்தின் சின்னம் ஆகும்.

கடவுள் எங்கும் பரவி என்றும் விளங்குவது போல் கலையும் எங்கும் பரவி என்றும் விளங்கத்தான் செய்கிறது. ஆனாலும் கடவுள் அன்பர்கள் மனதில் அவர் அவர்களுடைய பரிபக்குவ நிலைக்கேற்ப விரவி வெளிவிடுவது போல கலையும் இயற்கையில் இறைவன் கலந்துள்ள நிலையை எல்லாப் புலன்களுக்கும் இன்பமூட்டுதலை உற்றறிந்து உணர்ந்த கலைஞன் அனுபவங்களைத் திரட்டி மிகையாமலும், குறையாமலும் கை வழியாகவும் வாய் வழியாகவும், உரையாகவும், உருவாகவும் அளவாக வார்த்துக் கொடுக்கின்ற போது வெளிப்படுகின்றது. சர்க்கரையில் இனிப்பு என்றும் இருக்கிறது. அது அறிகின்றவனின் நாவைச் சார்ந்து புலனாகிறது போலத் தான் வெளிப்படுகின்றது. அதுபோலவே கலையும் இயற்கையை எண்ணி எண்ணி வளர்க்கப் பெற்ற பொருளினிடம் நிரம்பியிருப்பினும் அப்பொருள் உணர்பவன் உணர்ச்சியிலும் ஒன்றி கலைஞன் கருத்தை கருவி நிற்கின்ற போதுதான் வெளிப்படுகிறது. ஆகையால் கலையின் இருப்பிடம் இயற்கை. அது செயற்கையாக உருக்கொள்ளும் போது நிறைவேறுகிறது. காண்பவர் கண்ணையும், கருத்தையும் கவருகிறது. இவ்வண்ணம் உருவு, நிறைவு, உணர்வு என்ற முத்திறத்தாலும் கலையை அளந்து எல்லையில்லாத இன்பத்தை எய்துகிறோம் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை உருவாகும் போது கலங்கிய உள்ளத்தில் களிப்பு எழுவதில்லை. கலையோ களிப்பின் திரட்சி. ஆகவே நாட்டிலும் வீட்டிலும் நல்ல அமைதியினை சூழ்நிலை அமைகின்ற போது தான் கலை உருவாகிறது. அப்படியானால் கலையை ஒருவகை பொழுது போக்கு என்று சொல்லி விடமுடியுமா? கூடவே வயிறு பசிக்காமல் உண்டு உலாவி வருகின்றவனுக்கு ஏதோ ஒரு வகையான வேற்றுப்பசி விளையத்தான் செய்கிறது. பசியில்லாத வாழ்வு பாழ். ஆதலால் வயிற்றுப்பசி உண்டாகிறது. அவனது அன்றாட தேவைகள் குறைய அப்பசி மிக கொழுத்துகிறது. அந்த அறிவுப் பசிக்கு அருமருந்தாக அமைவது கலை. ஆதலால் இதுவும் குறையின்றி நிறைவேயாகிறது.




உலகம் கலையில் மூழ்கிக் கிடக்கிறது. எடுத்ததற்கெல்லாம் கலைப்பண்பு, கலைக்கவின் என்றெல்லாம் மூச்சுவிடாமல் பேசுகிறது. ஆனால் "இதுதான் கலை" என்று கலையைப் பற்றி ஒரு வரையறையான பண்பை உலகத்தால் உணர்ந்து கொள்ள முடிகிறதா? அங்ஙனமாயின் அதன் பயனை எங்ஙனம் அளவிட்டு அறிய இயலும். ஆனாலும் கலைஞன் கலையையும் சிற்பி சிலையையும் வடிக்கிறான் என்று எண்ணும் போது ஏதோ தம் உள்ளம் நிறைந்த கருத்தை எல்லாம் உள்ளத்தில் குடியேற வைத்து எல்லோரையும் மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கத்தால் ஆகலாம் என்று கருத வேண்டியிருக்கிறது.

இத்தகைய சிற்பக் கலையில் செந்தமிழ் நாட்டிற்கு தனிப்பாங்குண்டு. சிற்பியின் சிந்தனை கண்டதை காட்டுவதிலே மட்டும் அமைவதில்லை. காணாத கருத்துக்களையும் ஏன் காணமுடியாத கடவுளின் தன்மைகளைக் கூட தன் கைவண்ணத்தால் கல்லிலும், மண்ணிலும், செப்பினாலும் காட்டியுள்ளார். அவர் ஆக்கிய சிற்பத்தில் மட்டுமா பார்க்கிறோம்? எத்தனையோ சுவை நிரம்பிய பாவங்களைக் காண்கிறோம். அலைகளையும் கடந்துள்ள கருத்து அமைதியையும் கடவுளின் அருள் தன்மையையும் உணருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜ மூர்த்தியின் நிலை, தெளிவு, கால்வைப்பு, இடுப்பு, முதுகு, விலா, கை இவற்றின் அமைப்பு கண்பார்வை விசேடம் எல்லாவற்றிலும் எல்லாக் கலைகளும் சேர்ந்த சிற்பக் கலை பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆதலால் சிற்ப கலையின் சிகரமாக விளங்கும் நடராஜ உருவில் நாம் காணுவது வெறும் சிற்பக்கலை மட்டுமல்ல, இசைக்கலை, நாட்டியக்கலை, விஞ்ஞானக்கலை, மெஞ்ஞானக்கலை அனைத்தையும் காண்கிறோம். இதனாலும் பெருமான் என்னென்ன கலைகளையும் கலைகளாக கடந்து விளங்கும் கலா அதீத பழம் பொருளாகவும் இருக்கிறார் என்பதை உணரலாம். நடராஜ பெருமான் உருவை கலை உணர்ச்சியாகிய புற உணர்ச்சி ஒன்றிற்காகவே அனுபவிக்க நேரினும் எத்தகைய கலைகளையும் அனுபவிக்கலாம். ஆனால் அவர் திருவுருவத்தில் மிகத் தோன்றுவது நாட்டியக் கலையேயாகும்.

அறிவியலின் பாற்பட்ட அறிவையும் கலையின் பார்ப்பட்ட உணர்ச்சியையும் மனிதன் ஒழுங்கான நிலையில் வளர்த்து வாழ வேண்டியது முறையாகும். அதன் பொருட்டே நம் முன்னோர் அழகினை திருமகள் எனவும் அறிவினை கலைமகள் எனவும் கொண்டு போற்றி வாழ்ந்தனர். நம் திருமகள் கலைமகள் வழிபாட்டின் நோக்கம் அழகுணர்ச்சியையும், அறிவையும் வளர்த்துக் கொள்வதேயாகும். அமரகவி பாரதியார் வெள்ளை கலை உடுத்து வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலைமகள் என்று கலைத் தெய்வத்தை போற்றுவது மிகவும் நயம் உடையதாகும். கவின் கலைகள், பயன் கலைகள் ஆகிய இருவகை கலைகளின் வடிவமாக நாமகள் கலைமகள் விளங்குகின்றார் என்ற உண்மையை பாரதியார் நன்கு உணர்த்துகிறார். கலைமகள் பல இடங்களையும் உறைவிடமாகக் கொண்டு எழில் மிக கொலுவிருக்கிறாள். சென்சொற் கவிபாடும் கருத்திலும் ஞான ஒளி உறைவோர் தவத்திலும் உள்ளொளி பெருக்கி ஒளி நெறி காட்டும் உயரிய மறையிலும் குழந்தை பேசும் மழலை மொழியிலும் மாதர் இசைக்கும் மதுரகானத்திலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், கொஞ்சும் மொழி பேசும் கிளியின் நாவிலும் மாடங்களை அணி செய்யும் கலைஞர் ஓவியங்களிலும் ஆலயங்களில் பொழிவுறும் அற்புத சிற்பங்களிலும், செம்மலர் கரத்தில் இன்னிசை வீணை ஏந்திய கலைத் தெய்வம் இனிதே வீற்றிருக்கிறார்.



கலைஞர் எனப்படுவோர் கலை உணர்ச்சி மிக்கவராவார். அழியாத செல்வங்களை உலகிற்கு படைத்தளித்து நிலையான புகழ் பெற்று உவப்படைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுக்கலைகளைப் படைத்தளிக்கும் கலைஞர்கள் மிகவும் உணர்ச்சி வேகம் உடையவராக இருப்பின் அவர்கள் புலன்கள் சூழ்நிலையில் உண்டாகும் சிறு மாறுதல்களும் பெரிதும் கவரப்பட்டவையாகும். கலைஞரின் சூழ்நிலையில் உண்டாகும் அமைதியிருப்பதை அவர் வாழ்வின் அறிகுறியாக இருக்கும் அத்தகைய அமைதியான சூழ்நிலை மாறுபடும் போது அதாவது அவரது குடும்பத்தில் அல்லது சுற்றுப்புற உறவில் அவரது விருப்பு வெறுப்பு தூண்டக்கூடிய அளவு ஏதேனும் நிகழ்ந்து விட்டால் அவரது உண்மை குலைந்து விடும். உணர்ச்சியும் வேகமும் சில பூசலும் அவருக்கு மனதுக்கு போராட்டமாக தோன்றும். இந்நிலையில் வேகம் கொண்ட அவரது உணர்ச்சிகள் அப்போராட்டத்தின் பின் அமைதி கொள்ளும் கால் அந்த அமைதியில் கலை உருக்கொள்ளும் அவரது உணர்ச்சியின் வேகமெல்லாம் கலையின் வடிவமாக கவின் பெறும்.

நாட்டியக் கலையானது நம் வாழ்வோடு இணைந்துள்ளது. துன்பம், இன்பம், தாகம், சோகம் இவற்றை அனுபவிக்கின்ற போது மனிதன் தன்னை மறந்து அவ் அனுபவங்களை கை கால் அசைப்பதும், ஓசையாலும் பிறருக்கு புலப்படுத்த தொடங்குகிறான், குதிக்கிறான், ஆடுகின்றான், இந்நிலை பிறர் அபிநயத்துக்கு காட்டும் போது கூத்தாக மாறுகிறது என எமது வரலாறு கூறுகின்றது.



எம் வாழ்க்கையில் கைவழி கண், கண்வழி மனம், மனமுடன் உணர்வு என்று நட்புக்கிரமம் சொல்கிறது. என் அனுபவத்தில் நான் கண்ட சம்பவங்களை இவ்விடம் கூறுகின்றேன்.

அன்றொரு நாள் என் சிநேகிதி வீட்டிற்கு செல்வதற்கு பஸ்தரிப்பில் நின்ற போது அவ்விடம் வந்த பிச்சைக்காரன் "அம்மா தாயே" என இரு கைகளை ஏந்திய வண்ணம் நின்றான். அந்த கை எமது நாட்டிய சாஸ்திரத்தில் சம்யுத ஹஸ்தமான புஸ்புட முத்திரை. அதன் பின்பு பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன். தெருவைக் கடக்கும் மனிதன் இருபக்கமும் பார்த்து கடப்பது திருஷ்டி பேதமான கண் அசைவும் சிரோ பேதமான தலை அசைவையும் கண்டேன். பஸ் நகரும் போது சந்தியில் நிற்கும் பொலிஸ் உத்தியோகத்தர் வாகனங்களை கட்டுப்படுத்தும் போது அழகாக பதாக முத்திரை, அர்த்த சந்திர முத்திரைகளையும் காட்டி அசைப்பதை அவதானித்தேன். வழியில் மாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் சிலையில் கருணை வடிவமான முகத்தில் சாந்தமும் அஞ்சல ஹஸ்த முத்திரையும் கையிலும் அவ்வளவு அழகான திருவுருவ சிலையை கண்டேன். சிநேகிதி வீட்டை சென்றடைந்து அவளின் வீட்டில் சிறிது நேரம் இருந்து விட்டு இருவருமாக முருகன் கோவிலுக்கு சென்றோம். அங்கே நின்ற அத்தனை பக்தர்களும் அஞ்சலி முத்திரையோடு (வணக்கத்திற்குரிய) அரோஹரா எனக் கூறி கடவுளை வேண்டினர். பூசாரி ஆரத்தி தட்டைக் காட்டுவது நமது முத்திரையான கபித்த ஹஸ்தம். இவ்வாறு மனித வாழ்க்கை நாட்டியக் கலையோடு ஒன்றிப் போயிருக்கிறது. வாசலில் பூக்கட்டும் பெண்மணியும் ககா முத்திரை பிடித்து பூமாலை கட்டுகிறாள். தம்பி இங்கே வா என்று தகப்பன் மகனை கூப்பிடுவது பதாக ஹஸ்த முத்திரை. நாம் அன்றாடம் கண் பார்த்து வேலை செய்வது முதல் நாட்டிய அபிநய முத்திரைகளேயாகும். மேலும் நவரசங்கள் நம் வாழ்க்கையில் மலிந்து காணப்படுகிறது. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் ஒரு சுழலும் சக்கரம் போன்றது. கல்யாண மணப்பெண் சிருங்காரம் முதற் கொண்டு அமைதியான காந்தரஸம் வரை வாழ்க்கையில் ரஸங்கள் வந்து கொண்டேயிருக்கும். ஆகவே நாட்டியமும், வாழ்க்கையும் ஒன்றே எனக் கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறு சிநேகிதியுடன் மன நிறைவோடு வீடு திரும்பினேன். நாட்டியக் கலையானது உடலுறுதியையும் ஆன்மீக வளர்ச்சியையும், ரசிகத் தன்மையும் ஏற்படுத்துகிறது. வாழ்க்கையில் தெய்வ பக்தியையும் மனதில் ஆத்ம திருப்தியையும் ஏற்படுத்துகிறது என்பது திடமான உண்மையாகும். கலை என்பது வாழ்வோடு இணைந்திருப்பதை நாம் எல்லோரும் அறிந்த விடயமே.

## இளங்கலைஞர் விருது – 2022

**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்)**

1) திரு. றோயல் வின்ஸ்டன் ஜெறாட் நிரோஷன் - குறும்படம்

2) திருமதி. கிருஸ்ணாலினி அகிலன் - வாத்தியக் கலை

3) திருமதி. மேவிஸ் ஜீன்சியா யூட் அல்போன்சஸ் - கூத்து

4) செல்வி. தர்சினி ஞானேந்திரன் - கிராமியக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர், யாழ்ப்பாணம்

கடமை நேரம் : மு.ப. 6.00 - பி.ப. 9.00









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாமே நமக்குள்..... விழித்திருங்கள்




அபிர்ராஜன் அன்ரனிபீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்



ஆதிமொழி தமிழென்று ஆய்வுகள் பகர்கின்றன
ஆனாலும் தமிழர்க்கொரு சொந்த நாடில்லை
சாதியென்றும் மதமென்றும் தமிழர் பிரிந்துநின்றால்
மோதி உடைந்திடுவோம் முகவரியே இல்லாமல்
பேதி கொடுத்திவற்றை அகற்றிடச் செய்யவேண்டும்
நீதியே சாய்கையில் நிரந்தர ஏதிலியாவோம்
விதியென்று வீணர்களாய் வீதிகளில் அலைந்திடாது
மதியினால் மாற்றியே நமக்கொரு விதிசெய்வோம்!

போருக்குள் சிக்குண்டோம் வலிமை இழந்திடவில்லை
போராக வந்துள்ள பொருளாதார நெருக்கடியில்
யாருக்கும் நாங்கள் சளைத்தவ ரல்லவென்பதை
உலகே வியந்திட உழைப்பால் உயர்வடைவோம்
வேரறுக்கும் பாதகர்கள் நம்மிடையும் இருக்கின்றார்
இளையோரைக் கருவறுக்கும் போதையினை விதைக்கின்றார்
பாரெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற உறவுகள்
தாய்மண் தலைநிமிர தாராளமாய் உதவிடுவீர்!

எதுவரையும் அடுத்தவரின் தாளத்துக்கு ஆடிடமுடியும்
நம்காலை நாமுணர்ந்து அடியெடுத்து வைக்க வேண்டும்
மதுவுக்கு அடிமையாகும் இளையோர்நிலை சிந்திப்பீர்
சதிவலைகள் கவர்ச்சிகளாய் கண்களை மறைக்கின்றன
பாதுகாப்பு என்பது நமக்குநாமே தேடிக்கொள்வதே
அடுத்தவரை அடிமையாக்கி அடைந்து கொள்வதல்ல
பொதுநலனைப் பேணுவது யாவர்க்கும் கடனே
வாழும்போதே வரலாற்றில் தடம் பதிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுச் சுவடுகளை பரம்பரைக்கு கையளியுங்கள்
தன்பாட்டில் நடக்குமெனத் தப்புக் கணக்கிடாதீர்கள்
கொண்டாட்டம் பண்பாட்டு மணங்கமள வித்திடுங்கள்
கொள்கை இல்லாமல் வாழ்க்கையில் பயணிக்காதீர்கள்
கண்டவை எல்லாம் கலந்திட இடமளியாதீர்கள்
கலாசாரம் காத்து நகர்த்திச் சென்றிடுங்கள்
உண்டியில் இயற்கை உணவுகளை உள்வாங்குங்கள்
நோயில்லா வாழ்வுக்கு மீண்டெழுந்து வாருங்கள்



சுயநலமாய் பொதுநலனை அழித்திட முனைந்திடாதீர்
சுமைசுமைக்க நேரினும் கண்ணியமாய்ச் செயற்படுங்கள்
அயலுடனும் அனைவருடனும் அன்புறவை வளர்த்திடுங்கள்
அறிவை வளர்ப்பதிலும் ஆக்கத்திலும் ஆர்வமுடன் இணைந்திடுங்கள்
பயனற்ற செயல்களிலே நேரத்தை வீணடிக்காதீர்
பயன்சேர்க்க காலத்தை முற்றும் பயன்படுத்துங்கள்
பயம்விலக்கி சுயம்தவிர்த்து இனத்தின் எழுச்சிக்காய்
நாமே நமக்குள் ஒன்றுபட விழித்திடுங்கள்!


## கலைக்குரிசில் விருது – 2022

**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்)**

1) திரு. செபஸ்தியாம்பிள்ளை யோசப் பாலா – சிறுகதை
2) திரு. கிளமென்ற் மாட்டீன் நெல்சன் - நாடகம்
3) திரு. அறுக்காஞ்சிப்பிள்ளை மரியதாஸ் - கூத்து
4) திரு. சரவணமுத்து முருகையா - கவிதை இலக்கியம்
5) திரு. பிரான்சிஸ் டொமினிக் - ஒப்பனைக்கலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டில் பயிர் வளர்ப்போம் நாட்டின் வளம் பெருகட்டும்

க. மயில்வாகனம்
J/82 மூத்தோர் சங்கம்
வண்ணார்பண்ணை.



உலகெங்கும் பொருளாதார நெருக்கடியும் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இனிவரும் நாட்களில் அவை தீர்ந்துவிடும் என்று கூறவும் இயலாது. நம்பிக்கை கொள்ளவும் இயலாது. எந்த ஒரு பொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகின்றது எனில் உற்பத்தியின்மையே காரணமாகும். கைத்தொழில் பொருட்களாகட்டும், களனி விளை உணவுப் பொருட்களும் விஞ்ஞான ஆய்வுக் கண்டுபிடிப்புக்களில் ஆன பாவனைக் கருவிகளுக்குமாயினும் தட்டுப்பாடு, பற்றாக்குறை ஏற்படுகின்றது என்றால் உற்பத்தி இன்மை அல்லது உற்பத்திக் குறைவே காரணமாகும். சில காலங்களில் விலையை அதிகரிப்பதற்காகச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நிறுவனங்களும் அரசுகளும் உண்டு. எல்லாம் பணம் பண்ணுவதற்கான உபாயங்களே.. ஆயினும், உணவுப் பொருட்கள் உற்பத்தியில் அசமந்தமாயிருப்பது, உயிரோடு விளையாடுவது போல் ஆகிவிடும். ஒவ்வொருவரும் சமச்சீர் நிறையுணவு பெறத் தவறினால் சோம்பல், நோய் எதிர்ப்புச்சக்தி குறையவே நோய்வாய்ப்படுதல், மந்தபுத்தி, இளமையிலேயே முதுமை அடையவும் மூத்தவர் போல நோய் நொடிகளுடன் வாழவும் நேரிடும். ஆதலினால் அவர் வருவார், இவர் தருவார், அவர் தீர்த்து வைப்பார் என எண்ணிக் காலங்களைக் கழிக்காமல் இன்றே எம்மாலான உற்பத்தியை ஆரம்பிப்போம். பயிர் வளர்த்து உண்ணத் தொடங்குவோம்.

"இலமென்று இரங்கி யிருப்பாரைக் காணில்
நிலமெனும் மங்கைநல்லாள் நகும்"

என்கிறார் திருவள்ளுவர். எம்மிடம் பயிர் வளர்க்கக் காணி இல்லை என்று விட்டு சோம்பி இருக்காமல் ஒவ்வொருவரும் ஏதாவது பொருந்தக்கூடிய உபாயத்தில் பயிர் வளர்த்து உண்ணப் பழகிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரதம், காபோவைதரேற், கொழுப்பு, விற்றமின்கள் போன்றன அடங்கிய உணவை நிறையுணவு என்பர். தானியவகை அனைத்திலும் புரதமும், மாப்பொருட்களில் காபோவைதரேற்றுக்களும், எல்லா எண்ணெய் வகைகளிலும் கொழுப்பும், எல்லா தாவர உணவிலும் கடலுணவிலும் அதற்கான விற்றமின்களும் உள்ளன. தேர்ந்தெடுத்து நிறையுணவைச் சமச்சீர் உணவைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவையும் சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் பாடசாலைகளிலும், வீடுகளிலுள்ள மூத்தவர்களும் சொல்லித் தருகிறார்கள். அதன்படி ஒழுகின் நாமும் ஆரோக்கியமாக வாழலாம். வாழ்க்கை வட்டமே, ஒன்றுக் கொன்று உண்பதுதான். வலியன, மெலியனவற்றைக் கொன்று வாழ்வதாகும். புலால் உண்பவர் மட்டும் உயிரைக் கொன்று உண்ணவில்லை, தாவர உணவுகள் உண்பவரும் தாவரங்களைக் கொன்றுதான் உண்கிறார். ஆதலால் இதில் சைவம், அசைவம் என்ற பேதம் இல்லை. அது பற்றிப் பேசுவதிலும் அர்த்தம் இல்லை.

இலங்கையிலும் பெரும் உணவுத் தட்டுப்பாடும் இறக்குமதிப் பொருட்களுக்கான பெரிய தட்டுப்பாடும் நிலவுவதால் அவற்றின் விலைகள் தற்போது 3 - 4 மடங்காக அதிகரித்துள்ளது. இந்த நிலை இப்படியே தொடரும். மாற்றமடையும் என்பதற்கு உத்தரவாதமுமில்லை. உள்ளூர் உற்பத்தியைப் பெருக்காவிடில் மேலும் நிலைமை மோசமடைய, பசியும் பட்டினியும், பஞ்சமும் திருட்டுக்களும் கொலையும் கொள்ளையும் ஏற்படக் கூடும். ஆதலால் இதைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், ஒவ்வொரு குடிமகனும் தன்னால் ஆன உற்பத்தியைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் தனக்கான உணவை உற்பத்தி செய்தால், நாட்டின் பொருளாதாரமும் அதிகரித்துவிடும். இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி குறைந்து நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் வந்துவிடும். "நீ உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகத் திருந்தி விடும்" என்று சுவாமி விவேகானந்தர் கூறியதைக் கூறியபடி இன்னும் எத்தனை நாட்களுக்குக் கூறிக்கொண்டிருக்கப் போகிறோம். நீ உன் வீட்டில் பயிர்வளர்க்க, சமூகம் தானாகவே பயிர் வளர்க்கும் எனக் கூறிக் கொண்டு பயிர் வளர்ப்போம். புதிய வாழ்க்கை நெறி கொள்வோம்.

பயிர் வளர்ப்பதற்குப் பெரிய நிலப் பரப்பு இல்லை, நீர்வளம் இல்லை, அசேதனப் பசளைகள் இல்லை என இல்லாதவற்றைக் காரணமாகக் கூறிக் கொண்டிருக்காமல் எம்மிடம் என்னென்ன இருக்கிறதோ அவற்றைக் கொண்டு ஆரம்பிப்போம். ஒவ்வொருவரும் வீட்டில் இடம் இல்லையென்று கூறிப் பூக்கன்றுகள் வளர்க்காமல் இல்லைத்தானே. சில காலங்களுக்குப்




பூக்கன்றுகளுக்குப் பதிலாக தொட்டிகளில் கத்தரி, வெண்டி, தக்காளி, மிளகாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றையும், வேலிக்கரை - மதில்கரைகளில் பயற்றை, பாவல், புடோல் போன்ற கொடியினப் பயிர்களையும் வளர்ப்போம். கிடைக்கின்ற 25 - 50 சதுர மீற்றர் நிலப் பரப்பிலும் (ஆகக் குறைந்த நிலப்பரப்பு உள்ளவர்கள்) கிழங்குவகை, வாழை, பப்பாசி போன்றவற்றைப் பயிரிடுவோம். அநேகமாக சிறு தானியங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள இப்பயிர்கள் 45 - 50 நாட்களுள் பயன்தரக் கூடியவை. மேலும் 2 மாதங்களுக்கு தொடர்ந்தும் அறுவடை செய்யக் கூடியவையுமாகும்.

பப்பாசி, மாதுளை, கொய்யா, தென்னை போன்றவற்றுள் ஒவ்வொரு கன்றைப் பொருத்தமான இடத்தில் நாட்டினோம் என்றால் வருடம் முழுவதும் பயன்தரக் கூடியவை. பப்பாசியை நாட்டி 6 மாதங்களின் பின்னர் அறுவடை பெறலாம். வாரம் ஒரு குருத்து வளரக் குருத்துடன் ஒரு பூவும் பிஞ்சும் வளரும். ஆதலினால் கிழமைக்கு ஒரு பழம் கிடைக்கும். வாழை ஒன்றை நாட்டி வைத்தோம் எனில் அதன் மருத்துவக் குணங்களுக்கும் மேலாக காய், பழம் இலை என்பன தரும். கிட்டத்தட்ட ஒருவருடத்தின் பின்னர் தான் அறுவடை பெறலாம் என்றாலும் வாழையடி வாழையாகக் குட்டிகளும் வளர்ந்து பயன் தருவதால் தொடர்ந்து பயன் பெறக்கூடியவாறு இருக்கும்.

ஒரு தென்னம்பிள்ளையை வளர்ப்போமாயின் மாதம் ஒரு ஓலையுடன் ஒரு பாளையும் பெற்று வளரும், ஒரு பாளையில் குறைந்தது 15 - 20 தேங்காய் வரை காய்க்கும். மாதா மாதம் தொடர்ந்து 30 - 35 வருடங்களுக்குப் பயன்தரக் கூடிய தென்னை ஒன்றை நாட்டி வளர்த்தால் வீட்டுத் தேங்காய் தேவை பூர்த்தியாகிவிடும்.



சிறிது விசாலித்த பரப்பளவு கொண்ட வீட்டுக் காணியுடையவர்கள் ஒரு அகத்தி ஒரு முருங்கையென மருத்துவ குணம் நிறைந்ததும் ஊட்டச் சத்து மிக்கவையுமான பயிர்களை நாட்டி வளர்ப்போம். கழிவு நீர் செல்லும் வாய்க்கால் அருகில் பசளி, பொன்னாங்காணிக்கீரை போன்ற பயிர்களையும் வளர்க்கலாம். இடவசதியுள்ளவர்கள் கூட்டினுள் 4 - 5 கோழிகளை வளர்க்க வீட்டின் முட்டைத் தேவை நிறைவு காணும் (கோழிகள் பயிர்களைக் கொத்தித் தின்றுவிடும். ஆதலால் கூட்டினுள் வளர்ப்பதே சிறந்தது. அவற்றின் பசும் இலைத் தேவைக்காக, பப்பாசியின் முதிர்ந்த இலைகளைக் கூட்டினுள் கட்டி விடலாம்) இதன் கழிவுகள் சிறந்த எருவாகும்.

முருங்கை, பப்பாசி, அகத்தி போன்றன உயர்ந்து மேலெழுந்து வளர்வதால் அவற்றின் அடியில் அல்லது அருகில் கொடி வகை (பயற்றை, பாகல் போன்ற பயிர்கள் வளர்க்கலாம். அவை பற்றிப் படர்வதற்கென வேலிகள் தனியே அமைக்க வேண்டியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைப் பயிர்கள் வீட்டில் வளர்வதால் காற்றுச் சுத்திகரிக்கப்படுவதுடன் மருத்துவ இயல்புடைய வாயுக்களை இவை வெளிவிடுவதால், அக்காற்றை நாம் சுவாசிக்க, சுவாசம் சம்பந்தமான நோயேதும் எமக்கு ஏற்படாமல் பாதுகாக்கும். றோசாவும், செவ்வந்தியும், செம்பருத்தியும் மலரும் போது மட்டும் எமக்கு முகமலர்வு ஏற்படுவதில்லை. இப்பயிர்களும் பூக்கும். அப்பூக்களும் எமக்கு மலர்வைத் தரும்.

நீர்த்தேவை, அநேகமான வீட்டுக்கழிவு நீரை வாய்க்கால் அமைத்து இவற்றுக்குப் பாய வைக்கலாம். அல்லது வீட்டு முற்றத்தில் வளரும் இவற்றுக்குக் காலை, மாலை, ஒவ்வொரு வாளி நீர் வார்த்து விட்டால் போதுமானது. அது கூட மனிதனுக்கு ஒருவகை உடற்பயிற்சியும் ஆகிவிடும். வீட்டில் மூத்தோருடன் இணைந்து வாழ்ந்தால், அவர்கள் இவற்றைப் பராமரிப்பர்.

வீட்டில் உள்ள அனைவரினதும் சிறு நீரை ஒன்று சேர்த்து நீரில் கலந்து இவற்றுக்கு ஊற்றினால் வளர்வதற்கான (urea) நைதரசன் தேவை பூர்த்தியாகிவிடும். அடுப்புச் சாம்பல் சிறிது சிறிது அளவாகச் சமமாகப் பங்கிட்டுத் தூவி வர பொட்டாசியம், பொஸ்பரஸ் ஊட்டம் மரக் கன்றுகளுக்குக் கிடைத்து விடும். சிறு கன்றுகள் வளர்வதற்கும் இலை பரப்பி உணவு தயாரிக்கவும் நைதரசனும், கன்றுகளின் வேர் வளர்ச்சிக்கும் பொசுபரசும், பழங்கள் வளர பொட்டாசியம் தேவை. இவை அடுப்புச் சாம்பலில் நிறைய உண்டு. ஆதலினால் பசளைத் தேவைக்கென அலைய வேண்டி வராது.

மாடி வீட்டிலோ அல்லது தொடர் குடியிருப்புக்களிலும் குடியிருப்பவர்கள் கூட இவ்வாறு தொட்டிகளில், சாடிகளில் அல்லது மா, அரிசி பொதி செய்யப்பட்டுவரும் பைகளிலோ மண் நிரப்பி வளர்க்க இயலும். இவ்வகையான சிறு பயிர்களின் வேர்கள் அதிகம் ஆழம் செல்லாதவை. போதியளவு பயன்தரக் கூடியவை. எமக்கான காய்கறிகள், பழங்களை நாமே உற்பத்தி செய்தெடுத்தால், செழித்து வளர்ப்பதற்காகவோ, அதிக விளைச்சலுக்காகவோ பயன்படுத்தும் இரசாயன உர, பூச்சி கொல்லிகளும் முதிர்வடைய வைக்கவோ பழுக்கச் செய்யவோ பயன்படுத்தப்படும் இரசாயன நாசினிகள் இல்லாத தூய்மையான காய்கறி, பழங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் எக்காலத்திலும் “போலச்” செய்பவர்கள். ஒருவர் செய்வதைப் போல தாமும் செய்ய எண்ணுவர். ஒருவர் ஆரம்பித்தால் போட்டிக்காகவோ, பொறாமைப்பட்டோ தாங்களும் வளர்க்கத் தொடங்கி விடுவர். போட்டிக்காயினும் எரிச்சல்பட்டாயினும் வளர்க்கத் தொடங்குவார்களாயின் வீட்டுச் செலவின் உணவுக்கான செலவின் ஒரு பகுதியை குறைப்பது மட்டுமல்ல, தூய, புதிய காய்கறிகளும் பெறக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடி வீட்டுப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும், வறுமை, பஞ்சம் வங்குரோத்துத் தனத்தில் இருந்து மீள சிறு பயிர்கள் வளர்த்தெடுத்தாலும் நீண்டகாலப் பொருளாதாரத்தையும் குறிப்பாக யாழ்ப்பாணப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப ஒவ்வொருவரும் குறைந்தது 10 பனம் விதைகளாயினும் வீட்டில் மதில், வேலி ஓரங்களிலும், வெற்றுக் காணி வசதிகள் இருப்பின் அதிக அளவிலும் நாட்டி வளர்க்க வேண்டும். யாழ் குடா நாடு, வரண்ட மணல் பூமி, போரின் போது கண்டபடி உயர் மரங்களும் பனைகளும் வெட்டித் தறித்து விட்டதால், மழைவீழ்ச்சி குறைந்து மேலும் வரண்டு பாலைவனமாகி விடாது தடுக்க, இன்றே நாட்டுவோம். நிலையானதும், நீண்ட காலப் பயிராகவும் கற்பகத்தருவாகவும் யாழ்ப்பாணத்தின் குறியீடாகவும் உள்ள பனைவளம் அழிந்து போயிற்று. மறு நடுகை செய்துதான் வளர்க்க வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. கடலும் பனையும் தான் எமது வளம். கடல்வளம் கொள்ளை போகின்றது. பனைவளம் அழிக்கப்பட்டு விட்டது. மீளக் கட்டியெழுப்ப வேண்டிய நேரம் இது.. மண்ணின் மீது மரங்கள் இல்லாது போக மழைவீழ்ச்சி குறைவதால், நிலத்தடி நீர் மட்டம் மிக மோசமான அளவில் குறைந்து போக, அதிலும் கடல் நீர் மட்டத்தை விடக் குறைந்தால் கடல் உப்பு நீர் நிலத்துள் வந்து கிணறுகள் அனைத்தும் உப்பு நீராக மாறக்கூடிய அபாயகரமான சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உள்ளூராட்சி சபையினர் நன்னீர் வழங்கிய போதே, போத்தல்களில் அடைக்கப்பட்டு வருகின்ற நீரை வாங்கிப் பருகி வருகின்ற மக்கள், கிணற்று நீர் உவர் நீராக மாறிப் போனால் உள்ளூராட்சி சபையினர் குடிநீர் வழங்க முடியாத நிலமை உருவாகும். வரண்ட பிரதேசப் பயிராகிய பனைமரம் வரட்சிக் காலங்களில் நீர் தேடி 1000 அடிகள் வரை வேரோடும் இயல்பு கொண்டது. அங்கிருந்து நில மட்டத்துக்கு நீரை உறிஞ்சிக் கொண்டுவருவதால் நிலம் ஈரலிப்புத் தன்மை பெறும். கிணற்றுள் நல்ல நீர் ஊறும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என அலையாமல், பின்பற்றாமல் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் பனை மரம் வளர்ப்போம். பனை மரத்தை வளர்ப்போம் என்பது பொருந்தாது. அவை தாமாகவே வளர்ந்து பயன் தருபவை. ஆயின் எமது அத்தியாவசிய தேவை கருதி முதல் இரு வருடங்களுக்கும் ஆடு மாடு கடித்து விடாமல் பாதுகாத்து விட்டால் அவை தம்மைத் தாமே பாதுகாத்துக் கொண்டு வளர்ந்து பலவித பயன்களை எமக்கும் நாட்டுக்கும் வழங்கும். ஆதலால் பனையை வளர்ப்போம். பயன் பெறுவோம். வடலிகள் வளர விடுவோம். வானுயர்ந்து வளரட்டும் வளம் பல தரட்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழிந்துவரும் பாரம்பரிய கலைகளுள் ஒன்றான நடசாரி மற்றும் அதனோடு இணைந்த செயற்பாடும் புகழ் பூத்த பாஷையூர் கிராமமும்



இளங்கலைஞர்
அஸ்ரனிக் றூஸ்வெல்ட் பிறாங்கிளின் றூஸ்வெலட்
வளன்புரம், யாழ்ப்பாணம்.

தென்கிழக்குத் திசையிலே அமைந்துள்ள அழகிய பாஷையூர் கிராமமானது தெற்கே கடலையும் வடக்கே ஈச்சமோட்டை J/66 கிராமத்தையும் கிழக்கே J/62 கொழும்புத்துறை கிராமத்தையும் மேற்கே கொய்யாத்தோட்டம் கிராமத்தையும் கொண்டமைந்த சிறிய பகுதியாகும். புனித அந்தோனியார் தேவாலயத்தை மையமாகக் கொண்டு அமைந்த இப்பாஷையூர் கிராமமானது J/64, J/65 எனும் கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு கிராமம் ஆகும். இணையற்ற கடல் வளமும் கலை வளமும் கணக்கிட முடியாத செல்வமும் கொண்ட செழிப்பான பூமி பாஷையூர் கிராமம் ஆகும்.

கும்மி, கோலாட்டம், கப்பல் பாட்டு, ஊஞ்சல் பாட்டு மற்றும் நாடகம், நாட்டுக்கூத்து, இசைநாடகத்தில் புகழ் பெற்ற இக்கிராமம் பல புலவர்களை, கவிஞர்களை, பாவலர்களை, பல்துறை சார்ந்த பல்வேறு நிலைகளில் கௌரவிப்புக்களைப் பெற்றுக் கொண்ட கலைக் கிராமம் ஆகும். கத்தோலிக்கரை அதிகமாகக் கொண்ட இப்பகுதி மக்கள் மீன்பிடித் தொழிலை பிரதானமாகச் செய்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசெய்யும் ஊர் எனும் பெயரை பாசூர் என்ற தமது ஊரின் பெயருக்கு அமைத்து கொண்டு கலை வளர்த்த பெருமைக்குரிய பிரதேசமாக பாஷையூர் காணப்படுகின்றது. இவர்களின் ஆத்மார்த்தமான அரங்க கலையாக நாடகம், கூத்து, இசைநாடகம் திகழ்ந்தாலும் நடசாரியும் முக்கியம் பெறுகின்றது.

நல்லூர் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்த 42 குடும்பங்களின் தொகுதியாக உருவாகிய முந்நூறு வருடத்திற்கு முற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசம் இன்று சிறிய இடத்தில் அதிக சனத்தொகையைக் கொண்ட பிரதேசமாக விளங்குகிறது.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட பாஷையூர் கிராமமானது கலை, கல்வி, கலாசாரம், வாழ்வியல், நாகரீகம், அரசியல், பொருளாதாரம், சமூக நிலைமைகள், தொழில்வளம், வாழ்க்கை முறைமைகளில் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் மிகச் சிறந்த முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையின் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாஷையூர் கிராமத்தின் பண்புகளைப் பார்த்த நாம் அங்குள்ள மக்களால் பின்பற்றப்படும் நடசாரி தொடர்பான நிகழ்வுகள் பற்றி நோக்குவோம்.

பாஷையூரில் பாரம்பரிய முறைப்படி நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நடசாரிப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் பாஷையூர் மக்களால் பிரதேசம், மாவட்டம் கடந்து இயங்கிக் கொண்டிருக்கும் தேவாலயங்களில் நடசாரிப் பாடல்கள் சொரூப பவனிகளின் போது பாடப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் தேவாலயம், பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்தியார் தேவாலயம், கௌதாரிமுனை புனித அந்தோனியார் தேவாலயம், ஒருகரை புனித அந்தோனியார் தேவாலயம், கல்லடி புனித யூதாததேயு தேவாலயம், பூம்புகார் புனித பிலிப்நேரியார் தேவாலயம், பள்ளிக்குடா வெட்டுக்காடு புனித பற்றிமா தேவாலயம் போன்ற தேவாலயங்கள் பாஷையூர் மக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தன.

இந்த தேவாலயங்கள் உட்பட பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயம் இவர்களது குலதெய்வமாக காலாதிகாலமாக போற்றப்பட்டு வருகின்றது. மேற்குறித்த அனைத்திற்கும் கிறிஸ்து உயிர்ப்பு விழா மற்றும் தேர்ப்பவனியின் போது விருத்தம், நடசாரி ஆகியன வருடா வருடம் பாடப்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய காலங்களில் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவதற்காக பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் உயிர்த்த இயேசுக்கிறிஸ்துவின் திருச்சொரூபத்தை தோளில் சுமந்து நடந்து ஊரைச் சுற்றி பாதணிகள் அணியாது வருவார்கள். திருச்சொரூபத்தைத் தோளில் சுமப்பவர் பாதணிகள் அணிவதில்லை. தேவன் மட்டில் உள்ள பக்தியினாலும் தனது நேர்த்திக்கடன் நிறைவேறிய அல்லது நிறைவேற வேண்டிய காரணத்தாலும் அவ்வாறு அந்நிகழ்வை மனப்பூர்வமாக பக்தியுடன் நிறைவேற்றுவார்கள்.

காலைத் திருப்பலி நிறைவுற்றதும் திருச்சொரூபத்தை தோளில் சுமந்து வரும் போது ஒவ்வொரு இடத்திலும் நின்று குறிப்பாக தெருமுனையில் நின்று தேவாரம், விருத்தம் உருக்கமாக மனம் உருகிப் பாடப்படும். அதன்போது கிராம மக்கள் திருச்சொரூபத்துடன் வரும் மக்கள் முன்பு வெயிலில் நிற்கக் கூடாது என்பதற்காக கொட்டகைகள் அமைத்து இந்த இடத்தை தென்னம் ஓலைகளாலும், தென்னங் பூக்களாலும் அலங்கரித்து அழகான இடத்தில் திருச்சொரூபத்தை வைத்து வாசனைத் தூபங்கள் காட்டி சோளம்பொரி தூவி மகிழ்வுடன் தமது நேர்த்திக் கடனை முடிப்பார்கள்.

கிராமத்தைச் சுற்றி வரும் நேர அளவு பற்றி யாரும் கருத்தில் கொள்வதில்லை. பக்தியே மேலோங்கி இருந்தது. திருச்சொரூபம் கிராமத்தைச் சுற்றி வந்தவுடன் நடசாரி பாடல்களை பாடியவர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடி மங்களம் பாடி திருச்சொரூபத்தை தேவாலயத்தினுள் கொண்டு செல்வார்கள்.

ஆலயத்தினுள் கொண்டு செல்லப்பட்ட திருச்சொரூபம் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள விசேட இடத்தில் மக்கள் வழிபாட்டிற்காக வைக்கப்படும். பின்னர் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆசீர்வாதம் நடைபெறும். அதன் போது ஆலயத்தின் மணி தொடர்ச்சியாக ஒலிக்கப்படும். மலர்களின் வாசனை, தூபங்களின் புகை மற்றும் நறுமணம், ஆலய மணியின் ஒலி ஆகியன பக்தர்களுக்கு பரவசத்தை ஏற்படுத்தும்.

அண்மைக் காலமாக மக்களின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் நவநாகரீக வளர்ச்சி மற்றும் அதனோடு இணைந்த நாகரீக மோகம், காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட வெப்ப நிலைமைகள், நேரவிரயத்தை கருத்தில் கொள்ளல் காரணமாக நடசாரி முறைகளில் பல பாதிப்புக்கள் உண்டாகின்றது. அத்தோடு பற்பல மாற்றங்களும் ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது தேவாலயத்தின் திருச்சுரூபங்கள் தோளில் சுமந்து செல்வதற்குப் பதிலாக ரதத்தில் மின் விளக்குகளால், மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அதில் திருச்சொரூபங்கள் வைக்கப்பட்டு வீதியில் உலாவரப்படுகின்றது. மேளம், தாளம், ஆர்மோனியக் கலைஞர்கள், நடசாரி பாடல்களைப் பாடும் கலைஞர்கள், பக்கப் பாட்டு பாடுபவர்கள் ரதத்தை இழுத்துச் செல்வோருக்கு முன்னும் சிலவேளை பின்னால் நின்றும் தமக்கென வழங்கப்பட்ட நேரத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் திருச்சொரூபம் நிற்கும் போது பாடல்களைப் பாடி மகிழ்வர். பார்ப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையாக இருக்கும். இத்தருணத்திற்காக நிற்பவர்கள் பலர் இக்கிராமத்தில் மட்டுமல்ல புலம்பெயர் சமூகத்திலும் உண்டு. பாடல்கள் இசைக்கப்படும் போது மக்கள் சோளம்பொரிகளாலும் மலர்களாலும் இனிப்புக்களாலும் திருச்சொரூபத்தின் மீது வீசுவார்கள். இதன் மூலம் தமது துன்பங்கள் தம்மை விட்டு நீங்குவதாகவும் நம்புவார்கள். திருச்சொரூபத்தின் மீது பட்டு விழும் இனிப்புக்களையும், சோளம்பொரிகளையும் மக்கள் எடுத்துக் கொள்வார்கள். இந்தப் பவனியின் போது மக்கள் களைப்படையாமலும் சோர்ந்து போகாமலும் இருக்க குளிர்பானங்கள், தண்ணீர் மற்றும் நேர்த்திக் கடனுக்கான உணவுகளை வீதியில் மக்கள் தமது இடங்களில் வைத்து வழங்குவார்கள். வானளவுக்கு உயரமாக பட்டாசுகள் வெடிகளை கொழுத்தி மகிழ்வார்கள். யார் அதிகம் கொழுத்துகிறார்கள் என்ற போட்டியும் சிலவேளை இடம்பெறுவதுண்டு. மிகவும் ஆரவாரமாக இருக்கும் பட்டாசு, மத்தாப்பு, சீறுவானம் போன்ற வானவெடிகளை வெடித்து இளைஞர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அந்நாட்களில் பாஷையூர் கிராம மக்கள் சிலர் கடற்றொழிலுக்கு செல்ல மாட்டார்கள். இதனை பரம்பரை பரம்பரையாக ஒரு கத்தோலிக்க கடமையாக செய்து வருகின்றார்கள்.

ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை நடசாரி பயிற்றுவிப்பவர்களாக அண்ணாவியார் அவுறாம்பிள்ளை, அண்ணாவியார் வஸ்தியாம்பிள்ளை, அண்ணாவியார் யா. மடுத்தீஸ், அண்ணாவியார் அருளானந்தம் செபஸ்ரியாம்பிள்ளை, அண்ணாவியார் பாவிலுப்பிள்ளை, யாழ் ரத்னா மனவல் செபஸ்ரியாம்பிள்ளை, கலாபூஷணம் அரசகேசரி வஸ்தியாம்பிள்ளை யேக்கப் அல்பிறட், கலாபூஷணம் நாடகக் கீர்த்தி பி. யூட்ஸ்கொலின் மற்றும் சமூக ஆர்வலர்களால் நடசாரி பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடசாரி மற்றும் விருத்தம் எழுதி வரும் எழுத்தாளர்களாக புலவர்.நீ மிக்கோர்சிங்கம், புலவர்.பெ.கிறிஸ்தோப்பர், கூத்துக்கலை வேந்தன் முத்துத்துரை அலெக்ஸ்சாண்டர், குருஷார் நேசத்துரை, கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ், புலவர் வைத்தி கபிரியேல், புலவர் என்றிப்பிள்ளை சூசைப்பிள்ளை, செபமணியர், கலைஞானி இராசையா இராசுப்பிள்ளை, கலாபூஷணம் வஸ்தியாம்பிள்ளை யேக்கப் அல்பிறட், அண்ணாவியார் செல்லமுத்து முத்துத்துரை, கலாபூசணம் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி, அண்ணாவியார் அகஸ்ரின் அன்ரன், யாழ் ரத்னா மனுவல் செபஸ்ரியாம்பிள்ளை, அண்ணாவியார் மனுவல் பாக்கியராசாத்தி, அழகுமணி சூரியர் உட்பட பலர் பல தேவாரங்கள், விருத்தங்கள் நடசாரிப் பாடல்கள் மங்களம் ஆகியவற்றை எழுதியுள்ளார்கள். அவர்களின் பாடல்கள் தொடர்ந்தும் கலைஞர்களால் பாடப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இசைக் கலைஞர்களாக மிருதங்கம், தபேலா, தாளம், ஆர்மோனியம் ஆகிய இசைக் கருவிகளை முன்னெடுத்துச் செல்வதில் செல்வாக்குச் செலுத்துபவர்களாக இவர்களைக் குறிப்பிடலாம். அண்மைக் காலங்களில் திரு.செபஸ்ரியாம்பிள்ளை வசன்பேர்க் (மதி), திரு.செபஸ்ரியாம்பிள்ளை பெகின், திரு.செபஸ்ரியாம்பிள்ளை றொபின், திரு.அலெக்ஸ்சாண்டர் அன்ரனி றொபின்சன் ஆகியவர்களோடு பாவிலுப்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் (பிலேந்திரன்) மிருதங்கம் மற்றும் டோல்கி இசைக்கும் பணிகளில் ஈடுபடுகின்றனர். வாழ்ந்து மறைந்த கலைஞர்கள் பேதுரு சவரிமுத்து, ஞானப்பு மடுத்தீஸ், டெனிஸ் அருளப்பு, மடுத்தீஸ் பாவிலுப்பிள்ளை, ஞானப்பு வஸ்தியாம்பிள்ளை, டெனிஸ் மனுவல் , யோண்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை போன்றோரும் மேற்குறித்த பணிகளில் ஈடுபட்டனர்.

இதில் நடசாரிக்கு வசன்பேர்க் (மதி) தற்போது ஆரம்பகர்த்தாவாக ஆர்மோனியம் வாசிக்கின்றார். நடசாரி நிகழ்வானது எமது பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தகைய சிறப்புமிக்க செயற்பாடுகள் எமது கலைப்புகழ் வாழும் பாஷையூரில் நடைபெறுவது பாஷையூரின் கலைமகன் என்ற வகையில் எனக்குப் பெருமையே.

நடசாரிப் பாடல்கள் பல காணப்பட்ட போதும் அவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த சிலவற்றினை இங்கு நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவாரம் :- புனித அந்தோனியார்**

**எழுதியவர் :- கலைஞானி இராசையா இராசுப்பிள்ளை (இராசி)**



பதுவையம் பதியா போற்றி
பன்னு நா வழியா போற்றி
புதுமை செய் வரத்தா போற்றி
பொது விலா கரத்தா போற்றி
எதுமியா தாதா போற்றி
இருப்பவர்க் இனியா போற்றி
சீதுவுயர் போற்றி போற்றி

**தேவாரம் :- புனித சந்தியோகுமையோர்**

**எழுதியவர் :- புலவர் நீ. மிக்கோர்சிங்கம்**



கர்த்தரின் உருவம் கண்டாய்
கவின் பூங்காப் பீடை கண்டாய்
வித்தை மாயத்தை வென்றாய்
விறல்சோனர் படையை கொன்றாய்
சுத்தனின் வேதசாட்சி
சுதந்திர வலிமை பூண்ட
பக்தி சேர் சந்தியோகையா
பாவிக்காய் வேண்டுவாயே

**நடசாரி :- உயிர்த்த இயேசுகிறிஸ்து பெருவிழா**

**எழுதியவர் :- கலாபூஷணம் வஸ்தியாம்பிள்ளை யேக்கப் அல்பிறட்**

பவனியைப் பாரு - ரெட்சகர் வாற
பவனியைப் பாரு
பவனி பாரு சிட்ட ரதமே எழுந்து கிட்ட
பரிந்து சொரிந்து அருள் புரிந்து எமக்காய் வாற
(பவனியைப் பாரு)

தங்கரதப் பவனியில் வருகிறார் - மக்கள்
மங்களங்கள் பாடிக் கூடி வருகிறார்
துங்கன் மகராசனெனத் திகழ்கிறார் - பாவ
துட்டரை அடக்க யேசு வருகிறார்
வானவெடி முழங்க சீன வெடியதிற
வல்லவன் யேசுபரனார் மெல்லவே எழுந்து வாறார்
(பவனியைப் பாரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருத்தம் :- மண்ணித்தலை புனித செபஸ்தியார்**

**எழுதியவர் :- அண்ணாவியார் செல்லமுத்து முத்துத்துரை**



தொழுது விழ மருவலர்கள்
அஞ்சவும் கெஞ்சவும்
சூர அதிகார வீர

துட்டனாம் தீயோக்கிலேசியான் நாவினால்
தொட்ட உரைத்திட்ட மென்று

விழுதுமுயர் கள்ளியிடை
அதனிலே அடையவர்கள்
முந்து கை கால் வரைந்து
முன் ஏழு அம்பினால்
பொன் மேனி தனில் எய்ய
மோட்ச பதி சேர்ந்த தலைவா

**நடசாரி :- கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா**

**எழுதியவர் :- புலவர் பெ. கிறிஸ்தோப்பர்**

உலகெண்டிசை புகழ்மேவிய மனுவேலா - மன்னவர்
குலமாது மரியன்னை அருள் பாலா
அலர்பருதி தினம் உயிர் பெற்றிடு சீலா - வெற்றியை
நிலவுற்றிடு கொடி கொண்டிடு அனுகூலா

சத்ய மறையதிபன் நிகரில்லா பொறை நிருபன் - நாளும்
நினது திருக்கனக மலரென மரிய சரணமதை
நெஞ்சிலுற்றஞ்சலி செய்திட வஞ்சகன்
மிஞ்சுபவர் பொருத்தாண்டருளும்

**நடசாரி :- கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா**

**எழுதியவர் :- அண்ணாவியார் அகஸ்ரின் அன்ரன்**

உத்தமன் எழுந்து கொண்டாரே - உன்னதம் கொண்டு
உத்தமன் எழுந்து கொண்டாரே
உத்தமன் எழுந்து கொண்டார்
உன்னத மகிமை கொண்டார்
பண்ணிசைகள் பாடப் பாசூர்
மண்ணினில் பரமனின்று

(உத்தமன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடசாரி :- **கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா**

எழுதியவர் :- **கலாபூஷணம் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி**



பவனியைப் பாரும் கிறிஸ்து வாறார்
பவனியைப் பாரும்
பவனி வரும் சூசை முனியின்
துணைவி கன்னி மரியின் வயிற்றுக் கனி
யேசுக்கிறிஸ்து வாறார்

தேவதாயார் பெற்றெடுத்த புத்திரன்
மாடு கட்டிடும் தொழுவத்திலே பிறந்தவர்
ஆறு வயதில் ஆரம்பக் கல்வி பயின்றவர்
ஆகமங்கள் ஐம்பத்தாறும் கற்று உணர்ந்தவர்
பன்னிரண்டு வயதில் காணவில்லையென
அன்னை தந்தையர் தேடி வந்திட
ஆலயத்தில் வேத போதனை புரிந்திட

(பவனியைப் பாரும்)

நடசாரி :- **கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழா**

எழுதியவர் :- **அண்ணாவியார் மனவல் பாக்கிய ராசாத்தி (அன்னம்மா)**

மோட்ச சிம்மாசன மாட்சிமை ஓங்க - நல்
ஆட்சி புரிபவரே நகர்க்கு உன் காட்சி தருபவனே

மோட்ச ராட்சியத்தின் முத்தொழிலானோனே
பூச்சியம் போலுயரட் பொன்னின் கரத்தானே
மாட்சிமை ஓங்க மனுவாய் உதித்தோனே
தாழ்ச்சியுடனே உன் தாழினை வேண்டினேன்

(மோட்ச....)

நடசாரி :- **மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார்**

எழுதியவர் :- **கலை வளர்த்த காவலன் முத்துத்துரை அலெக்ஸ்சாண்டர்**

கண்டேன் கண்டேனே - தேவ
கர்த்தனை ஏந்திய உத்தமனைத் தேரில்
கண்டேன் கண்டேனே

பாவிகளிற்காக இரங்கி நலம் செய்யும்
பாசைப்பதியில் பயிற்சி உறவு கொள்
வேளைக்கிரங்கி நீர் காலைப் பொழுதினில்
வெற்றிக் கொடி கொண்டு சுற்றி வருவதைக் (கண்டேன்......)

★★★ நன்றி ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

யோ. யோண்சன் ராஜ்குமார்
யாழ்பாடி கலாசார மலர்
யாழ்ப்பாண பிரதேசக் கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் - 2014
பக்கம் - 77

கலாபூஷணம் அரசகேசரி வஸ்தியாம்பிள்ளை யேக்கப் அல்பிறட்
பாஷையூர், யாழ்ப்பாணம்.

கலாபூஷணம் செபஸ்ரியாம்பிள்ளை இராஜேஸ்வரி
பாஷையூர், யாழ்ப்பாணம்.

யாழ் ரத்னா - ஜேம்ஸ்சிங்கம் மிக்கோர் சிங்கம்
பாஷையூர், யாழ்ப்பாணம்.

யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

இளங்கலைக்கதிர் அருள் கிருபாகர்
பாஷையூர், யாழ்ப்பாணம்.

இளங்கலைக்கதிர் செபஸ்ரியாம்பிள்ளை வசன்பேர்க் மதி
பாஷையூர், யாழ்ப்பாணம்.

மு. சிங்கராயர்
பாஷையூரும் நாட்டுக்கூத்தும்
பாஷையூர் பிரான்ஸ் அபிவிருத்திக்குழு - 2009


## கலைமன்ற அபிவிருத்தி - 2022

**(கலாசார அலுவல்கள் திணைக்களம்)**


1) ***கீதவாஹினி இசைக்கல்லூரி - கொழும்புத்துறை***

2) ***அழகியற் கல்லூரி - யாழ்ப்பாணம்***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையோடு இயைந்த வாழ்வு





**கலை இலக்கிய ஜோதி**
**நசீரா அப்துல் அஸீஸ்**
**52, முஸ்லிம் கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



யாழ்ப்பாணம்

கலை என்பது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வளமான வாழ்வதை அழகுற வளப்படுத்தி வாழ வைப்பதில் முன்னிலை வகிக்கின்றது. இதனால் தான் மனித வாழ்க்கைக்கும் மற்ற உயிரின் வாழ்க்கைக்கும் நிறைய வேறுபாடுகளை நாம் காண்கிறோம்.

இதன் அடிப்படையில் மனித வாழ்க்கை மிகவும் விரும்பத்தக்க தாகவும் மற்றைய உயிரின் வாழ்க்கை வெறுக்கத்தக்கதாகவும் உள்ளது. இயற்கையாய் அமைந்த உருவ வகை உணர்வு வகைகளை ஆதாரமாகக் கொண்டே வாழ்க்கை நிலை வேறுபாடுகள் அமைவதாலே மனிதன் மனிதனாகப் பெற்ற நிமிர்ந்த உடம் பாலும், நல்ல மன உணர்வுகளினாலும் பொலிவு பெற்று வளமாகவும் நலமாகவும் வாழ்கின்றான். இந்த உணர்வும் உருவும் இல்லாமையாலே தான் ஏனைய உயிரினங்கள் வாழ்வு வெறுக்கத்தக்கதாக உள்ளது என்பது உண்மை.

இந்தக் கலையது முழு வடிவாக கலைகளின் நிலைக்களமாக விளங்கிய மனித வாழ்வில் அதிலும் எம் சிறப்புமிகு யாழ் மண்ணதில் குறிப்பாக தமிழர்கள் வாழ்விலே மலர்ந்து மணம் பரப்புகின்ற கணக்கற்ற கலை மலர்களின் பயன்பாடும், பண்பாடும் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக எங்கும் எதிலும் அன்றும் இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது.

அவர்கள் தம் வாழ்வை கலையோடு ஒன்றித்து செயற்பட்டு "உள்ளத்தை ஈர்ப்பது கலை என்றும் காண்பார். உள்ளத்தை ஈர்ப்பது கலை என்றும், காண்பார் உள்ளத்தை ஈர்க்கும் கலையாற்றலே கலைத்தன்மை யுடனான செயல் என்பதை பறைசாற்றி வாழ்ந்து கலையழகை வாழ்க்கையில் புகுத்தி கலையையும் வாழ்வியலையும் நகமும் சதையுமாக இணைத்து வாழ்கின்றனர். இந்த வகையிலே, நாம் உண்பதில் கலையுண்டு, உடுப்பதில்

கலையுண்டு, ஒவ்வொரு நாளிலும் செய்யும் தொழிலிலும் கலையுண்டு, ஒருவருக்கொருவர் ஒன்றைக் கொடுப் பதிலும் வாங்குவதிலும் கலையுண்டு, அன்பு செய்வதிலும் கலையுண்டு, அறம் செய்வதிலும் கலையுண்டு, ஆண்ட வனைத் தொழுவதிலும், அன்றாடக் கடமைகள் புரிவதில் கூட இக்கலை யுணர்வு மலிந்தே காணப்படுகின்றது. இந்த வகையிலே நாம் ஆராய்ந்தோ மானால் "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விற்கும் என் அம்மை" என்றும் தவப்பெருஞ் செல்வரான குமரகுருபர சுவாமிகள் கூற்று மெய்ப்படுத்தப்படுகின்றது. இந்த நான்கு கலைகளின் நிலைகளன் தான் மனித வாழ்வதன் குறிக்கோள். இவ் வாழ்வியலை நகர்த்த கலைக்கும் அறிவியலுக்கும் உள்ள வேறுபாடு களை உணர்ந்து கொள்ள வேண்டும். இதை பெற்று வாழவுள்ளவர்களே மனித வாழ்வின் முழு நிலையான எய்துந்திறன் உள்ளவர்கள். இதனால் எம் பண்பாடும் கலாசாரமும் சீரமைக்கப்படுவதுடன் வாழ்வதுவும் சீர்கேடற்ற நிலையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த வகையிலே எமது வாழ்வியல் வழக்கில் உண்ணும் கலையதை உற்று நோக்கும் போது வாழையிலையில் அறுசுவை படைத்து அருகருகமர்ந்து ஒன்றித்து விஷேட நாட்களில் கோயில் விஷேசங்களில் உண்டு ஒற்றுமையினை பறைசாற்றி நிற்கும் வேளையிலே மருத்துவக்கலை மூலம் அந்த வாழை இலையின் மகிமை புரிகின்றது. ஆம்! "வாழ்நாளிலே வாழையடி வாழையாக வாழ்ந்து வளர்க!" என்ற வாழ்த்துரை யதை பெற்றுக் கொள்ளாதார் எவரு மில்லை. காரணம் சந்ததியினர் உருவாகி தலையெடுத்துக் கொண்டே இருப்பார். இதே போலத்தான் வாழையின் அடியிலுள்ள கிழங்கு முதல் முடியாகவுள்ள இலைக்கொழுந்து வரை எல்லாப் பாகங்களும் மருத்துவக் குணம் நிறைந்தது! வாழைக்கிழங்கு சூட்டை தணிக்கும், தண்டு நச்சு நீரை அகற்றும். குடல் மயிரை வெளிப் படுத்தும், இலையில் வைத்து உண்பதால் தோல் மெருகேறி, மந்தம் உண்டாகாது இளைப்பு நீங்கும். பூ சீதப் போக்கை கட்டுப்படுத்தும். பிஞ்சு மூலக் கடுப்பை நீக்கும். காய் வயிற்றுளைச் சலைப் போக்கும். கனி உடல் வெளுப்பு அழல் நோய் அகற்றும் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வகையிலே உண்ணும் உணவையே மருந்தாகக் கொண்டு எமது சமையலறையை ஒரு வைத்தியசாலையாக மாற்றி, சுக்கு, மிளகு, சீரகம், பால், நெய், உப்பு என எம் வாழ்வியலில் நாம் உபயோகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும் உணவே மருந்தாகச் செய்ய சொல்கிறது. இன்றுவரை இதைக் கடைப் பிடித்து வாழ்வைக் கழிப்போர் உண்டு. இவ் வைத்தியங்களுக்கென்றே கைதடி வைத்தியசாலை இன்றும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இருந்தாலும் ஆங்கில வைத்தியம் பெற்றிடாத சிறப்பை விட மேலான சிறப்பை இவ்வைத்தியம் பெற்றுள்ளதன் காரணம் மக்களின் வருமான நிலை மந்தமும் சித்த மருத்துவத்தின் பலன் காரணமாக மீண்டும் மீண்டும் இம்மருத் துவக் கலை தழைத் தோங்கி நம் வாழ்வியலுடன் சங்கமிக்க வேண்டும்.

உடைக் கலையை நாம் உற்று நோக்குவோமானால், ஆடைகளை தைப்பது, ஆடைகளை தயாரிப்பது உடைக் கலையாக அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாக வகுத்துள்ளனர். மக்கள் வாழ்வியலின் தேவையின் முக்கிய பங்களிப்பது ஆடையே! "ஆடையற்றவன் அரை மனிதன்" என்பது முதுமொழி. ஆடை ஒருவனை மனிதனாக்கும், ஆனால் மகாத்மா ஆக்காது" என்பது ஆங்கில முதுமொழி.

ஆமாம் ஆள் பாதி ஆடை பாதி என்பது நாமறிந்த விடயம். இந்த வகையில் நாம் அணியும் ஆடைகள் எம் வாழ்நாட்களை அழகுறச் செய்யும். இன்ன இடத்திற்கு இந்த ஆடை பொருத்தமானது எனத் தெரிந்து நாம் அணியும் ஆடைகள் எமக்கழகா கின்றது. அவரவர் கலாசாரத்திற்கு ஏற்றவாறு அணியும் ஆடைகளை தெரிந்து உடுத்தி அழகு பெறுவது மட்டுமன்றி பெண்களும் ஆண்களும் எம் குடாநாட்டில் இதனைத் தொழிலாகக் கொண்டு பணம் சம்பாதிப்பதனை வழிநடத்துகின்றனர். இதனால் பல தையல் நிலையங்கள், காமென்ஸ் நெசவுசாலைகள் கைகொடுக்கின்றது. தரணியில் தையலர் வாழ்வியலை தரமான முறையில் தக்கவைக்க இத்தொழில் தனியிடம் பெற்றுள்ளது சிறப்புக்குரியது.

இதே போன்று யோகக் கலையை நாம் உற்று நோக்கினால் இன்று இதன் பெறுமதியோ வெகுமதியோ தெரியாது.

குடும்ப வாழ்க்கை குதூகலமாக இருக்க வேண்டிய வேளை குத்தாட்டம் போடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. "பாதை மாறிய கால்கள் எப்போதும் ஊர் போய்ச் சேருவதில்லை" என்பார்கள். இங்கு போதையில் வழி தவறியவர் களும் குடு ஹெரோயின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வைத் தொலைத்தோரும், சிறியோர் பெரியோர் என்றில்லாது வன்முறைக் கலாசாரங்களும், பாலியல் தொந்தரவு களும், மலிந்துவிடக் காரணமென்ன? முன்னோர் வாழ்வியலை கடைப் பிடிக்காமையே!

நம் பெரியார் ஏன் இந்தத் தவத்தை யோகக்கலை என விழித்து எமக்கு சொல்லியுள்ளனர். பிறப்பால் தம்மை உயர்வாகக் கருதும் பேதமை கொண்டோராலும் செருக்கு உடையோ ராலும் இதையொட்டி வாழ முடியாது. ஆனால் இதில் கூறப்படும் "ஒழுக்கம் விழுப்பம் தரும்" இருக்கை ஆதனமாக செயல்படும் வளிநிலை பேணினால் வாழ்நாள் நீளம் பெறும் புலனடக் கத்தால் புளங்காகிதம் பெறலாம். இவற்றை கடைப்பிடித்து இறை ஆசி பெற்று நிறைவு கொள்ளும் உள்ளம் எப்பவும் தப்பு செய்ய தூண்டப்படாது எனவே, தீயதை போக்கி நல்லதை செய்ய நாடும் அனைவருடனும் யோகக் கலையும் நீடிக்கும்.

உடலும் உள்ளமும் நலம் பெற நல்லுள்ளம் நிலைத்திட வாழலாம். கடை வாயிலைச் சாத்தி காற்றை மேலே எழுப்பி, இறையை சிந்திக்கும் போது இன்பம் பெருக வாழலாம். வழி கேட்டு பாதை செல்வதை தடுக்கலாம். இதேபோன்று வாழ்வியலுக்கான வரவுகளை தந்து கொண்டிருக்கும் கட்டிடக் கலையில் கைதேர்ந்தோர் வாழ்வும் சிறந்து விளங்குகின்றது. வீட்டுக்கொரு கட்டிடக் கலைஞர்கள் இருந்து அதன் மூலம் உழைத்துத் தம் குடும்பத்தை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றனர். நம் கலைஞர் களின் அறிவுக்கு எட்டியவாறு யாழிலே உள்ள கட்டிடங்கள், இல்லங்கள், கடைத்தெருக்கள், வைத்தியசாலைகள் என ஏராளம் தாரளமாக காணப்படு கின்றது. இது போன்று இறையச்சம் மிளிர செய்யும் சிற்பக் கலையும் எம் மண்ணுக்கு பெருமை சேர்த்து விட்ட பெருமையில் கோயில்களில் வைக்கப் பட்டுள்ள சிற்பங்கள் சிறப்பு பெறுகிறது. நல்லூர், கீரிமலை கோயில்களின் சிற்பங்கள் சிரித்து நிற்பது சிற்பிகள் திறமைக்கோர் உதாரணம். சிற்பங்கள் இல்லா இடமில்லாதளவு தரைசுவர், விமான கோபுரம், மண்டபம், தூண்கள் என மிளிர்கின்றது. வாயில் நிலைகள், விதானம் சிற்பம் நிறைந்து காணப் படுகின்றது. இது இவர்களுக்கு பக்தியை உண்டு பண்ணி முக்தியை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக ஓவியக்கலை, இசைக் கலை, நடனக்கலை, நாடகக்கலை, மொழிக்கலை, இலக்கியக்கலை, சோதிடக்கலை, வானநூற்கலை, மடைநூற் கலை, போர்க் கலை, அறநூற் கலை, விளையாட்டுக்கலை, ஒப்பனைக் கலை, தச்சுக்கலை, நீதிக்கலை, மந்திரக் கலை, ஆய்வுக்கலை, தூதுக்கலை, கல்விக்கலை, பயணக்கலை, சமயக் கலை, திருவிழாக்கலை, திருமணக் கலை, தத்துவக்கலை, சகுனக்கலை, தம்பலக்கலை, பொறியியற்கலை என்று ஆய கலைகள் அறுபத்தி நான்கில் சிலதை ஆராய்ந்து வாழ்க்கை வாழ்வதற்கே! என்பதற் கமைய நல்ல குடும்பம் பல்கலைக் கழகமாக வாழ்ந்து குடும்பத்தின் கலைக்கொடி மனைவியும் அக்கொடி படரும் கொம்பு கணவனும் ஒன்று சேர்ந்து கொடியின் வளர்ச்சியில் மலர் காய் கனி விளைவது போல வாழ்வியல் விளைச்சலில் புகழ் மலர், பொருட் செல்வம் பிள்ளைகள் பெற்று மகிழ்ந்து கணவன் கொண்டு வருவதை திருப்தியுடன் ஏற்று மனைவி மகிழ் வதுமே நல்ல குடும்ப வாழ்வியலின் அடையாளம்.



எனவே “ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை போகாறகலாக் கடை” என்னும் குறட் பாவுக்கமைய வாழ்வியலில் வழிமுறை கலைப் பேற்றால் “கடமையுணர்ந்து வாழ்ந்து”, “கடன் படாது வாழ்ந்து”, “இடும்பை தவிர்ந்து” இன்பத்துடன் அறநெறி நின்று அன்பு செய்து வாழ்வியலை சிறப் பிப்போம். உயர்வு பெற்று வாழ்வோம்.

## யாழ் ரத்னா விருது - 2023

**(பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)**

1) ***திரு. அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா - கவிதை***

2) ***திரு. அலெக்ஸ்சாண்டர் அன்ரனி றொபின்சன் - கூத்து***

3) ***திரு. எமிலியானுஸ் அன்ரன் எல்மோ - நாடகம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அன்னை






செல்வன் நந்தகுமார் டனிசன்
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

**திருக்குறள் கட்டுரைப் போட்டி கீழ்ப்பிரிவு முதலாம் இடம்**

இயற்கை அன்னை எமக்குப் பலவிதமான அன்பளிப்புக்களைக் கொடுத்திருக்கிறாள். உலகிலேயே விலைமதிப்பற்ற ஒரு பொருள் இருக்கிறது என்றால் அதுவே உயிர். இது உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும். " பிறப்பு, வாழ்வு, முடிவு" ஆகியவற்றை நாம், நாம் வாழும் நிலத்தில் நடைபெறுவதை அறிந்திருப்போம்.

எமக்கு இயற்கை அன்னை வழங்கிய சிறந்த அன்பளிப்பாக "நிலம்" கருதப்படுகிறது. அந்த நிலத்தில் தான் மழைநீர் வழிந்து ஓடும். மழை நீரானது மலையில் விழுந்து காடுகளைக் கடந்து நிலத்தில் வழிந்தோடி இறுதியாக கடலில் கலக்கிறது. இந்த விடயம் எமக்கு முன்னோர்கள் கற்பித்துத் தந்த பாடமாகும். "நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்" ஆகிய பஞ்சபூதங்களை "நாம் காத்தால் அவை எம்மை நன்றாகக் கவனித்துக் கொள்ளும்" எனும் முக்கிய விடயத்தை இந்த தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும்.



**"இயற்கையை நீ காத்தால்**
**இயற்கை உன்னைக் காக்கும்"**

இந்தக் கூற்று மிகவும் வண்ணமயமாகும்.


உலகெங்கும் சூழல் மாசுபட்டு வருவதை பலர் கூறி வருகிறார்கள். எம்மை அச்சுறுத்திக் கொண்டிருந்த "கொரோனா" எனும் தொற்று நோய் கூட சூழல் மாசுபடுவதால் உருவாகி இருக்கலாம் எனக் கூறப்பட்டு வருகின்றது. இப்பொழுது படைமண்டலத்தின் ஒரு முக்கிய சிறப்பம்சம் ஆனதும் சூரியனின் நச்சுக் கதிர்களிடம் இருந்து பாதுகாத்து வரும் "ஓசோன் படையில் பல துவாரங்கள் விழுந்து விட்டன. இதனால் எமது புவியில் இந்த சூரியக் கதிர்கள், சூரியனின் அதிக வெம்மை காரணமாக "தோல் நோய்கள், பனிமலைகள் உருகும் அபாயம்" உண்டு என சுற்றுச் சூழலியல் விஞ்ஞானிகள் தமது அச்சத்தை இன்று வரை தெரிவித்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாவில் முதன்முதலில் கால் வைத்த மனிதன் கூட இப்பொழுது அவன் தனது வீட்டிற்கு வெளியே கூட கால் வைக்க அஞ்சும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த "தொழிற்சாலைக் கழிவுகள், வாகனப் புகைகள்" போன்றவற்றால் "நிலம், நீர், காற்று" என்பவை மாசுபட்டு வருகிறது. இப்பொழுது சற்று நாட்களுக்கு முன் இலங்கையில் ஒரு சூறாவளியின் பாதிப்புக்கள் அதிகம் காணப்பட்டன. அந்த சூறாவளி உருவாகக் காரணம் தொழிற்சாலையின் நச்சு வாயு வளிமண்டலத்தில் கலந்தமை. ஆகவே இந்த விடயத்தைக் கூறக் காரணம் சூழல் மாசடைவதால் " சீரற்ற காலநிலை, சமமற்ற சூழல்" எனப் பல பிரச்சினைகள் உருவாகும் என்பதை அறியத் தருவதற்குத் தான்.

இயற்கை வளத்தின் பெருமையைப் பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோரில் சிறந்தவரான திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதை இன்று நினைத்துப் பார்க்கும் போது மிகவும் வியப்படையச் செய்கிறது.



**"புறத்தூய்மை நீரான் அமையும்**
**அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்"**

இவர் புறத்தூய்மை நீரால் அமையும் என குறிப்பிட்டுள்ளார். ஆகவே புறத்தை தண்ணீரால் கழுவி சுத்தமாக வைத்திருப்பதை வலியுறுத்துகிறார்.

**"நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் – தடிந்தெழிலி**
**தன் நல்கா திகவிடின்"**

நெடுங்கடலும் வான்மழை இல்லையேல் வற்றிப்போய் விடும். அவ்வாறு வற்றிப் போவதால் கடலின் உப்புத் தன்மை அதிகரித்து அக்கடலில் கடல்வாழ் உயிரினங்கள் வாழ முடியாத ஒரு நிலை உருவாகுவது மட்டுமன்றி கடல் அற்புதங்களான முத்துக்கள்,பவளங்கள் குறையும்.

**"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால்**
**சான்றோர் குழா அத்துப்பேதை அகல்"**

அதாவது சான்றோர்கள் பலர் கூடியிருக்கும் இடத்தில் ஒரு அறிவில்லாதவன் நுழைகின்ற போது அவன் தூய்மையில்லாதவற்றை மிதித்து கால் கழுவாமல் அவனது நித்திரை செய்யும் படுக்கையில் கால் வைத்தது போல். இதிலிருந்து நாம் கிருமிகள் அண்டாதவாறு எம்மையும் மற்றவர்களையும் கவனித்து சுத்தமாக வாழ வேண்டும் எனக் கூறுகிறார் திருவள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“நீர் இன்று அமையாது உலகெனின் யார்**

**யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு”**

நீர் இல்லாமல் உலகம் வாழமுடியாததென்றும் அந்த நீரைத் தருகின்ற வான்மழையின்றி மனிதர்களின் ஒழுக்கம் குறையும் என்றும் சுத்தமாகவும், ஒழுக்கமாகவும் வாழ்வதற்கு கண்ணீரும், வான்மழையும் வேண்டுமென்று பேசுகிறது வள்ளுவம்.

மரங்கள் இந்த உலகில் குறைந்து வருவதால் புவியின் வெப்பம் பன்மடங்கு அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்து மனிதர்களின் உடல் உஷ்ணம் அதிகரிப்பதால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மலட்டுத் தன்மை ஏற்படும். இதனால் பல சோகங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும். இப்பொழுது மனிதர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மனிதர்கள் சுவாசிக்கத் தேவையான வளி கிடைக்காது. இவ்வாறு அளவு கணக்கின்றி மரங்களை வெட்டிச் சாய்ப்பதால் காட்டு விலங்குகள் வாழ இடமின்றி ஊர்களுக்குள் புகும். ஆகவே வாழ இடமின்றி அங்குமிங்கும் தத்தளிக்கின்றன. இவற்றால் ஒரு மனிதனின் ஆயுட்காலம் சராசரி நாற்பது ஆண்டுகளாக மாறிவிடும்.

இயற்கை அன்னை எமக்கு வரமாகத் தந்த விவசாயப் பயிர் நிலங்களில் இரசாயனப் பசளை உபயோகிப்பதால் நெல், சோளம் விளையும் நிலங்களில் நஞ்சு பரவிவிடும். இவ்வாறு மாறி விட்டால் சற்றுக் காலத்தில் உணவுகளை எல்லாம் மாத்திரை வடிவில் தான் பார்த்து மாத்திரைகளை உண்ண வேண்டும்.

இவையெல்லாம் மனிதர்களை அச்சுறுத்துவதற்கு அல்ல. பூமித்தாயிற்கு நீங்கள் தொடர்ந்து செய்து வரும் பாவத்தால் இவையெல்லாம் சந்திக்க நேரிடும். ஆகவே இந்தத் தலைமுறைக்கு வளர்ச்சி என்ற பெயரில் வளங்கள் அனைத்தையும் அழித்து வாழப் போகிறோமா?

இயற்கை அன்னையை மாசு படுத்தாமல் பூமித்தாய் மீது குப்பைகளைப் போட்டு அவளை கண்ணீர் சிந்த விடாமல் மரம், செடி, கொடிகளை வளர்த்து இயற்கையைக் காப்போம்.



**இயற்கையை நேசிப்போம்!**

**இன்பமாய் சுவாசிப்போம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சத்தமில்லா யுத்தம்

செல்வி. ஆ. பீ. கிறேஸ்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
K.K.P. இளைஞர் கழகம்
யாழ்ப்பாணம்.

கால்கடுத்த வலியோடு சாக்கின் மேல் சிறு துணி விரித்து, சரிந்து படுத்தபடி தனது வீட்டின் கூரைமேல் உள்ள ஓட்டை விரிசல்களை பார்த்துக் கொண்டிருந்தால் கோமதி. இன்னும் எத்தனை நாட்கள் இந்த ஓட்டை வீட்டினுள்ளும், அச்சரக்கு அற்ற கதவுகளுக்கு அருகிலும், உடை மாற்ற அறை கூட இல்லாத இந்த இடத்தில் என் பிள்ளைகளின் வாழ்நாட்கள் இன்னும் எத்தனையோ....., தன் பிள்ளைகளின் கனவுகளுடன் கண்களில் கசியும் கண்ணீர்களை மறைத்தவளாய் தன் வீட்டு நிலை நினைத்து நினைவில்லாமல் மௌனமாய் மனதிற்குள் பேசிக்கொண்டிருந்தாள். தன் வாழ்க்கையும் வாழும் இந்த நாட்களில் மாறும் விலைவாசிகளையும் எவ்வாறு சமாளித்து கடப்பது என்ற கவலை அவளுக்கு இப்போது இருந்தது.

துப்பாக்கிச் சத்தத்தில் துயில் எழும்பிய காலங்களை மறந்து, விடிந்தால் விலை ஏறுமோ என்ற பதட்டத்தில் கத்தியின்றி இரத்தமின்றி ஒரு சத்தமில்லா யுத்தம் ஒன்று அவள் மனதில் தினம் தினம் நடந்துகொண்டிருந்தது. இப்படியான நேரங்களில் அவள் தனது கணவனை நினைத்து கொள்வது அதிகம். ஒவ்வொரு நாளும் நடக்கும் இந்த வாழ்க்கைப் போராட்டத்தில் எத்தனை சவால்கள், நீ என்னுடன் இருந்திருந்தால் இப்படி இருந்திருப்போமா என்ற ஏக்கங்கள் மௌன கேள்விகளாய் இறந்த அவள் கணவனின் புகைப்படத்தை நோக்கி கேட்பது அதிகமாக இருந்தது. ஆனாலும் தனது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த பயம் அவள் ஆழ்மனதை உலுக்கியபடி அவளிடம் ஒட்டிக் கொண்டே இருந்தன.

இரவில் அவள் நன்றாகத் தூங்குவதில்லை. தூங்கும் பிள்ளைகளின் கனவுகளை தனது கண்களில் சுமந்தபடி எதை எதையோ சிந்தித்துக் கொண்டிருப்பாள். கோமதிக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவள் பட்டப்படிப்பு படித்து வந்தாள். இளையவள் நன்றாகப் படிப்பாள். ஆனாலும் அவளுக்கு பட்டப்படிப்பிற்கான புள்ளிகள் கூடிய அளவு கிடைக்காததினால் பள்ளிப் படிப்பை நிறைவு செய்து கொண்டு வேலை செல்ல ஆரம்பித்தாள். இவர்கள் இருவருக்கும் கடைசியாக மகன் ஒருவன் இருந்தான். அவன் பள்ளிப் படிப்பை தொடர்ந்த நிலையில் இருந்தான். அவனை ஒரு வைத்தியனாக்கும் கனவுடன் கோமதி அவனை நன்றாகப் படிக்க வைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவளும், இளையவளும் படிக்க, கோமதியும், இளைய மகளும் வேலைக்குச் சென்று அதில் வரும் சம்பாத்தியத்தில் தமது தேவைகளை நாளாந்தம் பூர்த்தி செய்து வந்தார்கள். இப்படியே இவர்களின் பாடு கடந்து சென்றது. நாளும் கிழமையும், நாட்டுவாசி நடப்புகளும் மாறி மாறி ஓடிக்கொள்ள இதில் கோமதியின் பாடோ பெரும் பாடாய் இருந்தது. இளையவனுக்கு படிப்பு உலகமாயிருந்தது. கோமதியின் கனவுடனே அவன் படித்துக்கொண்டிருந்தான். பாடசாலையை தவிர அக்கம் பக்கங்களில் அவனை தெரிய வாய்ப்புக்கள் இல்லை. பள்ளியும் படிப்புமாய் எப்போதும் இருப்பான்.

கோமதியின் மூத்தவள் கலகலப்பானவள். அவள் அவளின் தம்பியின் பழக்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டவள். அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவாள். அவளைச் சுற்றி எப்போதும் ஒரு அன்பின் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். நட்பின் வட்டாரம் அவளுக்கு பெரிது. தனது கலகலப்பான பேச்சினால் சிறியவர் முதல் பெரியவர் வரை தன்வசம் ஈர்ப்பவள். பண்பினைப் போல் படிப்பிலும் கெட்டிக்காரி. தந்தையின் மரணத்திற்குப் பின் தனது ஆசைகளை மறைத்தவளாய் குடும்ப பொறுப்புள்ளவளாய், பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்தவள் பக்குவமாய் உருமாறினாள்.

அவளின் குறும்புத் தனங்கள், அகங்காரங்கள், பிடிவாதங்கள் எல்லாம் தந்தையின் சமாதி பெட்டியினுள்ளே வைத்து அனுப்பி விட்டாள். தனது தாயின் நிலை அறிந்து தனக்குப் பின் உள்ள உறவுகளின் நிலையை தான் உயர்த்த பகல் இரவு விழித்து கஸ்ரப்பட்டு படித்து வந்தாள். இளைய மகளும் நன்றாகத்தான் படித்து வந்தாள். ஆனாலும் மேற்கொண்டு அவளால் படிக்க முடியவில்லை. இருவரின் படிப்பிற்கு கோமதியின் சம்பளம் போதுமானதாக



இருக்கவில்லை. இதை மனதில் வைத்து நானும் படிப்பை மீள் தொடர்வதா என எண்ணி வீட்டின் சுமையைக் குறைக்க அவளும் வேலைக்குச் சென்றாள். இருவரின் உழைப்பிலும் கோமதியின் குடும்பம் நகர்ந்தது.

கோமதி ஒருவரிடமும் கஸ்டம் என கையேந்தி நிண்டதில்லை. தன்னிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு அவள் கைகொடுக்க என்றும் மறுத்ததில்லை. தனக்கு என்று எதையும் ஒதுக்கி வைத்து கொண்டதில்லை. அந்த ஓட்டை வீட்டினுள் வாழ்ந்தாலும் கேட்போருக்குக் கொடுப்பதில் அவள் பலருடைய மனங்களில் மகாராணியாகவே வாழ்ந்து வந்தாள். அவளுக்கு அவள் மூன்று பிள்ளைகளுமே உலகமும், வசந்தமுமாய் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபேர் வந்து “உனக்கென்ன, உன்னால மட்டும் எப்படி இப்படி வாழ முடியுது என ஒரு எக்காள பேச்சுடன் பேசுவது அதிகம். புருசன் இருக்கிற எங்களால் இப்படி வாங்கி சாப்பிட முடியாமல் இருக்கு, நீ விதம் விதமாய் சாப்பாடு என்ன, பிள்ளைகள் போடுற உடுப்புக்கள் என்ன? பிள்ளை படிக்கிற படிப்புக்கள் என்ன? என்ற நக்கல் பேச்சுக்கள் சில நரம்பில்லா நாவுகள் அவளைப் பார்த்துக் கேட்பதும், போகவிட்டு புறம் கதைப்பதும் அவள் வசித்த இடம்தனில் காணப்பட்டது.

ஆம்பிள்ளை இல்லா வீட்டினுள் அடிக்கடி பலபேர் வருகை, கார்கள் என அவள் வீட்டு வாசலில் வண்டிகள் என்ன? சொந்தமா, பழக்கமா, உற்றாரா, உறவினரா? இருந்து கதைக்க இருக்கைகள் இல்லா அவள் வீட்டில் சிரிப்புகளும், வருகைகளும். அப்படி இந்த ஓட்டை வீட்டினுள் என்னதான் இருக்கோ என்ற கிசுகிசு முணுமுணுப்புக்கள், தண்ணீர் நிரப்பவரும், பெண்டுகளின் வாய்களுக்கு கச்சான் சாப்பிடுவது போல் இருந்தது.

பாவம் அவள் இளவயதில் கணவனை இழந்தவளாய் தனது கனவுகளை சிதைத்தவளாய் தன் பிள்ளைகளின் கனவுகளுக்காக எதையும் கண்டுக்காமல் வாழ்ந்து வந்தாள். விடிந்தால் தன் பிள்ளைகளுக்கு என்ன சமைப்பது, அவர்களுக்கு பிடித்தது என்ன? என்பது தான் இவளின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் பிரச்சினையாக இருந்தது. மழை வந்தால் நாலாபுறமும் ஒழுகும் வீட்டை எண்ணி அவளுக்கு பெரும் கவலை. வைத்திய கனவுடன் நகரும் மகனை எண்ணிய மனக்கவலையும், மூத்தவளின் படிப்பும் அவள் பட்டம் பெறும் நாட்களை எண்ணி அவள் வருத்தமும் அதிகமாய் இருந்தது. சிறகு விரித்து பறந்து திரியும் வயதில் சிரிப்பை மறந்து சின்ன வயதில் வேலையும், பொறுப்பும் என பொழுதை கழித்திடும் இளைய மகளுக்கு எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற பதட்டம் அவளின் பக்கத்தில் எப்பவும் அமர்ந்து கொண்டே இருந்தது.

இப்படி நெஞ்சில் பதித்த கவலைகளைக் கடக்கும் நாட்களுடன் கண்ணயர்ந்துக் கொள்ளும் தருணங்களில், கண்ணீர் கசிவுகளுடன் மறைத்து விட்டு தூங்குவாள். உலைப்பானை அடுப்பில் வைத்து தினம் தினம் சமைப்பதில் உள்ள சிரமமும், அதில் மறைந்த துயரமும் யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. இரவுகளில் அவள் கண்ணீர்களை ஏந்தும் தலையணைகள் மட்டும் அறிந்திருக்கும் தினம் தினம் அவள் மனதில் நடக்கும் சத்தமில்லா யுத்தம்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "ஹைக்கூ" என்றால்.......?



சிறீ சிறீஸ்கந்தராசா,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

முதலில் கவிதை என்றால்.....?

உணர்வு, கற்பனை நயம், உவமை, உருவகம், பொருள்வளம்

கவிதைக்கு வேண்டும்.

சொல்லில், பொருளில், உருவகத்தில், உவமையில்

அமையும் கற்பனைச் சிறப்பு வேண்டும்.

மரபுக் கவிதையாயின் இவற்றுக்கும் மேலாக

சீர், தளை, எதுகை, மோனை, சிறந்திருக்க வேண்டும்.

சொல்லும் செய்திகள்....

நல்ல சிந்தனைகள், நல்ல எண்ணங்கள்

பாடுபொருளாக இடம் பெறவேண்டும்.

"உழவன் சேற்றில் கால் வைக்காவிட்டால்,

நாம் சோற்றில் கை வைக்க முடியாது

(சொல்லில் கவித்துவம்)

"மண்ணில் வந்த நிலவே - என்

மடியில் பூத்த மலரே"

(உருவத்தில், உவமையில் கவித்துவம்)

"குனிந்து வளைந்து பெருக்கிச் சென்றாள்

வீடு சுத்தமாச்சு மனம் குப்பையாச்சு"

(பொருள் கவித்துவம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ கவிதை என்றால்.....?

"ஹைக்கூ" இந்தக் கவிதை வடிவம் ஜப்பானிய மண்ணில் தான் முதன் முதலில் கருக்கொண்டதாக வரலாறு. மூன்று சங்கங்கள் வைத்து தமிழை வளர்த்தனர் நம் முன்னோர்.

அதேபோல ஜப்பானிய இலக்கிய வரலாற்றை அதன் தலை நகர் மாற்றத்தின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர் இலக்கிய ஆய்வாளர்கள்.

### பிரிவு - 1

நாராக்காலம் (கி. பி. 700 முதல் 794 வரை)

இக்காலத்தில் "சோக்கா" என்ற கவிதை வடிவம் வழக்கத்தில் இருந்தது.

அடுத்தடுத்து அடிகள் 5,7 என்ற அசை அமைப்பிலும், கடைசி இரண்டு அடிகள் 7,7 என்ற அசை அமைப்பிலும் இருந்தன.

"சோக்கா" கவிதைக்கு வரிவரம்புகள் எதுவுமில்லை. ஆனாலும் மக்கள் இதனை விரும்பி இரசிக்கவில்லை.

### பிரிவு - 2

ஹயன் காலம் (கி. பி. 794 முதல் 1192 வரை)

இக்காலத்தில் "சோக்கா" என்ற நீண்ட கவிதை "தன்கா" என்ற 5 வரிப் பாடலாகச் சுருங்கியது.

5,7,5,7,7 என்ற அசை அமைப்பில் "தன்கா" கவிதை தன்வடிவத்தை அமைத்துக் கொண்டது.

### பிரிவு - 3

காமெக்கூரா காலம் (கி. பி. 1192 முதல் 1332 வரை)

இக்காலத்தில் "ஜாக்கின்சூ" என்ற செய்யுள் தொகை வடிவம் பிறந்தது.

கடுமையான இலக்கணங்கள்

இந்தக் கவிதையும் மக்களிடையே போதிய வரவேற்பைப் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரிவு - 4**

நான்போக்குச்சாக் காலம் (கி. பி. 1332 முதல் 1603 வரை)

இக்காலத்தில் "நோஹு" என்ற இசை நாடக சமய சமுதாயக் கவிதைகள் வெளிவந்தன.

**பிரிவு - 5**

எடோ காலம் (கி. பி. 1603 முதல் 1863 வரை)

இக்காலத்தில்தான் சீன ஜப்பான் மொழிக் கலவையாக "ஹைக்கூ" கவிதை தோன்றியது. மூன்றே மூன்று அடிகள் 5,7,5 என்ற அசை அமைப்பில் அமைந்தன.


**பிரிவு - 6**

டோக்கியோ காலம் (கி. பி. 1863 க்கு அடுத்தது)

ஹைக்கூ கவிதை உலகெங்கும் பரந்து பிரெஞ்ச், ஆங்கிலம் எங்கும் செறிந்து பின்னர் தமிழுக்கும் வந்துவிட்டது.

ஆரம்ப காலத்தில் "ஹைக்கூ" கவிதை "ஹொக்கூ" என்றே அழைக்கப்பட்டது பிறகு "ஹைகை" என்று திரிந்து "ஹைக்கூ" என்றாயிற்று.

"ஹைக்கூ" என்றால் "அணுத்தூசி" போன்ற சிறிய கவிதை என்று பொருள் கொள்வர்.



தமிழில் ஹைக்கூ கவிதையானது......

துளிப்பா, குறும்பா, சிந்தர், கரந்தடி, விடுநிலைப்பா, மின்மினிக் கவிதை, வாமனக் கவிதை, அணில்வரிக் கவிதை என்று பலவாறாக அழைக்கப்படுகின்றன.

கடுகளவு உருவில் சிறியதாக இருந்தாலும் பூமியளவு பரந்த விடயத்தை உள்ளடக்கியது இந்த ஹைக்கூ கவிதை வடிவம் என்றால் அது மிகையன்று

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த ஹைக்கூ"
(புலவர் இடைக்காடர் பொருத்தருள்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைக்கூ கவிதை என்பது முதல் வரியில் 5 அசைகளையும்
இரண்டாவது வரியில் 7 அசைகளையும்,
மூன்றாவது வரியில் 5 அசைகளையும் தாங்கி நிற்கும் மூன்று
வரிகளில் பதினேழு வார்த்தைகள் என்ற விதியுமுள்ளது.
ஜப்பானிய மொழியில் "ஓஞ்சி" என்றழைக்கப்படுகின்றது.

ஜப்பானிய மொழியில் ஒவ்வொரு எழுத்தும் ஓர் அசை என்ற
கணக்கில் தான் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஆரம்ப காலத்தில்
இந்த 5,7,5 என்ற அசை அமைப்பு முறையாக கடைப் பிடிக்கப்பட்டது.
காலப்போக்கில் இந்த 5,7,5 என்ற அளவு கோலும் அருகிப் போயிற்று.

ஜப்பானிய கவிஞர்கள் மோரிடேகே (1473 - 1549)
மற்றும் சோகன் (1465 - 1553)
ஆகியோர் ஹைக்கூ கவிதையின் முன்னோடிகள்
என்றழைக்கப்படுகிறார்கள்.



"உதிர்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறதோ?...
வண்ணத்துப்பூச்சி"
(மோரிடேகே)
"நிலவிற்கு ஒரு
கைப்பிடி வைத்தால்.....
எத்துனை அழகான கைவிசிறி"
(சோகன்)

இந்தச் சிறுவடிவத்தைப் பற்றி அதிகளவில் சிந்தித்தவர்
நமது சிறுகதைச் சித்தர் சுஜாதா ஆவர்.

"ஹைக்கூ என்னும் கவிதை வடிவம் ஜப்பானிலிருந்து நமக்கு
வந்து, தமிழுக்கு ஏற்ப மேலும் மாறி, மிகமிக பிரபலமாகி,
சுலபமாக்கப்பட்டு, நிஜ ஹைக்கூக்கள் அடையாளமிழந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச்சாயம் ஏற்றிய, மூன்று வரிகளில் எழுதப்பட்ட எல்லாக் கவிதைகளும் ஹைக்கூ என்கிற கேவல நிலைக்கு வந்துவிட்டதால், உண்மையான ஹைக்கூக்களை அடையாளம் கண்டுகொள்ள இந்த மாதிரியான புத்தகங்கள் தேவை என்று தோன்றி இது எழுதப்பட்டது. இதைப் படித்தபின் பல ஹைக்கூக்கள் எழுதப்படாமல் இருந்தால் இப்புத்தகத்தின் குறிக்கோள் நிறைவேறுகிறது"

இது ஹைக்கூ - ஒரு புதிய அறிமுகம்" என்ற புத்தகத்திற்கு சுஜாதா எழுதிய முன்னுரிமை.

ஒரு சில வார்த்தைகள் மூலம் அனுபவம் அல்லது உணர்ச்சி கடத்தல் ஹைக்கூ என்று கருதுகின்றார். உங்கள் சிந்தனை என்னும் நீர்ப்பரப்பில் எறியப்படும் ஒரு சிறிய கல் "ஹைக்கூ" ஆகும்.

இவ்வளவு விலை கொடுத்து இதனை ஏன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்தார்கள் என்பது இன்னும் புதிராகவே இருக்கிறது!!

மீண்டும் சுஜாதா சொன்னதை நினைவுகூர்வோம்.
".....மூன்று வரிகளில் எழுதப்பட்ட எல்லாக் கவிதைகளும் ஹைக்கூ என்கிற கேவல நிலைக்கு வந்துவிட்டதால், உண்மையான ஹைக்கூக்களை அடையாளம் கண்டு கொள்ள இந்த மாதிரியான புத்தகங்கள் தேவை என்று தோன்றி இது எழுதுப்பட்டது.

இதைப் படித்த பின் பல ஹைக்கூக்கள் எழுதப்படாமல் இருந்தால் இப்புத்தகத்தின் குறிக்கோள் நிறைவேறுகின்றது.


**சிறந்த நூலுக்கான விருது - 2022**
**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடக்கு மாகாணம்)**
**திரு. யோசேப் யோண்சன் ராஜ்குமார் - நாடகம்**
**(ஜீவப்பிரயத்தனம் - நூல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமுதாயத்தில் பெண் விடுதலை





**செல்வி. ஜெ. ஜென்சியா**

**தரம் - 13**

**யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

முன்னேறிக் கொண்டிருக்கும் இவ்வுலகிலே மனித சமுதாயம் பல அபரிமிதமான சாதனைகளை நாளுக்கு நாள் எட்டிக் கொண்டிருக்கிறது. இயந்திர வாழ்வியலிலே வாழும் நாம் மனநிலை என்ற விடயத்தில் விலங்குகளை உடைத்து வெளிவரத் தெரியாமல் காலத்தை வீணாகச் செலவு செய்கிறோம். இங்கு நாம் நிஜமாகவே சுதந்திரமான விடுதலை பெற்ற மனநிலை, வாழ்வியல், சூழல், சூழ்நிலைகளில் இருக்கின்றோமா என்று கேட்டால் புடைத்தெழுகிறது அச்சம். இங்கே பொது விடுதலை பற்றி பேச முனைந்தால் முதலில் பெண் விடுதலை பற்றி பேசியே ஆகவேண்டும்.

விடுதலை என்பது நெருப்புக்கு நிகரான ஒரு உணர்வு. இதனை அத்தனை சீக்கிரத்தில் உணர முடியாது. சுடர்மிகு அறிவுமிக்க மக்களால் குரல் கொடுக்கப்படுவது இன்றும் வன்முறையும், வறட்டு கௌரவமும், மூட நம்பிக்கைகளும் கொண்ட சமுதாயத்திலே ஏற்கப்படாததொன்று. இதில் பெண் விடுதலை என்பது காலத்துக்குக் காலம் முழுமையாக சீர்செய்யப்படாததால் மீண்டும் மீண்டும் இரை மீட்கப்படும் கருத்தியலாக உருவெடுத்துள்ளது.

**"பெண்ணுக்கு பேச்சுரிமை வேண்டாம்**
**என்கின்றீரோ மண்ணுக்கு கேடாய்**
**மதித்தீரோ பெண்ணியத்தை**
**பெண்ணடிமை தீருமட்டும் பேசும்**
**திருநாட்டு மண்ணடிமை தீர்ந்துவரல்**
**முயற்கொம்பே"**

என்ற கவிஞர் பாரதிதாசனின் உணர்ச்சி வரிகளுக்கு இணங்க பெண் விடுதலை பற்றிச் சிந்திப்பது அவசியமான ஒன்றாகும்.

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்ற பொய்ப் பேச்சுக்களை எல்லாம் கொண்ட இச் சமூகத்திலே நடைமுறையில் பெண்கள் மதிக்கப்படுவதில்லை. இங்கே பதிவிரதையான கண்ணகி தனது கணவன் கள்வன் அல்ல என்று கூறும் போது ஊர் நம்பவில்லை. மகாபாரதத்தில் பாஞ்சாலி கௌரவர்களால் சபையின் முன்னே துகிலுரியப்பட்டாள். நளனை நம்பிச் சென்ற தமயந்தி நடுக்காட்டில் தவிக்கவிடப்பட்டாள். இராமாயணத்தில் சீதையின் கற்புக்கு பரிசோதனை வைத்தான் இராமன். அறியாமையால் செய்த தவறுக்கு கல்லாக்கப்பட்டாள் அகலிகை. இவை எல்லாம் புராணம் கூறும் கதைகள். இப்படி எத்தனையோ கொடுமைகள் காலம் கடந்தும் இன்றுவரை நடந்து கொண்டு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. திரைக்கு முன்னால் காட்டப்பட்ட காவியத் தலைவிகளின் நிலை கூட கவலைக்கிடமாகவே உள்ளன. இப்படி இருக்கும் போது திரைக்கு பின்னால் எத்தனை காவியங்கள் அழிக்கப்பட்டிருக்கும்? எனவே பெண் விடுதலை என்பது முழுமையாக பெற்று விட்ட ஒரு பொருள் அல்ல. பெறுவதற்கு முயன்று கொண்டிருக்கும் ஒரு பொருள்.

உலகத்தை அறியா வண்ணம் வீட்டினில் பெண்களை பூட்டி வைத்த கொடுமையும் இங்கே அரங்கேறியிருக்கின்றது. கணவனை இழந்த பெண்ணைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கி, அழகுக் கோலங்களை சிதைத்து, மொட்டையடித்து, உடன் கட்டையும் ஏற்றினர். இவை அனைத்தும் ஆண்களுக்கு நடந்ததா? என்று கேட்டால், இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. அடிமையாக கிடந்த பெண்கள் இன்று வரை கட்டாயத் திருமணம், குழந்தைத் திருமணம், காதல் திருமணத் தடை, சீதனக் கொடுமை, பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு முகம் கொடுக்கின்றாள் என்பதும் உண்மையே. இதனைப் பாரதியார் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்**
**மாட்டும் வழக்கத்தை கொண்டு வந்தே**
**வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்...."**
**"நல்ல விலை கொண்டு நாயை விற்பார் அந்த**
**நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?**



இதற்கிடையே பெண்களை தாழ்த்துவதற்கென்றே சில விமர்சகர்களும் கவிஞர்களும் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்கள். படைப்புக்களை உருவாக்குவதாக சொல்லிவிட்டு பெண்களை அவதூறு செய்கிறார்கள். பெண்களின் ஆடை அணிகலன் நாகரீகத்தை கேவலப்படுத்தி வக்கிரகத்துக்கு வடிகால் செய்கின்றனர். இன்னுமொரு விடயத்தைப் பற்றிக் கூறுவதற்கு வெட்கிக்கிறேன். பெண் ஒருவரின் வளர்ச்சியை இன்னுமொரு பெண்ணே தாழ்த்துவதும், முடக்குவதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. கிணற்றுத் தவளைபோல் சில பெண்கள் உலகம் காணாமலே வாழ்வை முடிக்கின்றனர். மழைக்குக் கத்தும் தவளை போல் சில பெண்கள் தமது காரியங்களுக்கு புரட்சிக் குரலிட்டு அவ்விடயம் நிறைவடைய தாமும் ஓய்ந்து, மீண்டும் ஒரு தேவை ஏற்படத் தாமும் ஒலி எழுப்புவர். இன்னுமொரு வகையினராய் தவளையைப் பிடித்திருக்கும் தவளையராய் தாமும் முன்னேறாமல் மற்றவர்களையும் முன்னேற விடாமல் செய்யும் பெண்கள் இவர்கள் வயல் நண்டு வரம்பேற பிடித்திழுக்கும் மறுநண்டு போலவும் பசு மேயாமல் வைக்கோற் பட்டறை காக்கும் நாயையும் போன்றவர்களாவர்.

இன்றைய பெண்களுக்கு இலட்சியம் இருக்கின்றது. எங்கு கானினும் பெண்கள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு தான் இருக்கின்றார்கள் என்பது அனுபவம் மூலமும் கண்கூடாகவும் கண்டறிந்த உண்மை. உலகம் கண்ட அத்தனை துறைகளிலும் பெண்கள் தடம்பதித்து உள்ளார்கள். அத்தோடு நின்று விடாமல் நல்லதொரு மகளாய், மருமகளாய், தாயாய், மனைவியாய், தோழியாய், சகோதரியாய் இன்னும் எத்தனையோ உறவுகளைத் தாங்கிய விருட்சமாய் நிற்கின்றார்கள் பெண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல. உடல் வலிமையால் ஆண்களைவிட பலம் குறைந்தவர்களாயிருந்தாலும், உடும்பைப் போல் உரமாக உள வலிமையை அதிகமாகக் கொண்டவர்கள் கல்வி எனும் ஆயுதத்தை கையிலெடுத்து சொந்தக் காலில் நிற்கின்றார்கள். பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் இன்று அதிகரித்துத் தான் செல்கின்றன. பெண்கள் ஆண்களில் தங்கியிருக்கவும், அவர்களது கைகளை எதிர்பார்ப்பதும் இல்லை.

அரசியல் என்பது பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை. அரசியலிலே சிறுதுளியாக பங்கெடுத்துள்ள பெண்கள் நடைமுறை அரசியலை தேர்தல் விவகாரங்களை விளங்கியிருப்பது பெருமைக்குரியதே. ஆனால் இயல்பு வாழ்க்கையில் சுதந்திரமாக நடமாடுதல் சேவைகளைப் பெறுதல் போன்ற பல்வேறு விடயங்களில் இன்னல் அடைகின்றனர். சில நாடுகளின் அரசியல் சூழ்நிலைகள், பெண்களை சுவாசிக்க முடியாத சூழலில் வாழ்வது போல் அடக்கியிருக்கின்றது. இங்கே விடுதலை எங்கே? ஆணுக்கு சமமாக பெண்களையும் நடைமுறையில் உயர்த்தும் அரசுகள் தான் முன்னேறுகின்றன. பெண்ணுக்கு சுதந்திர வாழ்வில்லை என்றாலும் உலகில் மனிதனுக்கு வாழ்வில்லை என்பதை வீறு கொண்டு பாடுகின்றான் கவிஞன்



**"விண்ணுக்கு பறப்பது போல் கதைகள்**
**சொல்வீர், விடுதலை என்பீர் கருணை**
**வெல்லமென்பீர், பெண்ணுக்கு விடுதலை**
**நீரில்லை என்றால் பின்னிந்த உலகினிலே**
**வாழ்க்கையில்லை"**

உண்மைதான் பெண்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி போன்ற வளர்ந்த நாடுகள் தானே மேலும் வளர்கின்றன.

பெண் முன்னேறிப் போவதை இன்றும் பெரும்பாலான ஆண்கள் ஒப்புக் கொள்வதும் இல்லை. அதற்கு வழி விடுவதும் இல்லை. எப்படியாவது தடுத்து நிறுத்தவும் / முடியாத பட்சத்தில் அவதூறாகப் பேசி, அடித்து கொடுமைப்படுத்தி தடுத்து விடுவார்கள்.

**"கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்**
**கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி"**

என்றார் பாரதிதாசன். பெண்களைப் பற்றி எந்த பரப்பிற்குள் நின்று பேசினாலும் அவர்களின் முன்னேற்றம் என்பது கல்வியிலேயே தங்கியுள்ளது எனலாம். பெண்களே! மற்றவர் எம்மைக் கோழையென அவமதிக்காமல் வாழுங்கள். சுயதொழிலுக்காக முயற்சியுங்கள். நாளை நட்டாற்றில் தனித்து விடப்பட்டாலும் பகுத்தறிந்து மீண்டும் வர முயற்சியுங்கள். மொத்தத்தில் ஏழையாயினும் பணம் படைத்தோர் ஆயினும் கல்வி என்பதே பெண்களுக்கு கவசம். பெண்களின் அழகும் கல்வியே இதனையே நாலடியாரில்,

**"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாமென்னும் நடுவு நிலைமையாற்**
**கல்வி அழகே அழகு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்பட்டுள்ளது. ஔவையார், பூதப்பாண்டியன், பெருந்தேவியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணிகள் கற்றறிந்ததனால்தான் காலத்தால் அழியாது வாழ்கின்றார்கள். விடுதலை என்பது கல்வியால் விளையும் அறிவிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு எல்லாம் விருப்பங்கள் ஒரு பக்கம் இருக்க நிதர்சனம் என்பது நாணயத்தின் மறுபக்கம் போல் உள்ளது. கணவனே கண் கண்ட தெய்வம் என்று காலில் விழுந்து கொள்ளும் பெண்கள் இருக்கும் வரை பாரதி சொன்ன விடுதலையை எங்கே தேடுவது? அங்கு சத்துக்கு கட்டுப்படும் மதயானை போல் எத்தனையோ பெண்கள் திருமணத்திற்குப் பின்பு குடும்பம், கணவன், பிள்ளைகள் என்று தமது கனவுகளை பொசுக்கி வரம்பிற்குள் வாழ்கின்றனர். இப்படியான மடமை மகளிர் கீழைத் தேசத்தில் பெருகிவிட்டார்கள். இவர்கள் பெண் குழந்தையே வேண்டாம் என்றும், அவ்வாறு பிறந்து விட்டால் அக்குழந்தையை முறையாக நெறிப்படுத்தாது, கல்வி புகட்டாது, சிறு வயதிலேயே குறைந்த வருமானத்திற்கு வேலைக்கமர்த்தி அக்குழந்தையும் வாழ்நாள் முழுவதும் அடிமைப்பட்டுக்கிடந்தால் பெண் விடுதலை எப்போது கிடைக்கும்? சிந்தியுங்கள் . மீண்டும் மீண்டும் கல்வியே விடுதலைக்கு வழியென்பதை உணர்ந்து செயலாற்றுங்கள்.



**"பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"**
**"வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்**
**வேண்டி வந்தோம்"**
**"சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வச்சாதி**
**படைக்கவும் செய்திடுவோம்"**

என்று பாடினான் மகாகவி பாரதி. பெண் விடுதலையை கனவுப் பொருளாக்கி விடாமல் சிந்தனையை உருமாற்றி செயலாக்குங்கள். காற்றிற்கு வேலி போடாதீர்கள். உரக்க ஒலி எழுப்புங்கள். எப்பொழுதும் எச்சரிக்கையாக இருந்தால் எமது விடுதலை கூட எட்டும் கனிதான். கால்மாக்ஸ் சொன்னதைப் போல் "நீங்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை. அடிமைத்தனத்தைத் தவிர. ஆனால் வெல்வதற்கு இந்த உலகமே இருக்கிறது" மொத்தத்தில் பெண் விடுதலை பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றோம். அதனை முழுமையாக பெற முயற்சி செய்வோம்.

**கலைமன்ற அபிவிருத்தி - 2022**

**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்)**

**வண்ணைக் கலைமன்றம் (பண்பாட்டு விழா கலைநிகழ்வு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நட்பு


**செல்வி. மேரி யொசிந்திக்கா யூட்ஜேம்ஸ்**

**யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்**

**தேசிய பாடசாலை.**


**திருக்குறள் கவிதைப் போட்டி**
**இடைநிலைப்பிரிவு**
**முதலாம் இடம்**

நட்பு கொள்வது போன்ற அரிய செயல் இல்லை
அதே போல அழகிய செயல் வேறும் இல்லை
மூத்த குடி கூறியது பல குறள்கள்
நட்பில் எழுவதே இனிய குரல்கள்
அணைத்து காப்பதே நட்பின் விரல்கள்.

அறிவுடையாளரின் நட்பு வளர்பிறை போன்று வளரும்
அறிவில்லாதவரின் நட்பு தேய்பிறை போன்று தேயும்
இதுவே நட்பில் நிகழும் பிழைகள்
இதை அறியாதோர்கள் மழலைகள்.

படிக்கப் படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல்
பழகப் பழக மேன்மேலும் இன்பம் தருவது
பண்புடையாரின் நட்பாகும்
அதுவே வையகத்தின் சிறப்புமாகும்.

அரைமணி நேரப் படிப்பில் அரட்டை சிரிப்பில்
ஓடியது காலம் அந்தக் காலம் வராதா என
எண்ணுகின்றேன் நாளும்
இதை எண்ணித் தனித்துப் போகிறேன் நானும்.

நட்பால் பள்ளியில் விழுந்த அடிகள்
நட்பால் எடுத்து வைத்தேன் ஒவ்வொரு அடிகள்
நட்பே வெற்றிப் படிகள்
இதுவே வாழ்வின் சுவடுகள்.



இணைபிரியாத உறவுகள்
சின்னச் சின்னச் சண்டைகள்
சிதறிய முத்துச் சிரிப்புகள்
இதுவே நட்பின் கவிதைகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்புக் கொள்வதற்குத் தொடர்பு தேவையில்லை
ஒத்த உணர்ச்சியே நட்பின் தேவை
இதுவே நற்பலம் வாழ்விற்குப் பக்க பலம்.

நட்பு என்பது இலையில் உள்ள நீர் போல
காற்றடித்தால் சிதறுகின்றது இல்லையேல்
நீராகின்றது. வேராகப் படர்ந்து குழுவாக
நட்புக்கொள்கின்றது.

நட்பு என்பது உப்பு போல தான்
ஏன் என்றால் உப்பு இல்லாது உணவின்
சுவையைப் பெற முடியாது அதுபோல
நட்பின் துணையில்லாது வாழ்வின்
சுவையை சுவைக்க முடியாது.



ஆடை நெய்தவனுடைய கை
உடனே சரி செய்வது போல
நண்பனுக்குத் துன்பம் வந்த வேளையில்
உடனே சென்று போக்குவது நட்பு
இதைச் செய்ய மறுத்தால் உன் வாழ்வில்
நீ இழைத்த பெரும் தப்பு.

காலம் கடந்த பின்னும்
கூந்தல் நரைத்த பின்னும்
அன்பில் மாற்றம் இல்லாதது நட்பு

காகிதத்தில் எழுத நினைத்த கவிதைகள்
என் வாழ்க்கை காலத்தில் கடந்து போன
நிமிடங்கள் என் நண்பனின் அன்புகள்
அதுவே இன்று என் சொத்துக்கள்




மழைக் காலில் மை இருட்டில்
புராப் புரா நட்சத்திரத்தைப் போல
குணத்தால் வெள்ளையாகவும்
அன்பால் தூயவராகவும் விளங்குவதே நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடல் வற்றினாலும்
நட்பின் அன்புக் கடல் வற்றாது
ஆகாயம் நிறம் மாறினாலும்
நட்பின் வழி மாறாது.

வாழ்க்கைப் பயணம் தடுமாறலாம்
கண்ட கனவு தவிடு பொடியாகலாம்
நினைவு நிலை குலையலாம்
ஆனால் கலையாத மேகம் போல் நட்பு
சுற்றி வருகிறது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பல கரித்துண்டுகளுடன் கற்களை
சேர்த்து வைரமாவது போல்
நீயும் நட்பை சேர்
விலை மதிப்பாய் நீயும் ஆவாய்




நீ நடக்க முடியாது இருந்த போது
உன்னைத் தாங்கிய நண்பனை
நீ நடக்க ஆரம்பித்த போது அவனை
உன் தோலில் தாங்கு
நண்பனைச் சக தோழனாய் ஏத்து

நட்பிற்கு இல்லை முற்றுப்புள்ளி
இதைவிடக் கவிதை வேண்டுமா உனக்கு
நட்பு இதுதான் கவிதை எனக்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா



செல்வி. மு. சிந்துஜா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

நாம் பிறந்த நாடு தாய் நாடு
நாம் பேசும் மொழி தாய்மொழி
இவ்விரண்டு உதாரணமும் போதும் - தாயே!
பௌவியமாய் உன் சிறப்பை விளக்க

வெட்கத்தைக் கூட அடகு வைத்தாய்
பக்குவமாய் எனை மீட்க
மரண வேதனையிலும்
மலர்ந்தாய் மழலை எனை பார்த்து

உன் சூலகம்
என் வாழ்வகம் அம்மா
உன் கருவறைச் சுவர்
எனக்கு அரண்மனை அம்மா



உன் அடிவயிற்றுக் கோடு
என் பிறப்பின் அடையாளம் அம்மா
உன் உதிரம்
என் உதரத்தின் உணவம்மா

உறங்கும் முன்னும்
கறந்திருந்தேன் உன் பாலை
குறைய வைத்தேன் உன் கல்சியத்தை
உறைய வைத்தேன் உன் உதிரத்தை

குழப்பினேன் உன் அயர்வை
சிந்த வைத்தேன் உன் வியர்வையை
தளர வைத்தேன் உன் கட்டழகை
சுழர வைத்தேன் உன் கடிகாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமைக்கு இலக்கணமே !
என் உயர்வில்
பொறாமை கொள்ளா பொற்சிலையே!
பங்கு போடா பொதுநலமே!
ஊரிருந்தாலும் உறவிருந்தாலும்
யாரிருந்தாலும் பாரினிலே
உன் அன்புக்கு
ஈடாகாதம்மா எதுவும்.

நிலவின் ஒளியில் நான் தூங்க
விண்மீன் எனைப் பார்த்து கண்சிமிட்ட
ஆராரோ பாடிய
ஆயிரத்து உறவம்மா

அன்பையும் அறிவையும் ஊட்டினாய்
பண்பையும் பலத்தையும் புகட்டினாய்
என் காலில் நான் நிற்க
உன் உடலை வருத்தினாய்

அறுசுவை நான் சுவைக்க
அடுப்பறையில் கருகினாய்
பிழை பல செய்தாலும்
சளைக்காமல் களைந்தெடுத்தாய்



சிசுவானதும் கருவிலே சுமந்தாய்
சேயானதும் தோளிலே சுமந்தாய்
சிறுமியானதும் நடை பயில்வித்தாய்
சிருஷ்டிகியானதும் கல்வி பயில்வித்தாய்
யௌவனமானதும் ஜோடியாக்கினாய்
சௌபாக்கியமாய் நான் வாழ சேமித்தாய்

அடித்தாலும் அரவணைக்கும் கரம் அம்மா
இடியே விழுந்தாலும் காக்கும் உரம் அம்மா
வாடிய போதெல்லாம் நாடி வந்த உறவம்மா
ஆறுதல் பல சொல்லி தேற வைத்த உறவம்மா
மாறும் உலகில் மாறாத மாசற்ற சோதியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தத்தின் துடிப்புகளுக்குள்
கலந்திட்ட உறவம்மா
பரம்பரை அலகுகளால் பிணைக்கப்பட்ட
பாசத்தின் விம்பம் அம்மா
அப்பிளுக்கும் புவிக்கும்
நியூட்டன் சொன்ன தொடர்பு
புவியீர்ப்பம்மா



அற்பமான எனக்கும் உனக்கும்
தொலையாத உள்ளுணர்வு
தொப்பிள் கொடி உறவம்மா

என் உயர்வொன்றே உன் இலக்கு
ஓயாது ஒளிர்ந்த ஒளி விளக்கு
குடும்பத்துக்கு நீ ஓர் குத்துவிளக்கு
குவலயத்திற்கு நீ ஓர் அணையா விளக்கு - உன்
கும்பியில் உதித்த எனக்கு - நீ
குன்றிலிட்ட தீபம் போலம்மா

கல்லும் கரைந்துருகி அழும் அம்மா
அல்லும் பகலும் நீ பட்ட பாடறிந்தால்
மொழியில் கூட கோபம் அம்மா
சொல்லில் வறுமை உண்டோ? உன்னை உவமிக்க

வாய்மையின் தாய்மையே - உன்
தூய்மையான உள்ளத்தை
சங்கக் காதல் என்பதா?
பங்கமில்லா பக்தி நெறி என்பதா?
கடல் அளவில் நீ கொண்ட அன்பை
மடல் அளவில் வரைய முடியாதம்மா
சிலை வைத்து செய்தாலும் யாகம் - ஈடாகாது
மலை அளவில் நீ செய்த தியாகத்திற்கு

பல்லக்கில் உன்னை சுமந்தாலும் - உன்
சுமைதாங்கிக்கு ஈடாகாதம்மா - நீ
உன்னின் உள்ளே என்னை
சுமந்திருப்பதால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்மொழியைப் போற்றுவோம்



செல்வி. தங்கராசா தமயந்தி
யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம்
இல. 5, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி

தாய் சொல்லித் தராது
யாரும் கற்றுத் தராது
குழந்தை ஒன்று பூமி தொட்டதும்
உச்சரிப்பது எம் தமிழே

இயற்கையோடு இணைந்து
இமயம் வரை உயர்ந்து
தரணி வியந்து போற்றும்
தனித்துவம் மிக்கது எம் தமிழே




ஏழ்கடல் வைப்பினும்
தன்னொளி வீசும் மகிமையுடைய
முத்தமிழ் வாசத்தைப் போல்
எங்கும் முகரவில்லை எம் தமிழ்போல்

அகவிருள் நீக்கி அறிவை மட்டும் புகட்டவில்லை
அன்போடு அறமும்
பண்போடு பலமும் ஊட்டி வளர்த்த
அருமருந்தே எம் தமிழ்

கலாசாரத்துடன் இரண்டறக் கலந்து
தனக்கென கட்டுக்கோப்புடன்
கற்பினையும், மனித மாண்பையும்
காப்பது எம் தமிழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விற்கு நன்னெறி புகட்டும்
அகராதிகள், சுவடிகளென
அள்ள அள்ள குறையாத
அமுதக் கலசங்களை கொண்டதும் எம் தமிழே

குன்றாத இளமையும்
கன்னிமையின் தூய்மையும்
அகரமும், ணகரமும் அழகாய் நர்த்தனமாடும்
அரிய பொக்கிஷம் எம் தமிழே




எம் சுவாசத்தில் கலந்து
இதயத்தில் உறைந்து
எம்மை இயங்குவிக்கும்
இன்பத் தமிழை வணங்கிடுவோம்.

எம் தாய்மொழி தமிழை
தரணி போற்ற மெருகூட்டி
தமிழ் எங்கள் உயிருக்கு நேரென போற்றி
தமிழன் என்று தலைநிமிர்ந்து பெருமை கொள்வோம்.

## பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்கள்


**(கலாசார அலுவல்கள் திணைக்களம்)**

1) ***கீதவாஹினி இசைக்கல்லூரி - கொழும்புத்துறை***
2) ***அழகியற் கல்லூரி - யாழ்ப்பாணம்***
3) ***கம்சப்பிரியா இசைக்கல்லூரி - ஈச்சமோட்டை***
4) ***இராகஸ்வரம் - கொழும்புத்துறை***
5) ***சாகரம் - கொழும்புத்துறை***
6) ***குரலோசைகளின் தாயகம் - யாழ்ப்பாணம்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஒளியாய் வந்த விடியல்

செல்வி. ப. துசியந்தி
ஊடகக்கற்கைகள் துறை,
இறுதி வருட மாணவி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புத்தகப்பை எடுத்துக் கொண்டு நிற்கும் போதே அப்பா வாசலில் நின்று கொண்டு அழைக்கும் சத்தம் கேட்டு, பாடசாலை செல்லும் ஆர்வத்துடன் வாசலை நோக்கி ஓடினாள். "சங்கவி" என யாரோ அழைக்கும் சத்தம் திரும்பிப் பார்த்தாள் யாரையும் காணவில்லை. யாரோ கைகளில் தட்டும் படியாக உடல் உணர்ந்தது. கண்களை விழித்துப் பார்த்தாள் அப்போது தான் தெரிந்தது இதுவும் கனவென்று.

இருள் சூழ்ந்த அறைக்குள் ளிருந்து மின்சூழை ஒளிரச் செய்து கடிகாரத்தை தேடினாள். நேரம் சரியாக 4.30. பதின்மூன்று வயது நிரம்பிய சிறுமி எழுந்த நேரமது. ஏனையவர்கள் எல்லோருமே பனி உட்புகாதவாறு இழுத்துப் போர்த்துத் தூங்கிக் கொண்டிருக்கும் போது சங்கவி மட்டும் தூக்கம் களைந்து எழுந்திருந்தாள். அவசர அவசரமாக கேத்தலில் தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு, பல்லைத் தீட்டி முகத்தைக் கழுவி விட்டு வந்து அனைவருக்கும் தேநீரைத் தயாரித்ததோடு மட்டுமல்லாமல் அவரவர் இடத்திற்கு எடுத்துச் சென்று அவர்கள் தூக்கத்தைக் களைக்காமல் தேநீர் வைத்திருக்கிறேன் எனக் கூறிவிட்டு செல்ல வேண்டும்.

அவர்கள் தூக்கம் விழித்து எழுந்ததும் அவர்களுக்குத் தேவை யான பொருட்கள் அனைத்தையும் அவர்கள் காலடியில் கொண்டு சேர்ப்பதோடு, பாடசாலை சீருடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்திரி செய்து, பாடப் புத்தகங்களை நேரசூசிகைக்கேற்ப அடுக்க வேண்டிய பொறுப்பும் சங்கவியுடையதே. அவர்கள் குளிப்பதற்காக சுடுதண்ணியை வைத்து எடுத்துச் சென்று குளியலறையில் வைத்து விட்டு புத்தகப் பையை அடுக்கச் சென்று சங்கவி அங்கிருந்த தமிழ்ப் புத்தகத்தை எடுத்து அதன் வாசனையை முகர்ந்து அந்தப் புத்தகத்தை நெஞ்சோடு சாய்த்து பழைய நினைவுகளை மீட்டினாள்.

அம்மா சீதாவினதும் அப்பா கரனினதும் கைகளைக் கோர்த்தபடி பாடசாலை சென்ற நாட்களை எண்ணி மகிழ்ந்தாள். பாடசாலை முடிந்ததும் அழைத்துச் செல்வதற்காக சீதா வந்து நிற்பாள். பாடசாலையை விட்டு அழைத்து வரும் நாட்களிலெல்லாம் பெரும்பாலும் நடத்தியே கூட்டி வருவாள். அப்படி வரும் போதெல்லாம் பாடசாலையில் கற்கும் விடயங்களை மீண்டும் கேட்பதோடு புதிய விடயங் களை கற்பித்துக் கொண்டு வருவாள். அன்று வெள்ளிக்கிழமை பாடசாலை இறுதி நாள். பாடசாலை முடிந்து பல மணி நேரமாகியும் சீதாவைக் காணவில்லை. எனவே சங்கவி பாதையில் கரையோரமாக நடந்து வீட்டிற்குச் சென்றாள். வீட்டு வாயிலில் நின்று பலர் அழுது கொண்டிருந்தனர். சங்கவியைக் கண்டவர்கள் ஒப்பாரி வைத்து ஓலமிட்டு அழத்தொடங்கினர். சங்கவிக்கு எதுவும் புரியவில்லை. ஏனென்றால் அவள் சிறிய பெண். தனது தாயான சீதாவின் உயிரற்ற உடல் அவள் கண் முன்னால் இருந்தும் அவளுக்கு எதுவும் புரியவில்லை. ஏன் அம்மா இங்க நித்திர கொள்றா? என அவள் தனது தந்தையைக் கேட்டாள். கரனால் பதில் கூறமுடியவில்லை. சீதா இல்லாத வீடு அமைதியான காடு போன்றே காணப்பட்டது. சீதா இறந்து நாற்பது நாட்கள் கூட ஆகாத நிலையில் கரன் செய்த காரியம் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சங்கவியை வளர்ப்பதற்கு ஒரு தாய் தேவைனெக் கூறி அவன் இரண்டாவது திருமணம் செய்து தனது புதிய மனைவியை வீட்டிற்கு அழைத்து வந்திருந்தான். ஆனால் வந்த புதிய மனைவி சங்கவியைக் கவனிப்பதில்லை.

திருமணமாகி நான்கு வருடங் களில் இரண்டு குழந்தைகள் கரனினதும் புதிய மனைவியினதும் கவனம் முழுவதும் அந்த இரண்டு பிள்ளைகள் மீது மட்டுமே குவிந்திருந்தது. சங்கவி அப்பிள்ளைகளுக்கு சேவகியானாள். கரனின் புதிய மனைவி தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மீது அன்பு காட்டும் போதெல்லாம் சங்கவி சீதாவின் அன்பை நாடினாள். ஆனால் அந்த அன்பை வாரிவழங்க சீதாதானில்லை.

அடியே சங்கவி எங்கடி போயிட்ட, புத்தகபாக்க கொண்டு வாடி.... கரனின் புதிய மனைவியின் குரலது. திடுக்கிட்டவள் இந்தா வாரன் எனக் கூறிக் கொண்டே அவளிடம் புத்தகப்பையை நீட்டினாள். சனியனே இவளவு நேரம் என்னடி செஞ்ச? பிள்ளைகள் பள்ளிக் கூடத்துக்கு போக நேரமாகுதெண்டு தெரியலயா உனக்கு? வந்தவளிடம் புத்தகப்பையை வாங்கியவள் முதுகில் ரெண்டு போடு போட்டு விட்டு கெதியெண்டு போய் சட்டி பானையைக் கழுவு...... பிள்ளையல விட்டிட்டு வாரன் எனக் கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள்.

பாடசாலையில் பிள்ளைகளை விட்டு வந்தவள் வரும் போது வெளிநாட்டில் இருந்து வந்த சீதாவின் நெருங்கிய தோழியான சுனைனாவோடு வந்து கொண்டிருந்தாள். பல வருட தோழியான சீதாவின் மரண வேளையிலும் அவளோடு கூட இருந்தவள் தான் சுனைனா. பின் திருமணமாகி வெளிநாடு சென்று விட்டாள். திருமணமாகி பல வருடங்கள் கழிந்த நிலையிலும் குழந்தையில்லாமல் மலடி எனும் பெயரைச் சுமந்து வாழ்ந்து கொண்டிருப்பவள். பல வருடத்திற்குப் பிறகு தனது தாய் நாட்டிற்கு வந்தவள் தனது தோழியின் குழந்தையைப் பார்க்க வேண்டுமெனக் கூறி கரனின் புதிய மனைவியோடு வந்து கொண்டிருந்தாள்.

சங்கவியை கவனித்துக் கொள்வதற்காக மறுமணம் செய்த கரனை தவறாக எண்ணிவிட்டேனே என சுனைனா தன்னுள் நொந்து கொண்டு வந்தாள். ஏனெனில் கரனின் புதிய மனைவி, சங்கவியை தனது சொந்தப் பிள்ளைகளைவிட மிகவும் அன்பு செய்வதாகக் கூறி தேனொழுகப் பேசி வந்தாள். ஆனால் அவள் அவ்வாறு பேசியதன் உள்நோக்கம் என்பது சுனைனா நாட்டை விட்டு மீண்டும் செல்லும் போது ஏதாவது தந்துவிட்டுச் செல்வாள் என்பது தான்.

தூரத்தில் சுனைனா வருவதைக் கண்ட போதே அடையாளம் கண்டு கொண்ட சங்கவி அவளிடம் ஓடிச் சென்று கட்டிப் பிடித்து அழத் தொடங்கினாள். அவளது அழுகைக் கான காரணம், அவளது உடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம், அவள் அணிந்திருந்த ஆடை என்பன அவளது உண்மை நிலையை எடுத்துக் காட்டியது. தன்னுடைய தோழியிடம் வளர்ந்த அவளது குழந்தைக்கும் தற்போதிருக்கும் சங்கவி க்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டவள் தான் திரும்பச் செல்லும் போது சங்கவியை தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினாள். ஏனெனில் சங்கவிக்கு அச்சமயம் தேவையாக இருந்ததெல்லாம் அன்பு ஒன்றுதான். ஆனால் அந்த அன்போ அவளிடத்தில் பெரும் பஞ்சமாய்... பணம் என்றால் அள்ளி அள்ளிக் கொடுக்கலாம்.... அவளிடத்தில் இல்லாத அன்பிற்கு அவள் எங்கே போவாள்... இதை எண்ணிய சுனைனாவிற்கு பெரும் யோசனை வந்து ஒட்டிக் கொண்டது. தனது கணவனிடம் பேசியவள் தனக்கு சமூகத்தால் கொடுக்கப்பட்டிருந்த மலடி எனும் பெயரை மாற்ற நினைத்தாள். சங்கவியை தனது பிள்ளையாக தத்தெடுப்பதற்காக பேசினாள். ஆனால் கரன் சமூகத்திற்குப் பயந்து மறுத்து விட்டான். ஆனால் சுனைனா விடாப் பிடியாக நின்று எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன் எனக் கூறியது தான் தாமதம் கரனின் மனைவி, “சங்கவிக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையும் போது அதை ஏன் தடுக்கிறீங்க?” என அக்கறை யுடையவள் போல் கேட்டாள். பேசாம அவங்க தர்ற காச வாங்கிக் கொண்டு அவள அவையலோட அனுப்பி வையுங்கோ என்றாள். அவளது பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசமுடியாத கரனும் சரியெனக் கூறி சுனைனாவோடு சங்கவியை அனுப்பி வைத்தான். இவ்வளவு நாள் வாழ்ந்த வீட்டை விட்டுச் செல்கிறேனே என்ற கவலை இல்லாமல் இங்கிருந்து புறப்பட்டால் போதும் என்ற மனநிலையோடு சங்கவி சுனைனாவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு மகிழ்ச்சியாகச் சென்றாள். இருள் சூழ்ந்திருந்த சங்கவியின் வாழ்வில் ஒளி வந்தது சுனைனா எனும் விடியலாக......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைப்பு

ஸ்ரீஸ்கந்தராசா மயூரன்
கொழும்புத்துறை



ஈவினைச் சந்தியில் இருந்து இடதுபக்கமாக திரும்பியவுடன் தெரிந்த பீற்றூட் தோட்டமும் அதனருகே அமைந்திருந்த சிறுகுடிசையும், குடிசையை சூழவிருந்து படைத்தாற் போல் பயற்றை, பாவல், போஞ்சி என்று மரக்கறிச் சாடிகள் சோற்றைச் சுற்றி கறிகள் போட்டது போல காட்சி யளித்தன. வீட்டோடு ஒரு சிறிய ஓலையால் வேய்ந்த கடை, குனிந்து தான் போய் நிற்க வேணும். அவ்வளவு சிறிய இடப்பரப்பைக் கொண்ட கடையில் கப்பல், கதலி, இதரை, மொந்தன் என்ற அவனுடைய மருந்தடிக்காத தோட்டத்து வாழைக் குலைகள் மஞ்சள் நிறத்திலும் அரைப்பச்சை நிறத்திலும் தொங்கிக் கொண்டும், அடுக்கி வைக்கப்பட்டும் இருந்தன. ஜெகன் தன் இடுப்பில் இருந்த சாரத்தை வழுக்காதவாறு உதறிக்கட்டிக் கொண்டு நெற்றியின் வழியே வீழ்ந்து கண்ணிமையை மறைக்க வந்த வியர்வைத் துளிகளை பெருவிரலால் ஊதித்தள்ளிக் கொண்டி ருந்தான். "இண்டைக்கு இவ்வளவும் விக்க வேணும்" "இது நாளைக்குத் தான் பழுக்கும்" என்று மனதிற்குள்ளே கூறியவாறு வாழைக்குலைகளை நோட்ட மிட்டுக் கொண்டு அருகே மூன்று சொந்தக் கால்களும், ஒரு தும்புத் தடியை வெட்டி ஒற்றைக் காலாக்கப் பட்டிருந்த அந்த பிறவுண் நிற பிளாஸ்ரிக் கதிரையை மெதுவாக தூக்கி வைத்து அதிலே அமரவும், அவன் மனைவி சுடச்சுட கோப்பியை கொண்டு வரவும் சரியாக இருந்தது. நேரம் மாலை ஆறு மணியை பறைசாற்றியது. ;இனி ஆட்கள் கடைக்கு பழம் வாங்க வருவினம்" என்றவாறு கோப்பியைச் சுடச்சுட உறிஞ்சிக் கொண்டவன், ஒரு வளையில் தொங்கிக் கொண்டிருந்த வாழைக்குலைக் கயர்களால் வர்ணப் பூச்சுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டை போட்டுக் கொண்டு பொத்தான் களைப் பூட்டினான். "எனக்கு ஒரு கிலோ பழம் இண்டைக்கு சாப்பிடுறத்துக்கு" என்றவாறு மோட்டார் சைக்கிளில் நின்ற சுரேசுக்கு, தன் வீச்சரிவாள் போலக் கூராக இருந்த கத்தியால் ஓர் சீப்பை வெட்டி நிறுத்துக் கொடுத்தான். ஜெகன் "கூடிப்போச்சு ஒரு கிலோ காணும்" என்ற சுரேசுக்கு இருநூறுதான் கூடக் கிடக்கு, ஒரு கிலோ ஐம்பது ரூபா தான், நீ ஐம்பதைந்தா" என்று கூறவும் அவன் காசை நீட்டினான். மஞ்சள் நிற பழுத்த வாழை இலையில் பழத்தைச் சுற்றி வாழைத் தடலால் கட்டி நீட்டினான். அவன் சொப்பிங் பாக்கில் போடாமல் கொடுப்பது எல்லோருக்கும் பிடிப்ப தில்லை. "அண்ணை பாக் ஒன்று தா" என்ற சுரேசுக்கு தானே இழைத்து வைத்திருந்த பனை ஓலைப் பையை நீட்டினான்.

"ஏன் அண்ணை.........." என்று வடிவேல் சினிமாவில் கேட்பது போல சுரேஸ் கண்ணால் வினாவினான். "நான் கம்பஸ்ல என்வயர்மண்ட ஸ்ரடீஸ் தான் ஸ்பெஷல் செய்தனான். எனக்கு இந்த பிளாஸ்ரிக், சொப்பின் போன்றவற்றின் பாதிப்புகளும் அவை சூழலுக்கு செலுத்தும் செல்வாக்குகளும் தெரியும். நான் என்ர ஆய்வுக் கட்டுரையை கூட இதில்தான் செய்தனான் என்று கூறிக் கொண்டே சாரத்தை மறுபடியும் உதறிக் கட்டினான். "நீங்க ஒரு கிறயுவேட்டா?" என்று சட்டெனக் கேட்ட சுரேசுக்கு முகத்தில் ஒரு வியப்பு. "ஏன் அண்ணே ஓர் அரசாங்க வேலை தேடியிருக் கலாமே......" என்று நேரடி யாகவே கேட்டு விட்டான்.


கடையில் இருந்து குனிந்து வெளியில் வந்த ஜெகன் சுரேசிடம், "வேலை கிடைச்சது. வேலைக்கு போனேன் மூன்று வருசத்துக்கு முதல். அது ஒரு அரச திணைக்களம் ஏசி றூம், சுத்துற கதிரை, முன்னால் ஒரு கொம்பியூட்டர், மேற்பார்வையாளருக்கு தனி றூம்..... எல்லாம் இருந்தது. அதுதான் விட்டுட்டு விவசாயம், இயற்கை பசளை, கடை, வீடு என்று செற்றில் ஆகிட்டன்." என்றான். சுரேசின் செல்போன் சிணுங்க, மோட்டார் சைக்கிளில் சிட்டாய் பறந்தான்.

ஜெகனுக்கென்றே இருந்த வாடிக் கையாளர்கள் பலர் கடையில் வாழைப் பழத்திற்காக நின்றிருந்தனர். ஒவ்வொரு வருக்கும் வாழையிலையில் சுற்றிக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த ஜெகனின் மனதில் ஒரு உற்சாகம் தானாகவே இண்டையான் பழங்கள் விற்றாச்சு.... அப்பாடா என்ற பெருமூச்சு இறுதியாக வந்த கந்தப்புவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த உலர்ந்து போன பழங்களுடன் நின்றது. கடையைப் பூட்டுவம் என்று வேயப்பட்ட தட்டியை சாத்த முயன்ற போது கட்டுவன் கோயில் மணிக்கூடு எட்டு முப்பது என்று காட்டியது. தன் கதிரையை வைத்து தட்டிக்கு முட்டுக் கொடுக்கவும், ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் வீதம் நான்கு மோட்டார் சைக்கிள்கள் அவன் கடைக்கு முன்னால் வந்து ஆர்முடுகியை தூண்டியவாறு நின்றன. பதட்டத்துடன் அவன் வெளியே வரவும், மனைவியும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கடைக்கு வரவும் சரியாக இருந்தது. "அண்ணே நாளைக்கு மூன்று குலை வேணும். நாளைய தேவைக்கு சாப்பிடுறதுக்கு" என்று ஒருவன் இறங்கி வந்தான். எங்க கொலிச்சில பெயாவல் பார்ட்டி அதுக்குத்தான் என்றான் மற்றவன். நாளைக்கு அரைப்பதமாய் பழுத்துக் கிடந்த மூன்று குலைகளை நிறுத்து உரியவாறு வாழையிலை களால் சுற்றி கட்டிக் கொடுத்தான். "ஆயிரத்து அறுநூறு ரூபாய் என்ற ஜெகனுக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்க மாற்ற வழியின்றி முழித்தான்." அண்ணே வச்சிருங்க.... மீதிக்காசு வேண்டாம். எங்கட கொலிச்சில பிறின்சிப்பல் தான் வாங்கிக் கொண்டு மிச்சப் பணத்தை வாங்காமல் வரச் சொன்னார் என்று கொண்டே மோட்டார் சைக்கிளில் விரைந்தார்கள்.



ஓ! இது தில்லையர் தான் என்று தனது O/L வகுப்பாசிரியரை நினைத்த வாறு மனைவியிடம் இது குழந் தையைத் தூக்கினான். நாளைக்கே இதைக்கொண்டு போய் பிள்ளையின் பெயரில பாங்கில் போட வேணும் என்று நினைத்துக் கொண்டு கடையை சாத்தினான். மணி ஒன்பதை ஒலித்தது. அவனும் மனைவியும் குழந்தையுடன் குடிசையை நோக்கி..... உழைப்பின் நிறைவுடன்.


**கலைஞர் ஊக்குவிப்பு வழங்கல் - 2022**

**(பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்)**

***திரு. அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா***

***(தராசு முனைகள் - நூல்)***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புடைமை




செல்வி. லோஜயா ஏஞ்சலின் சிறிகாந்தன்
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



திருக்குறள் கட்டுரைப் போட்டி இடைநிலைப்பிரிவு
முதலாம் இடம்

இரண்டடியில் இவ்வுலகத்தை திரும்பி பார்க்க வைத்த பெருமை வள்ளுவனின் திருக்குறளையே சாரும். திருவள்ளுவரின் தந்தையார் பெயர் ஆதிபகவான். இவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் வாழ்ந்ததாக அறியப்படுகின்றது. திருவள்ளுவரின் மனைவி பெயர் வாசுகி. திருவள்ளுவரால் கி. மு. 3ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதே திருக்குறளாகும். இதில் மனிதர்களின் வாழ்வியலோடும் ஆன்மீகத்தோடும் தொடர்பான சிறந்த அறக்கருத்துக்கள் நிலவுவதால் திருக்குறளை 'உலகப்பொதுமறை' என அழைப்பர். திருவள்ளுவரை 'பொய்யாமொழிப் புலவர்'. 'தெய்வப்புலவர்' போன்ற சிறப்புப் பெயர்களாலும் அழைப்பர். திருவள்ளுவரின் திருக்குறளில் காணப்படும் ஒழுக்க விழுமியங்களையும் அறநெறிகளையும் கண்டு உணர்ந்து பல பெரியோர்களும் புலவர்களும் திருக்குறளின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளனர். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்று ஔவையார் திருக்குறளின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

திருக்குறள் முப்பாக்களையும் 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக் களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. திருக்குறளில் காணப்படும் முப்பாக்களும் முறையே அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகும். திருக்குறளில் 10 உடைமைகள் காணப்படுகின்றன. திருக்குறள் வெண்பா யாப்பில் பாடப்பட்டதாகும். திருக்குறளில் அறத்துப்பாலில் எட்டாவது அதிகாரமாக விளங்கும் 10 உடைமைகளில் ஒன்றான அன்புடைமை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சாதாரண மக்கள் முதற்கொண்டு தவத்தால் வலிமை பெற்ற முனிவர்கள் வரை கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளையும், அறிவுரைகளையும் தன்னகத்தே கொண்ட ஒரே ஒரு நூல் திருக்குறளாகும். 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்று சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். இதில் 'இரண்டு' என்று திருக்குறள் கருதப்படுகின்றது. இதில் காணப்படும் 'அன்புடைமை' எனும் அதிகாரத்தின் மூலம் அன்பினால் ஏற்படும் பயன்கள், அன்பைக் கொடுக்கத் தவறின் ஏற்படும் நிலைமைகளைப் பற்றி வள்ளுவன் சிறப்பாக குறள்காட்டி விளக்கியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்பது நம் ஒவ்வொருவருக்கும் தேவையான விடயமாகும். அன்பினால் எதையும் சாதிக்கலாம் என்றால் கூட அது மிகையாகாது. அன்பு அனைத்து உயிரிகளின் மீதும் செலுத்தப்பட வேண்டிய ஒரு புனிதமான விடயமாகும். அன்பிற்கு எத்தனையோ பெரியவர்கள் அடையாளமாகத் திகழ்ந்துள்ளனர். அன்பே உருவமாகக் கொண்டவர் அன்னை திரேசா. அவர் தனது பொன்மொழிகளை அன்பை அடிப்படையாகக் கொண்டே குறிப்பிட்டு விளக்கியுள்ளார். மகாத்மா காந்தி விலங்குகளின் மீது அதிக அன்பு வைத்திருந்தவர். விலங்குகளைக் கொல்வதை பெருங்குற்றமாகக் கருதியவர். இயேசுபிரான் குழந்தைகள் தொடக்கம் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட அனைவர் மீதும் அன்பை மாரியாகச் சொரிந்தவர்.

இந்த வரிசையிலேதான் வள்ளுவனின் 'அன்புடைமை' அதிகாரம் காணப்படுகின்றது.



**'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்**
**புண்கண் நீர் பூசல் தரும்'**

என்று தனது எட்டாவது அதிகாரத்தில் முதலாவது குறளாக குறிப்பிட்டுள்ளார். அன்பை விட பெரிய சக்தி இந்த உலகத்தில் எதுவும் இல்லை. உண்மையான அன்பிற்கு தடுப்புக்களோ தாழ்ப்பாக்களோ கிடையாது. உண்மையான அன்பு கொண்ட இதயம் என்பதை விளங்கிக் கொள்ள ஒரு சிறுதுளி கண்ணீரே போதும் என்று வள்ளுவன் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரபஞ்சத்தில் எதை வேண்டுமானாலும் கட்டுப்படுத்தலாம். ஆனால் அன்பினால் ஏற்படும் சிறு கண்ணீரைக் கூட தடுக்க முடியாது. அக்கண்ணீரே ஆழமான அன்பின் அடையாளமாகும். இதனூடாக எம்மால் அன்பின் வலிமையை ஒரு துளி கண்ணீரின் ஊடாகவே புரிந்துகொள்ள முடியும். அன்பின் மகத்துவத்தை உலகறியச் செய்வதற்காக பொய்யாமொழிப்புலவர் தனது திறமையை ஈரடியிலே வெளிப்படுத்தியுள்ளார்.

**'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு'**

இக்குறளடியினூடாக திருவள்ளுவர் அன்பிலாதவரிடையேயும் அன்புடையோருக்குமிடையில் காணப்படும். வேறுபாடுகளை எடுத்துக் கூறியுள்ளார். அன்புடையவர்கள் தமது உயிரைக் கூட பிறருக்காக அர்ப்பணிக்க மறுக்கமாட்டார்கள். ஆனால் அன்பில்லாதவர் எல்லாவற்றையும் தமக்கெனவே வைத்திருப்பர். எமது எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சேர்த்து வைக்க வேண்டிய பொருளாக அன்பினால் ஏற்படும் பயன்களென முன்னைய கால இலக்கியங்களினூடாக எம்மால் அறிய முடிகிறது. அன்புடையவர்கள் எந்நிலையிலும் சுயநலம் கருதாது தமது வாழ்வை பிறருக்கென அர்ப்பணிப்பர். ஆயினும் அன்பில்லாதவர்கள் தன்னுடைய வாழ்வை பற்றி மட்டுமே சிந்திப்பர். இதனால் இவர்கள் அறத்தை தனது வாழ்வில் இழக்கின்றனர்.

**'என்பிலதனை வெயில் போலக் காயுமே**

**அன்பிலதனை அறம்'**

என்று கூறியுள்ளார் தெய்வப்புலவர். மண்புழு என்பு இல்லாமல் வெயிலில் காயும். இதனால் அது பல துன்பங்களை அனுபவிக்கும். இதே போல் தான் மனதில் தூய்மையான அன்பை வைத்திராதவர்கள் அறத்தின் மூலம் தமது குற்ற உணர்வை அறிவர். அவர்கள் வாழ்க்கையின் எந்தக் கட்டத்திற்கு சென்றாலும் அவர்களை அறம் தக்கவராக மாற்றியமைக்கும் அன்பில்லாதவர்கள் மண்புழுவைப் போல் அறம் வகுத்த தமது குற்ற உணர்ச்சியின் விளைவாக கூனிக் குறுகுவர். இவ்விடத்தை திருவள்ளுவர் ஈரடிக் குறட்பாவின் மூலம் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார்.



**'அன்பு ஈன்னும் ஆர்வம் உடைமை – அது ஈனும்**

**நண்பு என்னும் நாடாச்சிறப்பு**

என்று குறிப்பிட்டுள்ளது. அன்பின் மூலமாக ஆர்வம் மற்றும் நட்பு என்பன எம்மை நாடியே வரும். அனைவரிடத்திலும் மிக அன்பாகவும் இனிமையாகவும் பேசுவோரிடத்தில் நட்பு வந்து குடிகொள்ளும். அன்புள்ளம் கொண்டோரிடம் எமக்கு நட்பாக பழக வேண்டும் என்ற உணர்வு ஏற்படுவது இதன் அடிப்படையிலே ஆகும். அன்பாக நடந்து கொள்வோரிடம் நட்பு வந்து சேரும். அவர்கள் நட்பை விரும்பிப் பெறாவிட்டாலும் அவர்களின் அன்பு அவர்களுக்கு அனைவரையும் நட்பாக்கும்.

**'புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை**

**அகத்துறுப்பு அன்பிலவர்க்கு'**

என்று திருவள்ளுவர் தனது திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். அதாவது அன்பு என்ற மனம் இல்லாது விடின் உடலில் புறத்துறுப்புக்கள் இருந்தும் அதனால் ஒரு பயனும் இல்லை என்று கூறப்படுகின்றது. அன்பில்லாதவரோடு அனைவரும் பழகுவதற்கு பின்நிற்பர். ஆனால் அன்புடையவரோடு அனைவரும் பழகுவதற்கு விரும்புவர். இக்குறளில் அன்பு அகத்துறுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு முழு மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்துறுப்பு, அகத்துறுப்பு அனைத்தும் சரியாக காணப்படுமிடத்தே அவன் முழு சராசரி மனிதனாக கருதப்படுகிறான். அதேபோல் ஒரு மனிதனிடம் அனைத்து புறத்துறப்புக்களும் சரியாக இருக்கும் பட்சத்தில் அகத்துறுப்பாக அன்பு காணப்படாதுவிடின் அவன் ஒரு முழு மனிதனாக காணப்படமாட்டான் என்று இதன் மூலம் அறியமுடிகிறது.

**'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்தும் சிறப்பு'**

என்று அன்பின் சிறப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அன்புடன் வாழ்வோருக்கு இவ்வையகத்தில் இன்பம் மட்டும் நிலைத்திருக்கும் என்று கருதப்படுகிறது. உண்மையான அன்பு மனத்துடன் வாழ்பவர்கள் எந்நிலையிலும் வையகத்தில் வாழும் காலமெல்லாம் சிறப்பாகவே அமையும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. அன்பு மனத்துடன் வாழ்பவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் எம் மனிதரிடத்திலும் அன்பினாலே சாதிக்கக்கூடிய தன்மையை கொண்டிருப்பர். அன்பு மனம் கொண்டவர்கள் ஒரு போதும் தமது நம்பிக்கையை தளரவிடமாட்டார்கள் என்பதை இக்குறள் மூலம் விளங்கக்கூடியதாகவுள்ளது.

அன்பு என்பது அனைத்து உயிர்களிடத்திலும் காண்பிக்க வேண்டிய ஒரு சிறப்பாகும். ஒரு மனிதனால் செல்வமின்றி கூட இருந்து விடலாம் ஆனால் அன்பில்லாமல் வாழ முடியாது. அன்னை தெரேசா தனது பொன்மொழியில் 'கருவுற்றால் ஒருவருக்கு அன்னையாகலாம் ஆனால் அன்புற்றால் உலகத்துக்கே அன்னையாகலாம்' என்று குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் அன்பின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை சிறப்பிக்கும் வகையில் அதனை 133 அதிகாரங்களுள் ஓர் அதிகாரமாகவே வடிவமைத்துள்ளார். எனவே அன்பின் சிறப்புக்களையும் அதனால் ஏற்படும் பயன்களையும் அறிந்த நாம் திருக்குறள் வழி அன்பின் சிறப்பை உலகறியச் செய்வோம். இதனூடாக அன்பும் பெருகும், திருக்குறளின் சிறப்பும் பெருகும். அனைவரிடத்திலும் அன்பு எனும் கரம் நீட்டி உலகை அன்பு என்றும் ஒளியால் பிரகாசிக்கச் செய்வோம்.

**'வளர்க திருக்குறள் சிறப்பு!'**
**'பெருக வையகத்தில் அன்பு!'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் ஊர்....



**கவிஞர். ரஜிதா அரிச்சந்திரன்**

**கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்**

**பிரதேச செயலகம்,**

**யாழ்ப்பாணம்.**


அழகின் உச்சம் காட்டுகின்ற
அறிவு நகராம் யாழ்ப்பாணம்
பழமைச் சிறப்பும் பாங்காயே
பெற்ற எங்கள் ஊரிலேதான்
வழமை சிறந்தே ஓங்குகின்ற
வளங்கள் நிறைந்த பதியாய்
ஒழித்தல் இன்றி வழங்கின்ற
உள்ளம் கொண்ட ஊரேயாம்



மூன்று பக்கம் கடலாலே
முத்தாய்ப் பாக சூழ்ந்திருக்கும்
ஆன்றோர் நிறைந்த பூமியாயே
அகிலம் போற்றும் அற்புத ஊர்
சான்றாய்க் கற்றோர் பலருமேதான்
சகல நாடும் சென்றேதான்
நான்கு திசையும் பறைசாற்றி
நன்கு ணர்த்தி வந்தனரே

என்ன இல்லை எங்களூரில்
எல்லாம் அமிர்தம் இங்கு மட்டும்
இன்ன பலவும் கொண்டதாலே
இந்தி ரனுமே விரும்புவானே
இன்னல் தீர்த்தே மக்களிற்கு
இனிமை வழங்கும் குடாநாடே
துன்பம் நீக்கும் காற்றாலே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரம் வளர்க்கும் நிலையழித்தாய்
பனங்காய்ப் பணியா ரத்துடனே
பனாட்டும் ருசிக்கும் ஊராரின்
மனங்கள் மகிழும் விதங்களிலே
மண்ணால் ஆன பானையிலே
கனமில் லாத உணவினையே
கவன மாக சமைத்தெடுத்தே
அன்ன தானம் இட்டாலே
அனந்தன் கூட விரும்புவானே

காய்கள் பழங்கள் மண்தருமே
கடலும் அள்ளித் தருமே மீன்
நோய்கள் அண்டா உணவினைத்தான்
நாளும் உண்டே உறுதியுடன்
ஓய்தல் இன்றி உழைக்கின்ற
ஓங்கா ரவேலன் பக்தர்கள்
ஈய்தல் முறையில் உச்சத்தை
இனிமை யாயே காட்டுமூரே.

# இளங்கலைஞர் விருது – 2023

**(பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)**

1) திரு. ஜீவதாஸ் ஜீவிதன் - கிராமியக்கலை
2) திரு. சகாயதாசன் டெனிக்சன் - கவிதை
3) திருமதி. விஜிந்தன் மதிவதனி - இசை (வயலின்)
4) திருமதி. பார்த்தீபன் பானுகா - இசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறையும் தலைமுறை இடைவெளியும்



பா. சிவமதி

அபிவிருத்தி உத்தியோகத்தர்

பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்

தலைமுறை இடைவெளி என்பது இன்று நம்மிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருமொன்றாக உள்ளது. இதனால் ஆசிரியர் - மாணவர், பெற்றோர் - பிள்ளைகள் என்று பலரிடையேயும் முரண்பாடுகளை தோற்றுவித்து பல பல தாக்கங்களை சமூகத்தில் குடும்பத்தில் ஏற்படுத்தி உறவுப் பாலங்களை உடைத்தெறிந்து கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இதனைப் பற்றி சரியாக விளங்கிக்கொள்ள முடியாத நாமும் இதன் வலையில் அகப்பட்டுக் கொண்டிருக் கின்றோம். உறவுகளிடையே பிரிவுகள், மன அழுத்தங்கள், நெருக்கீடுகள், வன்முறைகள் என்பவற்றை தோற்றுவித்து எம்மவர்கள் அனைவரையும் உளப்பாதிப்பான நிலைக்கு இட்டுச் செல்கிறது. எனவே இங்கு தலைமுறை இடைவெளி எனும் பதம் பற்றி நாம் அறிந்து கொள்வது நன்மை பயக்கக் கூடியதாகும். அதேவேளை நம்மிடையேயும் ஒருவித அறிவினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

“எங்கடை காலத்தில் நாங்கள் பெரியாட்களை எவ்வளவு மரியாதையாக நடத்தினம். இப்போதைய பிள்ளைகளுக்கு மரியாதை என்டாலே என்னண்டு தெரியா.....” என்ற மூத்தோர்களின் மன ஆதங்க வெளிப்பாடுகளை நாம் ஒவ்வொருவருமே ஏதோ ஒரு நிமிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது நிதர்சனமானதும் மறுக்க முடியாததும்.

ஆம், இந்த “தலைமுறை” என்பது உயிரினங்கள் ஒன்றிலிருந்து இன்னொன்று படிப்படியாக தோன்றி வரும் முறையில் ஒவ்வொரு படியையும் குறிப்பதாகும்.

உதாரணமாக :- பெற்றோர் ஒரு தலைமுறை எனின் அவர்களின் பிள்ளைகள் அடுத்த தலைமுறையாகவும் அப்பிள்ளைகளின் பிள்ளைகள் (பேரப்பிள்ளைகள்) மூன்றாம் தலைமுறையாகவும் கணிக்கப் படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே சில விதிவிலக்கானவைகளும் உள்ளன. அதாவது தாய் மாமன் தனது சகோதரியின் மகளை திருமணம் செய்யும் போது ஒரே தலைமுறைகளின் இணைப்பே ஏற்படுகிறதால் இவர்களின் பிள்ளைகள் எந்த தலைமுறைக்குட்படுவது என்பது குழப்பம் ஆகிறது.

அடிப்படையில் தலைமுறை இடைவெளி என்பது இளைய தலைமுறைக்கும் மூத்த தலைமுறைக்கும் இடையிலான காலப்பகுதியை குறிக்கும். இது 33/35 வருடக் காலப்பகுதிக்குள் கணக்கிடப்படுகிறது. இங்கு இரண்டு வெவ்வேறு தலைமுறையினரின் எண்ணங்கள், நம்பிக்கைகள் மற்றும் நடத்தை செயல்களில் உள்ள வேறுபாடுகள் செல்வாக்கு செலுத்துகின்றது. அதாவது வெவ்வேறு தலைமுறைகளை சேர்ந்தோரிடையே இசை, அரசியல், விழுமியங்கள் முதலிய விடயங்கள் தொடர்பில் இருக்கக்கூடிய கருத்து வேறுபாட்டைக் குறித்து நிற்கிறது. பொதுவாக இவ்வேறுபாடுகள் இளையோருக்கும் அவர்களது பெற்றோர் அல்லது அதற்கு முந்திய தலைமுறையினர்க்கும் இடையே ஏற்படுகிறது.

இவ்வாறான தலைமுறை இடைவெளி எனும் சொற்பதம் 1960 ஆம் ஆண்டில் தோற்றம் பெற்றுள்ளது. இந்த தலைமுறை இடைவெளி வேறுபாடுகள் முதன் முதலில் 1960 களில் இளைய தலைமுறையினரில் அவதானிக்கப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் குழந்தைகளின் பார்வையும் நம்பிக்கையும் பெற்றோரின் பார்வை, நம்பிக்கை என்பவற்றிலிருந்து வேறுபட்ட சந்தர்ப்பத்தில் இதனை இனங்காணக்கூடியதாக இருந்துள்ளது. அப்போதிலிருந்து குறித்த தலைமுறையினரை வரையறுக்க வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக : 1982 - 2000 இல் பிறந்தவர்களை "மில்லினியல்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தொழில்நுட்பத்தை தழுவிய முதல் தலைமுறை மக்கள் என்பதால் அவர்கள் "தொழில்நுட்ப பூர்வ வாசிகள்" என்றும் அழைக்கப்படுகிறார்.

இந்த நபர்கள் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் சமீபத்திய கருவிகளை சுற்றி வளர்ந்துள்ளனர். Digital தொழில்நுட்பத்தை அவர்கள் நேரில் பார்த்திருக்கிறார்கள். இப்போது முந்தைய தலைமுறையை சேர்ந்தவர்கள் அதாவது பழைய தலைமுறையினர் "மில்லினியல்கள்" போல் digital தொழில்நுட்பத்தில் வசதியாக இல்லை, அவர்களை "Digital குடியேறியவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இரு தலைமுறைகளையும் மனதில் வைத்து தொழில்நுட்பத்துறை தயாரிப்புக்களை வடிவமைக்கவும் காரணம் அதுவாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தலைமுறை இடைவெளி என்பது புதிய கருத்து அல்ல. இது பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. இருப்பினும் இந்த தலைமுறை இடைவெளி வேறுபாடுகள் 20ம், 21ம் நூற்றாண்டுகளில் வளர்ந்தமை குறிப்பிடக்கூடியது.இந்த தலைமுறை இடைவெளியானது நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் குடும்பங்களில் கூட பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நான்கு தலைமுறைகள் அடிப்படையில் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

01) பாரம்பரியமானது (Traditional)
02) குழந்தை பூமர்கள் (Baby Boomers)
03) ஜெனரல் எக்ஸ் (General X)
04) மில்லினியல்கள் (Millennials)



**01) பாரம்பரியமானது (Traditional)**

இந்த பிரிவில் விழும் நபர்கள், விதிகளை பின்பற்றுவதிலும் மக்களை மதித்தலிலும் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் மனச்சோர்வு காலத்தை அதாவது உலகப் போர்கள் மற்றும் பொருளாதார மந்த நிலைகளை கடந்து வந்துள்ளார்கள். பாரம்பரிய தலைமுறையை சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் பாரம்பரிய வாழ்க்கை முறைக்கு பழகிவிட்டதால் அவர்களுக்கு நவீன கருவிகள், தொழில்நுட்பத்தின் மூலம் ஆற்றப்படும் எந்த காரியங்களும் உற்சாகத்தையோ, திருப்தியையோ தருவதில்லை. மாறாக "தங்களை நோயாளிகளாக்க மேற்கொள்ளும் வழிமுறைகளே இவை" என்றே அவர்களை எண்ணத் தூண்டுகிறது. இதனால் இவர்கள் நவீன கருவிகளையும் தொழில்நுட்பத்தையும் அறவே வெறுப்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

**02) குழந்தை பூமர்கள் (Baby Boomers)**

இந்த தலைமுறையை சேர்ந்த மக்கள் பொருளாதார மற்றும் சமூக சமத்துவங்களைப் பார்த்து வளர்ந்தவர்கள். அவர்கள் சமூக மாற்றங்களின் ஒரு பகுதியாக அறியப்படுகின்றார்கள். அவர்கள் 1970 கள் மற்றும் 1980 களுக்குள் பிறந்தவர்களாவர்.

**03) ஜெனரல் எக்ஸ் (General X)**

1980 களில் பிறந்தவர்கள் தலைமுறை 'X' அவர்கள் வளர்ந்து வரும் தொழில்நுட்பம், அரசியல், அதிகாரங்கள் மற்றும் போட்டி ஆகியவற்றை கண்டனர். இந்த நேரத்தில் கையடக்க கால்குலேட்டர்கள் (Calculetar) மின்னஞ்சல் மற்றும் இலகுரக கணிணிகள் வெளிவந்தன. 1980 களில் தொடங்கிய தொழில்நுட்ப மாற்றங்களை ஜெனரல் எக்ஸ் நபர்கள் கண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 04) மில்லினியல்கள் (Millennials)

இப்போது மில்லினியல்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்ட சமீபத்திய தலைமுறை கேபில்கார், மடிக்கணிணிகள், வீடியோ கேம்ஸ், ஊடகங்கள் தகவல் தொடர்பு போன்றவை அவர்களுக்கு தெரியும். மில்லினியல்கள் என்ற சொல் வளர்ந்து வரும் வயது வந்தோர் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் பொருள் இந்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் 25 வயதிற்குள் அவர்கள் சுதந்திரமாக இருப்பதாக நம்புகிறார்கள். அவர்கள் வளரவும் ஆராயவும் பரிசோதனை செய்யவும் விரும்புகிறார்கள்.

வெவ்வேறு கருத்துக்கள், வாழ்க்கை முறைகள் நம்பிக்கைகள் மற்றும் குணாதிசயங்களைக் கொண்ட நான்கு தலைமுறைகளே இவை. இவ்வாறான தலைமுறைகள் ஒவ்வொன்றிடையேயும் நிச்சயமாக வேறுபாடுகள் அதாவது கல்வி, கலாசாரம், ஆராயும் தன்மை, பார்வைக் கோணங்கள். சிந்தனை என்பவை காணப்படும். இதன் விளைவாக ஒரு தலைமுறையினரின் கருத்தை அடுத்த தலைமுறையினர் ஏற்றுக்கொள்ள பின்னடிப்பார்கள். இதன் காரணமாகவே எம்மிடையே முரண்பாடுகளும் மனக்கசப்புக்களும் ஏற்படுகிறது. நாம் இவற்றில் இருந்து மீண்டு வெற்றி பெற விரும்பினால் இரண்டு தலைமுறைக்கும் இடையே உள்ள சரியான சமநிலையை கண்டறிய வேண்டும். அவற்றில் உள்ள நன்மை தீமைகளை நாம் நிதானமாக எடுத்துரைக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் திறந்த மனதுடன் தலைமுறை இடைவெளி மாற்றங்களை பார்ப்போமானால் எமக்கிடையே முரண்பாடுகள் ஏற்படாது. “பழையன கழிதலும் புதியன புகுதலும்” இயற்கையானது. பழையனவற்றிலுள்ள நல்லவற்றையும் புதியனவற்றிலுள்ள நல்லவற்றையும் எடுத்து ஆராய்ந்து அதில் மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை பேணுவதன் மூலம் தலைமுறை இடைவெளி ஒரு பெரிய விடயமே ஆகாது. மூத்த தலைமுறையின் விருப்பு வெறுப்புக்கேற்ப நாமும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் வாழ்வோமானாலும், அதேபோல் இளைய தலைமுறையினருக்கு விட்டுக் கொடுப்புடன் வாழ்வோமானாலும் இந்த தலைமுறை இடைவெளி எனும் பாரிய பிளவை இலகுவாக கடந்து செல்ல முடியும். எனவே நாமும் நமது மூத்த, இளைய சந்ததியினரை மதிப்போம். நம்மை நாமே மதிப்போம். மகிழ்ச்சியாக வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா எனும் இராட்சதனே........நீ






யூ. மேவிஸ் ஜீன்சியா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.



சட்டென உருமாறும் அந்நியனே சரித்திரத்தை மாற்றிய சாணக்கியனே
சகலமும் முடக்கிய சர்வதிகாரியே சத்தமின்றி கெடுத்த சகுனியே
ஊரடங்கு தந்த ஊதாரியே ஊரை முடக்கிய மாபாவியே
ஊருக்கொரு சுடுகாட்டை தந்தவனே ஊர் சுற்றுவதைக் குறைத்தவனே

கர்பம் அதிகரிக்கக் காரணமானவனே கர்ப்பிணிகளையும் கொன்ற கயவனே
கதவடைப்பைக் கட்டாயமாக்கியவனே கட்டுக்கடங்காதோரையும் கட்டுப்படுத்தியவனே
உலகத்தை உருட்டி எடுப்பவனே உடல் தின்று உலகை உலுக்கியவனே
உண்ணும் உணவைப் பறித்தவனே உயிரைப் பறித்து ரசிப்பவனே

சுத்தம் பேணச் சொன்னவனே சுந்தர முகத்தை மூட வைத்தவனே
சுவாசத்தைப் கவ்விப் பிடிப்பவனே சுதந்திரத்தைச் சுலபமாய் சிதைத்தவனே
கையோடு கால் கழுவச் சொன்னவனே கையுறையோடு முகமூடி பரிசளித்தவனே
கைகுலுக்கலை அடியோடு வெறுத்தவனே கைப்பிடி உணவுக்காய் ஏங்க வைத்தவனே

மலைமலையாய் மரிக்கச் செய்தவனே அலைஅலையாய் நோய் பரப்புபவனே
முதலாளித்துவத்தைக் கையில் எடுத்தவனே முன்பின் இருப்போரில் தங்கியிருப்பவனே
பேருந்துப் பயணத்தைப் பேதியாக்கியவனே பேயாகி கிருமியால் பீதியாக்கியவனே
பேரறிவாளர் ஊதியத்தைக் குறைத்தவனே பேரொலியாய் சங்கை ஊதியவனே

வெள்ளையனுக்கும் வேட்டு வைத்தவனே வேட்டியைக் கூட விற்கச் செய்தவனே
சட்டங்களைக் கடுமையாக்கியவனே சதுரப் பெட்டிக்குள் என்னைக் கிடத்தியவனே
சாமிக்கும் சங்கடங்கள் தந்தவனே சாவுப் பயத்தை நேரே காட்டியவனே
சாலையை வெறுச்சோட வைத்தவனே சாதிமத பேதம் அறியாதவனே


பூட்டாத கதவுகளையும் பூட்டியவனே பூவையரின் பொட்டைப் பறித்தவனே
பூலோகத்தைப் பிணத்தால் நிறைத்தவனே பூசைகள் பலிகளைக் குறைத்தவனே
குடும்பத்தைச் சுமையால் நெருக்கியவனே குவலயத்தைச் சுழன்றடித்து நொருக்கியவனே
குற்றங்களைப் பாவங்களைப் பெருக்கியவனே குருதியை உறைநிலைக்கு உருக்கியவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பத்தகாத விருந்தாளியே விநாடிக்கொரு உயிர் எடுக்கும் ஜாம்பவானே
அடங்க மறுத்தோரையும் அடக்கியவனே அனைத்தையும் அழிக்கும் அடங்காப்பிடாரியே
வேலையின்றி அலைய வைத்த வேதாளமே வேண்டாம் நீ சென்றிடு பாதாளமே
எல்லோரும் போகின்றோம் மேலோகமே எமலோகமாகின்றது எங்கள் பூலோகமே

சங்கைக்குரியவர்களையும் சரித்து வீழ்த்தியவனே சமரசம் பேசவும் உடன்படாதவனே
சந்தோசம் பறிக்கும் சபிக்கப்பட்டவனே சமூக இடைவெளி பேணச் செய்தவனே
காற்றோடு மூக்கில் கலந்தவனே காற்றிலும் நோயை ஆக்கியவனே
காலனைக் கூட்டி வந்தவனே காக்கியைக் காவல் வைத்தவனே




நுரையீரலைக் கிள்ளித் தின்பவனே ஐந்து கோடி பேரைக் கொன்றவனே
தூணிலும் துரும்பிலும் இருப்பவனே நாட்டினை முழுவதும் முடக்கியவனே
பலரின் படிப்பை நிறுத்தியவனே இடங்கொடுத்தோர் நெஞ்சில் தடம் பதித்தவனே
அகதியாய் அலைய வைத்தவனே அகந்தை கூடித் திரிபவனே

கூடிவாழ்வோரைத் தேடி வருபவனே தும்மல் தந்த துர்ப்பாக்கியனே
முதலீடுகளை முடக்கிய முட்டாளே சாலையை வெறுமையாக்கிய சாத்தானே
விண்ணுலகிற்கு விண்ணப்பம் எழுதுபவனே விசத்தைவிடக் கொடியவனே
விடுமுறை எடுக்காத விற்பன்னனே விண்ணெழும் விமானத்தை தடைசெய்தவனே

அகால மரணம் தந்த அதிபதியே அறத்தை தலைகுனிய வைத்தவனே
அதர்மத்தால் ஆதிக்கம் செய்பவனே சத்தியத்தை சாக வைத்தவனே
உண்மையின் வாயை உடைத்தவனே பொய்யை மெய்யெனச் சாதித்தவனே
வேதத்தின் பொறுமையை சோதித்தவனே அநீதிகள் தீமைகளை பெருக்கியவனே


சீர்கேடுகள் அதிகரிக்கச் செய்தவனே பாதகர்கள் அரசாளச் செய்தவனே
அஞ்சாத நாடுகளையும் திண்டாடச் செய்தவனே அடங்கமறுத்து அநியாயம் செய்தவனே
அடுத்தவர் வெறுப்பைச் சம்பாதித்தவனே ஆணவம் கொண்டு அலைந்தவனே
காலத்தை வீணாய் கழித்தவனே கடன் சுமையை அதிகரித்தவனே

நல்லவற்றைக் கெடுத்த நச்சுயிரே இறப்பைப் பரிசளித்த இம்சையே
பாலகரைக் கொன்ற பயங்கரவாதியே ஆனந்தம் போக்கிய தீவிரவாதியே
காய்ச்சல் தந்த களுசடையே இருமல் தந்த இடியமீனே
தலைவலி தந்த தரித்திரமே மூக்கினை அடைத்த மூதேவியே







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயற்சி






செல்வி ரமீஸ் பாத்திமா ரக்ஷானா
யா/ கதீஜா மகா வித்தியாலயம்

முயற்சித்துப்பார் முகில்கள் கூட
உன்னிடம் இறங்கி வரும்
முயற்சித்துப் பாருங்கள் மாணவர்களே!

முடியாது என்று எதுவும் இல்லை
உன் முயற்சி நிற்கும் போது
நீ மூச்சு நின்றவன் ஆகிறாய்!

தோல்வி என்பது வெற்றிக்கான படிக்கற்களே
தோற்று ஓடி முயற்சியில் சோர்ந்து போன
இராபர்ட் புரூஸ் மன்னன் கூட
சிலந்தி ஏழாவது தடவையாகக் கட்டிய
கூட்டினை கண்டபோதே தெளிவு பெற்றான்



முயற்சி செய்தான் பின் வெற்றி பெற்றான்
என் இறைவன் ஆளுமை உள்ளவராய் தான்
எங்களை இந்த அவனியில் படைத்துள்ளான்


அயராது முயற்சி செய்தால் அகிலத்தில் உயர்ந்திடலாம்
ஒவ்வொரு செயல்பாட்டிலும் முழு மனதுடன் முயற்சித்தால்
முன்னேறுவோம் எம் வாழ்விலே



கடந்தவை கடந்ததாகட்டும்
இனிவரும் காலத்தை வளமாக்க
முயற்சித்துப் பார்

கல்விக்கான தடைகளை களைவதில் முயற்சி
கற்பதில் முயற்சியாய் இரு
கடினமாய் உழைப்பதிலே முயற்சியாய் இரு





உங்களை மாற்றுவதற்கு நீங்கள்
உபயோகிக்கக் கூடிய மிகச் சிறந்த
ஆயுதம் கல்வி ஆகும்
என்ற நெல்சன் மண்டேலாவின் கூற்றுப்படி
முயற்சித்துப்பார் கல்விக்கான தடைகளைக் களைவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழே.... அமுதே



**எஸ்பீரியல் டொனற்றா**

**J/65 பாஷையூர் மேற்கு,**

**யாழ்ப்பாணம்.**

"தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" ஆம் உலகில் தோன்றிய மூத்தமொழி தமிழ். இதனாலன்றோ 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்' என்று கூறினார்கள். உலகிலுள்ள மொழிகளில் உயிர்த்துடிப்புள்ள மொழி தமிழே. 'தமிழ்' என்னும் மூன்றெழுத்துச் சொல்லை உச்சரிக்கும் போதே நாவில் நீரூறுகின்றது.. இது, தமிழர் என்பதாலோ, அல்லது மொழியில் நாட்டம் கொண்ட தமிழ்ப் பற்றாளர் என்ற அடிப்படையில் உருவான 'வேட்கை' என்றும் கொள்ளலாம். ஆனால், இங்கு 'தமிழன்' என்று சொல்லப்படுகின்ற எல்லோருக்கும் இந்தப் பற்றுறுதி இருக்குமா என்பது கேள்விக்குறியே.

இந்த முதல் மொழி என்று சொல்லப்படும் தமிழ், ஒரு காலத்தில், நமது தாய்நாடு என்று கூறப்படும் தமிழ்நாட்டில் கோலோச்சியது. அந்நாட்டில் தோன்றிய அறிஞர்கள், புலவர்கள் தமிழை வளர்த்தார்கள். வள்ளுவன் வகுத்த குறளிலே, கம்பனின் இராமாயணத்திலே, பாரதியின் பாடலிலே, இளங்கோவின் சிலப்பதிகாரத்திலே, ஔவையின் ஆத்திசூடியிலே மற்றும் புறநானூறு, அகநானூறு, தொல்காப்பியம், கலித்தொகை போன்ற ஆயிரமாயிரம் இலக்கிய வடிவங்கள் இயற்றப்பட்டன. சங்க காலத்திலே தமிழ் வளர்த்த தாய்ப் புலவர்கள் மிகவும் வறியவர்களாகவே இருந்தார்கள். மன்னராட்சிக் காலத்தில் அவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடித் தம் வயிற்றுப் பசியைப் போக்கினார்கள். இவ்விதமாக வளர்ந்த தமிழ் காலப்போக்கில் கலை இலக்கியமாக உருப்பெற்றது. தமிழ்நாட்டில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் இயல்பாகவே தம்மிடமிருந்த பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவியாற்றல் வல்லமையால் கலை வடிவங்களை உருவாக்கினார்கள். தெருக்கூத்து, மேடை நாடகம் போன்ற ஆற்றுகைகள் காலப்போக்கில் திரைப்படமாக அரங்கேறின. அன்றைய திரைப்படங்கள் வசனம் பேசி நடிக்கின்ற, குறிப்பாக அரட்டைகள் அற்ற தமிழ் உணர்வைத் தூண்டக்கூடிய உணர்ச்சிகரமான தமிழ் உச்சரிப்பில் இரசிகர்களைக் கவர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை மறந்துவிட முடியாது. ஆனால், நாளாக நாளாக இளம் தலைமுறையின் இரசனை மாறத் தொடங்கினது. தேன் சொட்டத் தமிழ் தரும் அடுக்குமொழி வசனங்கள் அழியத் தொடங்கின. திரைப்படத் தயாரிப்பாளர்கள், கதாயாசிரியர்கள், பாடலாசிரியர்கள் எல்லோரும் தமிழைச் சுருக்கினார்கள். 'கும்... கும்...' குத்துச் சண்டைகள், சிலம்படிகளெல்லாம் மேலைத்தேயத் தழுவலில் 'ஹொலிவுட்' திரைப்படங்கள் போல் மாறிவிட்டன. இன்றைய தலைமுறையும் அந்த இரசனைக்குள் சென்றுவிட்டது. இருந்த போதும் தற்போது வெளியிடப்பட்டுள்ள "பொன்னியின் செல்வன்" போன்ற அன்றைய முதன்மை எழுத்தாளர்களின் படைப்புக்கள் தொடர்ந்து திரைப்பட வடிவில் வெளிவந்தால் ஓரளவு தூய தமிழ்வடிவம் தோற்றம் பெறலாம்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்னும் பாரதியின் பாடல் வரிகளை உற்று நோக்குவோமேயானால் பாரதியின் மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் வெளிப்படுவதைக் காணலாம். இன்று பலகோடித் தமிழர்கள் உலகெங்கும் பரவி வாழ்கிறார்கள். உலகின் தமிழர் சனத்தொகையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. நம் இலங்கைத் தீவில் சுமார் 35 இலட்சம் ஈழத் தமிழர் வாழ்கிறார்கள். அடுத்து சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளிலும் தமிழர் வாழ்கிறார்கள். இதைவிட ஆறு ஏழு தலைமுறைக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் காலனித்துவத்துக்கு உட்பட்ட தீவுப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட அதாவது மொறீஷியஸ் பிஜி மற்றும் கரீபியன் தீவுகட்கு அனுப்பப்பட்டவர்கள் தமது மொழியையும் அடையாளத்தையும் இழந்துவிட்டனர். அதுபோன்று தமிழ்நாட்டில் வாழ்பவர்களில் அநேகம் பேர், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் விதைக்கப்பட்ட ஆங்கில மோகத்தால் படிப்பறிவற்றவர்கள் கூட பேச்சு மொழியில், அரைவாசி ஆங்கிலத்தையும் கலந்தே பேசுகின்றனர். எமது நாட்டிலும் மேல்மட்டத்திலுள்ளோர் இதையே கடைப்பிடிக்கின்றனர்.

மேலைத்தேய நாடுகளில் பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் நம் தமிழ் மக்கள் இந்தியத் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். இதில் அமெரிக்காவில் இந்தியத் தமிழ் மக்கள் அதிகம் உள்ளனர். தென்னாபிரிக்காவிலும் இந்தியத் தமிழர் நான்கு ஐந்து தலைமுறைகட்கு மேல் வாழ்ந்து வருகின்றனர். எமது ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் உள்நாட்டுப் போர் காரணமாகப் புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் கனடாவில் அதிகம் குடியேறியுள்ளனர். பிரிட்டனில் கல்வி, வேலைவாய்ப்பு இவற்றிற்காக அதிகம் பேர் சென்றுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, இத்தாலி போன்ற நாடுகளிலும் தமிழர் அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். அடிப்படைக் கல்வியறிவற்றவர்கள்கூட தாம் குடியேறிய நாடுகளின் மொழி மோகத்தால் தாமும் தம் பிள்ளைகளுக்கு தாய்மொழியைப் பேசக் கற்றுக் கொடுக்காது தமிழ் மொழியின் அடையாளத்தை அழிக்கின்றனர். தாங்கள் செய்வது தமிழ்த் துரோகம், மொழித் துரோகம் என்று அவர்களுக்குப் புரிவதில்லை. "தமிழ் இனி மெல்லச் சாகுமா? என்ற பாரதியின் கேள்விக்கு விடை தேடவேண்டியுள்ளது. எவன் தன் தாய்மொழியை இழக்க முயல்கிறானோ அவன் தன் தாயை இழப்பதற்குச் சமன்.

சங்ககாலத்தில் தமிழ்ப்புலவர்கள் தமிழ் வளர்த்த வேளை, அன்றைய தமிப் பெண்களின் கருவறையில் இருந்த குழந்தைகளுக்குத் தமிழ் புகுத்தப்பட்டது. கிராமிய மட்டத்தில் , பெண்கள் ஒன்றாகக் கூடி வேலை செய்யும் போதும், விளையாடும் போதும் தமிழ்ப் பண்பாட்டுக்களைப் பாடித் தம் தமிழ்மொழியை வளர்த்தார்கள். குழந்தைகளுக்குப் பாலூட்டும் போதே தமிழ் அறிவையும் ஊட்டினார்கள். குழந்தைகளைத் தூங்க வைக்கும் போது தூய தமிழில் தாலாட்டுப் பாடித் தமிழுணர்வை வளர்த்தார்கள். ஆனால், இன்றைய தாய்மார் தம் பிள்ளைகளோடு தமிழில் உரையாடுவதற்கே நேரமில்லை. அதீத வளர்ச்சி பெற்றுவிட்ட விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்புக்களான நவீன தொலைத்தொடர்புச் சாதனங்களால் 'தாய்மை' என்னும் தெய்வீகமே அழிக்கப்படுகிறது. சமையலறையிலும் சரி படுக்கையறையிலும் சரி வேலைத்தளத்திலும் சரி அனைவரும் கைப்பேசியில் தக்க வைக்கப்பட்டுத் தம் நேரத்தையும் குடும்ப அன்புறவையும் இழக்கின்றனர். ஆண், பெண், குழந்தைகள் முதல் முதியோர் வரை இன்று இந்த இன்ரநெற் வலைப்பின்னல் தளத்தில் சிக்குண்டு தம் வாழ்வையே சிதைக்கின்றனர்.

சிதைக்கப்படுவது தமிழ் மட்டுமல்ல தமிழ் மக்களின் வாழ்வும் தான். எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது தமது இனம், மொழி மீது பற்றுள்ள சிலரும் மேற்கு நாடுகளில் வாழ்வதை மறுக்க முடியாது. நம்நாட்டவர்கள் தம் குழந்தைகளுக்கு சினிமாக்காரர்கள் மற்றும் மேல்நாட்டவர்களின் நாய்க்குடிகளுக்கு இடப்படும் ஒரெழுத்துப் பெயர்களைச் சூட்டும் போது, விரல் விட்டு எண்ணக்கூடிய மொழிப் பற்றாளர்கள் வெளிநாடுகளில் தமிழ் மணங்கமழும் தூயதமிழ்ப் பெயர்களைச் சூட்டுவது வரவேற்கத்தக்கது. தமது பிள்ளைகள் பாடசாலைகளில் அந்நாட்டு மொழிகளில் கற்கும் போது வீட்டில் தமிழைத் தான் பேச வேண்டும் என்று வற்புறுத்தி தமிழையே பேச வைக்கின்றனர். கல்விமான்கள் இதிலே கூடிய கவனம் எடுத்தால் எம் தாய் மொழியாம் தமிழ் மொழி தரணியெங்கும் அரசகரும மொழியாகும் வாய்ப்பு உருவாகும். உலகம் உள்ளளவும் தமிழும் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைந்த செங்கோல்

## (செங்கோன்மை பொருட்பால்)

**செல்வி. பிரவீனா முகுந்தன்**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**திருக்குறள் கவிதைப் போட்டி மேற்பிரிவு**
**முதலாம் இடம்**

பொய்யா மொழி என்று ஒருவன் அவன் பித்தன் என்று கர்வம் கொண்டேன்
பாக்களை பாடி வாழும் பாணர்குலம் என்றிருந்தேன்
எண்ண விரக்தி உச்சம் தொட்டு என்னுள் குன்றிப் போகையிலே
அவன் கூறிவைத்த வார்த்தைகளைக் கொஞ்சம் எடுத்துப்பார் என்றார்.

எதேச்சையாகத் தட்டினேன்
எண்ணம் போன போக்கிலே
பளிச்சென்று பட்டது
ஆட்சியலின் அரங்கம் ஒன்று

நின் நிலத்து மக்கள் எல்லாம் நீடூழி வாழ்ந்திட
நெறி திறம்பா மன்னவன் நெடுநாள் வாழ வேண்டும்
மன்னவன் தன்கைக்கோலது செல்லும் வழி மக்கள் வழி
செங்கோலது கொண்டிருக்கும் கீர்த்தி எல்லாம் வானளவு

என்னே! வார்த்தைகள் அனைத்தும் நன்று என்று நாவது சொன்னாலும்
குறள் கூறும் பொன்மொழி எல்லாம் ஒருமுறை நடக்க வேண்டுமென
மனமது வேண்டினாலும் சிரம் அதை ஏற்கவில்லை.
பேராசைக்காரி என எனை நானே வஞ்சிக்கிறேன்.

**ஆனாலும் ஒரு நப்பாசை........**

அந்தணன் - குலங்களில் சிறந்ததென்று குடி சொல்லக் கேட்டிருந்தேன்
அவன் தன் மேனி தழுவும் நூலது நீற்றுக்கு ஒப்பு என அறிந்திருந்தேன்
“அந்நூலினும் மேலது கோல்” என்று அவன் விதந்திருந்தான்
உண்மைதான் - நூற்றாண்டிற்கு முன் வரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்கம்......

ஆள்பவனுக்கு அழகு அவன் கைவீரம் அல்ல
நீதியொடு அவன் செய் நெறிதிறம்பா அரசு என்றான்
கண்ணீர் திவலைகள் கனத்துக் கொண்டு பொழிந்தாலும்
இமை மடித்துப் படிக்கிறேன் மறு வார்த்தையை மனக்கண்ணில்

வானரசன் தந்துவிடும் வரமென்ற மழை ஒன்று
இந்த நாட்டரசன் கோன்மையிலே நயமாக பெய்துவிடும்
ஊர் தூற்றிவிட வாழ்ந்துவிடும் இந்நாள் ஆட்சியலில்
மார்கழிதான் வானம் பார்க்கும் கானலின் மழைத்துளியோ!

நடுவு நின்றாரே ஆள வேண்டும்; மற்றோரெலாம் தாழ வேண்டும்
செய்த வினையில் குற்றம் காண செயற்கரிய செயல் ஆற்றி
குடிவாழ செய் ஆட்சி; கோமகனின் திரு ஆட்சி
ஒருமுறை அது குற்றம் என்றால் மறுவாழ்வு நரகத் தஞ்சம்

உழவன் அகற்றும் களை குற்றம் களைபவன் வேந்தன் என்றால்
இந்நாள் வேந்திற்கு தாம் கூறும் நடைமுறை விளக்கம் எத்தனைகள்?
செங்கோன்மை இலக்கணம் தவறிப் போய் நெடுநாட்கள்
அதனை வஞ்சித்தே பழகி விட்டோம், திருத்த இங்கு யாருமில்லை

அப்பாவி வள்ளுவன், அவன் பித்தன்
அறநெறி என்ற வார்த்தைக்கு அருவ நூலில் விளக்கம் தேடும்
சிறுமை மிகு மானிடர்க்கு இவன் வார்த்தை எங்கு புரியும்?
கலியுகம் கண்டிருந்தால் கதி கலங்கிப் போயிருப்பான்.

மீளவும் கூறுகிறேன், அவன் பித்தன்
செங்கோலது உடைந்து விட்டது; அல்ல தொலைந்து விட்டது
ஒருவேளை, பிறப்பால் இழிந்த மானிடன் சிறந்திட
தொலைந்த செங்கோல் ஒருமுறை மலர்ந்திட
அந்த வள்ளுவன் தான் மீண்டொருமுறை ஜனித்திட வேண்டுமோ!

பொது யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றே நீ பேசவா

வ. இந்துமதி
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

காற்றே நீ பேசவா
கனமழையில் நனைந்துவிட்டேன்
நான் காயவா



தோற்றுப் போன - நம்
இனத்தின் நிலையினை
தேற்றிடவே நீ வருவாய் தென்றலாய்
தேசமெல்லாம் சென்றிருக்கும்
உறவுகளை தேடிச் சென்று
தழுவி ஒரு செய்தி சொல்
தேடுகின்றோம் உறவுகளை
தூது சென்று உறவுகளைத் தேடி வா
தேடுகின்றோம் என்று அங்கு
சொல்லி வா

உறவுகளின் நலமதனை
கேட்டு வா
பரந்து இருக்கும் உறவுகளை
பார்த்து வா
உறவுக்காக அழுதவனை
அங்கு கூறி வா
உறவுகளின் உணர்வுகளை
உளமார உணர்ந்து வா
காதினிலே நம் கனவுகளை
கவனமாக கூறி வா
கஸ்ரப்படும் எம்மவரை
கனிவுடனே தழுவி வா
உருவம் இல்லா உன்
உணர்வுதனை காட்டி வா
உயிர் இல்லாத உன்



நிழலால் அவர்களை
அணைத்து வருடி வா
காற்றே நீ பேசவா
கன மழையில் நனைந்து விட்டேன்
நான் காயவா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம் சுமக்கும் பட்டாம்பூச்சிகள்





திருமதி. தர்சினி யூட் அமலராஜ்
நுண்கலைமாணி, கலைமாமணி,
கீதசொரூபி, கம்சப்பிரியா
இசைக்கல்லூரி.



பள்ளிக்கூடங்கள் குழந்தைகள் யாவும்
ஏர் பூட்டிய மாடுகள் அல்ல வண்ணத்துப்பூச்சிகள்
பூச்சிகள் மேலுள்ள சுமைகளை இறக்கிவிட்டு
இறக்கைகளை பறக்க விடுங்கள்

கருப்பப்பைகளின் பாரத்தை கூட
பத்து மாதங்களில் முடிந்து விடும்
புத்தகப்பைகளின் சுமைகளோ
பத்து வருடங்களுக்கு மேல் தொடர்ந்து விடும்



மாணவர்களுக்குப் பாடச்சுமை
பெற்றோர்களுக்கு பணச்சுமை
குருவுக்கு பணிச்சுமை
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுமை
இதனாலே உறக்கம் வந்தும் கூட
மூட மறக்குது இமை.

சின்னக் குழந்தைகளின் துன்பங்களைக்
கண்டு தாங்கிக் கொள்ளும் தாய்மார்களுக்கு
மனசு என்ன கல்லா? எனக் கேட்டால் கல்தான்
பிள்ளைகளின் மனச்சுமை தாங்கும் சுமைதாங்கி - கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வின் வெற்றிக்கு சிரிப்பே சிறந்த மருந்து



**இ. சற்குருநாதன்**
**சித்த ஆயுர்வேத விசகடி வைத்தியர் நிபுனர்**
**சமாதான நீதவான் - கொட்டடி**

சிரிப்பு பெரும்பாலும் சிறந்த மருந்தாக கூறப்படுகின்றது. மன அழுத்தத்தைக் குறைப்பது முதல் மனநிலையை மேம்படுத்துவது, நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது மற்றும் அறிவாற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவது வரை சிரிப்பு பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது என்பது அறிவியல் பூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது. மேலும் சிரிப்பு வாழ்க்கையில் வெற்றிக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். இங்கு வெற்றிக்கு சிரிப்பு ஏன் மிகவும் முக்கியமானது என்பதையும், அதை உங்கள் நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் பார்ப்போம்.

## சிரிப்பின் சக்தி

சிரிப்பு என்பது கலாசார மற்றும் மொழித்தடைகளைத் தாண்டிய ஒரு உலகளாவிய மொழி. இது மனிதகுலம் தோன்றிய காலத்திலிருந்தே உள்ள ஒரு உள்ளார்ந்த மனித எதிர்வினை, சிரிப்பு என்பது மகிழ்ச்சி, சந்தோசம் மற்றும் நகைச்சுவையை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாகும். மேலும் இது மனதிலும் உடலிலும் பல நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.



சிரிப்பின் முக்கிய நன்மைகளில் ஒன்று மன அழுத்தத்தைக் குறைக்கும் திறன் ஆகும். நாம் சிரிக்கும் போது endorphins களை நம் உடல் வெளியிடுகிறது. அவை இயற்கையான மன அழுத்தத்தை எதிர்த்துப் போராடும் இரசாயனங்கள் ஆகும். அவை மிகவும் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் உணர உதவுகிறது. சிரிப்பு cortisol போன்ற மன அழுத்த ஹார்மோன்களின் அளவையும் குறைக்கிறது. இது சரிபார்க்கப்படாமல் விட்டால் பலவிதமான எதிர்மறையான உடல்நல விளைவுகளை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு மனநிலை மற்றும் நல்வாழ்வையும் மேம்படுத்துகின்றது. அடிக்கடி சிரிக்கும் நபர்களின் வாழ்க்கையில் திருப்தியும் மகிழ்ச்சியும் அதிகமாக இருக்கும். ஏனென்றால் சிரிப்பு dopamine போன்ற நரம்பியக் கடத்திகளின் வெளியீட்டைத் தூண்டுகிறது. அவை மகிழ்ச்சியுடன் தொடர்புடையவை. சிரிப்பின் மற்றொரு முக்கிய நன்மை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் திறன் ஆகும். சிரிப்பு antibodies களின் உற்பத்தியை அதிகரிக்கிறது. மற்றும் நோயயெதிர்ப்பு செல்களை செயற்படுத்துகிறது. இது நோய்களில் இருந்து பாதுகாக்க உதவுகிறது.

மேலும் சிரிப்பு அறிவாற்றல் செயல்பாட்டை மேம்படுத்தும் நகைச்சுவை திரைப்படங்களைப் பார்ப்பது அல்லது வேடிக்கையான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது போன்ற சிரிப்பை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்கள் சிறந்த நினைவாற்றல் மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன் கொண்டவர்கள் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

## சிரிப்பு மற்றும் வெற்றி

சிரிப்பு வாழ்க்கையின் வெற்றிக்கான சக்தி வாய்ந்த கருவியாகும் என்பதை மறுக்க முடியாது. சிரிப்பு உங்கள் இலக்குகளை அடைய உதவும் சில வழிகளை இங்கே பார்க்கலாம்.

### 1. மன அழுத்தத்தை குறைத்தல்

வெற்றிக்கு முதன்மையான தடைகளில் ஒன்று மன அழுத்தம் நீங்கள், வேலையில் அழுத்தம், நிதிப் பிரச்சினைகள் மற்றும் உறவுச் சிக்கல்களை எதிர்கொண்டாலும் மன அழுத்தமானது உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்துவதையும் உந்துதலாக இருப்பதையும் கடினமாக்கும். ஆனால் சிரிப்பு மன அழுத்தத்தைக் குறைக்கவும் கடினமான சூழ்நிலைகளைச் சமாளிப்பதை எளிதாக்கவும் உதவும்.

சிரிப்பதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நேரத்தை ஒதுக்குவதானது உங்கள் பதற்றத்தைக் விடுவிக்கவும், உங்கள் மன அழுத்தத்தின் அளவைக் குறைக்கவும் உதவும். இது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க உங்களை நிதானமாகவும் சிறப்பாகவும் உணர உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உறவுகளை மேம்படுத்தல்

வெற்றி என்பது சக பணியாளர்கள், வணிகப் பங்காளிகள் அல்லது குடும்ப உறுப்பினர்களுடன் இருந்தாலும், மற்றவர்களுடன் வலுவான உறவுகளை உருவாக்குவதைப் பொறுத்தது. சிரிப்பு என்பது மற்றவர்களுடன் இணைவதற்கும் நல்லுறவை வளர்ப்பதற்கும் ஒரு சக்தி வாய்ந்த வழியாகும். நீங்கள் ஒருவருடன் நல்ல சிரிப்பைப் பகிர்ந்து கொள்ளும் போது மற்ற வழிகளில் அடைய கடினமாக இருக்கும் நட்பு மற்றும் நெருக்கம் ஆகியவற்றை நீங்கள் உருவாக்குகிறீர்கள். சிரிப்பு தடைகளை உடைத்து, தனிப்பட்ட மற்றும் தொழில் முறை சூழல்களில் மற்றவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்த உதவும்.

## 3. படைப்பாற்றலை ஊக்குவித்தல்

வெற்றிக்கான மற்றொரு முக்கிய மூலப்பொருள் படைப்பாற்றல். நீங்கள் ஒரு கலைஞராகவோ அல்லது தொழில்முனைவோராகவோ இருந்தாலும் உங்கள் இலக்குகளை அடைவதற்கு புதுமையான யோசனைகளைக் கொண்டு வருவது பெரும்பாலும் அவசியம். மேலும் சிரிப்பு உங்கள் மூளையின் ஆக்கபூர்வமான பகுதிகளைத் தூண்ட உதவும்.

நீங்கள் நேர்மறையான, நிதானமான மனநிலையில் இருக்கும் போது சிக்கல்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை கொண்ட வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது. மன அழுத்தத்தையும் பதட்டத்தையும் குறைத்து உங்கள் நல்வாழ்வை அதிகரிப்பதன் மூலம் சிரிப்பு உங்களை இந்த மனநிலையில் வைக்க உதவும்.

## 4. உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்

சிரிப்பு உங்களை அதிக உற்பத்தி செய்ய உதவும். நீங்கள் மன அழுத்தமாக உணரும் போது கவனம் செலுத்துவது மற்றும் வேலைகளைச் செய்வது கடினமாக இருக்கும். ஆனால் சிரிப்பு உங்கள் கவனத்தை மேம்படுத்த உதவுகிறது. மேலும் பணிகளைச் சமாளிப்பதை எளிதாக்குகிறது. சிரிப்பை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபடுவதற்கு நாள் முழுவதும் சிறிய இடைவெளிகளை எடுப்பது உண்மையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நீங்கள் சிரிக்க ஓய்வு எடுக்கும் போது உங்கள் மூளை ஓய்வெடுக்கவும், ரீசார்ஜ் செய்யவும் முடியும். இது நீங்கள் வேலைக்கு திரும்பும் போது உங்களை அதிக விழிப்புடனும் கவனத்துடனும் இருக்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சிரிப்பு உத்வேகத்துடன் உங்கள் வேலையில் ஈடுபடவும் உதவும். கடினமான அல்லது சாதாரணமான ஒரு பணியில் நீங்கள் இருக்கும் போது அங்கு நகைச்சுவையை கண்டறிய முடிந்தால் அதை குறைவான சுமையாகவும், சுவாரஸ்யமாகவும் உணர முடியும். நீங்கள் சவாலான பணிகளைச் சந்திக்கும் போதும் நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க இது உதவும்.

உங்கள் அன்றாட வழக்கத்தில் அதிக சிரிப்பை எவ்வாறு இணைப்பது என்பது நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கலாம். நீங்கள் தொடங்குவதற்கு சில குறிப்புகள் இங்கே,

## 1. நகைச்சுவையைத் தேடுங்கள்

உங்கள் வாழ்க்கையில் அதிக சிரிப்பை இணைப்பதற்கான எளிய வழிகளில் ஒன்று, உங்களால் முடிந்த போதெல்லாம் நகைச்சுவையைத் தேடுவது. ஒரு வேடிக்கையான திரைப்படத்தைப் பார்ப்பது, நகைச்சுவையான புத்தகத்தைப் படிப்பது அல்லது சமூக ஊடகங்களில் வேடிக்கையான வீடியோக்கள் மற்றும் கேம்களை பார்ப்பது என எதுவாக இருந்தாலும், அன்றாட வாழ்க்கையில் நகைச்சுவை மற்றும் சிரிப்பைக் கண்டறிய எண்ணற்ற வழிகள் உள்ளன.

## 2. நேர்மறையான நபர்களை உங்களைச் சுற்றி வையுங்கள்

உங்கள் வாழ்க்கையில் சிரிப்பை ஊக்குவிக்க மற்றொரு முக்கியமான வழி, உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் சிரிப்பையும் கொண்டு வரும் நேர்மறையான நபர்களை உங்களைச் சுற்றி வைத்திருங்கள். உங்களை சிரிக்க வைக்கும் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் நேரத்தை செலவிடுங்கள்.

## 3. உங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்

உங்களைப் பார்த்து சிரிக்க கற்றுக்கொள்வது உங்கள் வாழ்க்கையில் அதிக நகைச்சுவை மற்றும் சிரிப்பை இணைப்பதற்கான சிறந்த வழியாகும். உங்கள் தவறுகள் மற்றும் குறைபாடுகளைப் பார்த்து நீங்கள் அதிகம் அழுத்தம் கொள்ளாது சிறு சிரிப்போடு அதை கடந்து செல்லுங்கள். அது திட்டமிட்டபடி விசயங்கள் நடக்காத போது நீங்கள் மன அழுத்தம் அல்லது வருத்தம் அடைவதற்கான வாய்ப்புக்களைக் குறைக்கும். பின்னடைவுகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டாலும் உங்கள் இலக்குகளில் அதிக நிதானமாகவும் கவனம் செலுத்தவும் இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நினைவாற்றலைப் பயிற்சி செய்யுங்கள்

இறுதியாக நினைவாற்றலைப் பயிற்சி செய்வது உங்கள் வாழ்க்கையில் அதிக சிரிப்பையும் மகிழ்ச்சியையும் இணைக்க ஒரு சக்தி வாய்நத வழியாகும். தற்போதைய தருணத்தில் கவனம் செலுத்துவதன் மூலமும், கவலைகள் மற்றும் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதன் மூலமும், சிரிப்பு மற்றும் நேர்மறை உணர்ச்சிகள் செழிக்க நீங்கள் இடத்தை உருவாக்கலாம். மிகவும் நேர்மறை மற்றும் மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக் கொள்ள உதவும் தியானம், யோகா போன்ற நினைவாற்றல் பயிற்சியை எடுத்துக் கொள்ளுங்கள்.

சிரிப்பு வாழ்க்கையில் வெற்றிக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். இது பலவிதமான உடல், மன மற்றும் உணர்ச்சிப்பூர்வ நன்மைகளைக் கொண்டுள்ளது. இது நம்மை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் மேலும் வெற்றிகரமான நபர்களாகவும் மாற்ற உதவும். சிரிப்பு மன அழுத்தத்தை நிர்வகிக்கவும், நமது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. மேலும் வலுவான உறவுகளை உருவாக்கவும், தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும் மற்றும் நேர்மறையான, மகிழ்ச்சியான மனநிலையை வளர்க்கவும் சிரிப்பு உதவுகிறது.

எனவே அடுத்த முறை நீங்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகும் போது, ஓய்வெடுத்து உங்களை சிரிக்க வைக்கும் ஒன்றைக் கண்டறியவும். இது உங்கள் மனநிலையை நல்ல நிலைக்கு கொண்டு வரவும், உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், புதுப்பிக்கப்பட்ட ஆற்றலுடனும் கவனத்துடனும் அன்றைய சவால்களை சமாளிக்கவும் உதவும். மேலும் நீண்ட காலத்திற்கு உங்கள் வாழ்க்கையில் அதிக சிரிப்பை இணைத்துக் கொள்வது உங்கள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அதிக வெற்றி, மகிழ்ச்சி மற்றும் நிறைவை அடைவதற்கான திறவுகோலாக இருக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STC Traders

*General Merchants, Commission Agents & Dealers in All Kind of Local Produce*

**191, Hospital Road, Jaffna.**
**Tel : +9421-2221394**
**Tel / Fax : 94 11-2399050**
**Mob : +94 777-729547**
*Email : stctraders187@gmail.com*

# Micro Auto Works
மைக்றோ ஓட்டோ வேக்ஸ்

*Lathe Work*
*Re-Boring*
*Wheel cutting MillingWork &*
*General Engineering Work*



*No. 354, Clock Tower Road, Jaffna.*
*Email : 354microauto@gmail.com*
**Mobile : 0776102945  Office : 021 222 9111**

**A/L** பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!!
சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- Hair Dressing & Styling
- அழகுக் கலை
- Facials
- மணப்பெண் அலங்காரம்
- பலவிதமான சேலை அணியும் முறைகள்
- ஆரி எம்ரோய்டரி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலை பின்புற வீதி)

NLT

# New Lanka Traders (Pvt) Ltd.

*Distributors for :*
*KELANI CABLES, SUZUKI OUTBOARD MOTORS, CUMMINS GENERATOR ETC.*




Post : No. 222 & 226 Stnaley Road, Jaffna, Sri Lanka.
Tel : 0094 (0) 21-2222838, 21-2221150, 0094 (0) 21-2222062
Mobile : 0094 (0) 77-7222238
Fax : 0094 (0) 21-2222062
Email : newlanka25@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அட்டைப்படம் விளக்கவுரை

சகாதேவன் ஷதூர்ஷன்,
கணனி பிரயோக உதவியாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.

தற்கால உலகியலின் நவீன போக்கும் நவநாகரிகத்தின் தன்மையும் யாழ் மண்ணின் பாரம்பரிய பண்பாட்டு வேர்களையும் சற்று அசைத்துப் பார்க்கத் தவறவில்லை. அசைக்கப்படும் பாரம்பரிய பண்பாட்டு வேர்களுக்குப் புத்துயிர் கொடுப்பவையாக அமையும் எமது சமய, கலைகள்சார் அம்சங்களை பல மொழிகள் பேசும் வணண்ங்களின் பின்னணியில் முன்நிறுத்திச் சிந்தித்தபோது உருவான நிற விம்பங்கள் பேசும் சிறு கவிதையாக இவ் யாழ்பாடியின் அட்டைப்படம் உங்கள் உள்ளங்களால் உணரப்படும் என நம்புகின்றேன்.

யாழ் மண்ணின் பாரம்பரியங்களையும் கலைபண்பாடு களையும் எம் சந்ததி வேர்களினூடு கடத்துவதற்கும் எம் மண்ணின் கலைஞர்களின் யதார்த்தமான கற்பனைகளை வெளிக்கொணர்வதற்கும் அதிக முக்கியத்துவமும் ஊக்கமும் கொடுத்துவரும் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் மற்றும் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினர், யாழ்பாடி மலர்க்குழுவினர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகளை வாஞ்சையுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின்
அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும்
பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும்

# பண்பாட்டு விழா - 2022

## அழைப்பிதழ்

இடம் : யாழ்ப்பாணப் பிரதேச செயலக கேட்போர் கூடம்
காலம் : 2022.04.29 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மு.ப 9.00 மணி

**தலைமை**
திரு. சாம்பசிவம் சுதர்சன்
பிரதேச செயலாளர்/ தலைவர், கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. கணபதிப்பிள்ளை மகேசன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர் யாழ்ப்பாணம்.

**சிறப்பு விருந்தினர்**
திருமதி. இராஜமல்லிகை சிவசுந்தரசர்மா
பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

**கௌரவ விருந்தினர்**
கலைக்குரிசில். திருமதி. வசந்தி குஞ்சிதபாதம்
நடனக் கலைஞர், யாழ்ரத்னா

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

அருட்பணி. நீ.மரியசேவியர் அடிகள் அரங்கு

## நிகழ்ச்சி நிரல்

- ★ விருந்தினர்களை அழைத்துவரல்
- ★ மங்கல விளக்கேற்றல்
- ★ தமிழ்த்தாய் வாழ்த்து -பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
- ★ கலாசாரப் பேரவைக் கீதம்
- ★ வரவேற்புரை -திருமதி.சோபிகா றோய் றொபின்சன்
  உதவிப் பிரதேச செயலாளர்
- ★ அரங்கு சமர்ப்பணம்
- ★ அரங்கத் திறப்புரை -திரு.யோ.யோன்சன் ராஜ்குமார்
  பிரதி இயக்குனர், திருமறைக்கலாமன்றம்.
- ★ வரவேற்பு நடனம் - வண்ணை கலைமன்றம், வண்ணார்பண்ணை
- ★ தலைமையுரை - பிரதேச செயலாளர்
- ★ சிறப்பு விருந்தினர் உரை
- ★ புல்லாங்குழல் இசை - கீதவாகினி இசைக்கல்லூரி, கொழும்புத்துறை
- ★ கலாசார மலர் 'யாழ்பாடி-06' வெளியீடு
  வெளியீட்டுரையும் மதிப்பீட்டுரையும் -கலாபூஷணம்.செ.யோசப்பாலா
  இணைப்பாளர், கியூடெக் கரித்தாஸ்.
- ★ பிரதம விருந்தினர் உரை
- ★ பூதத்தம்பி நாட்டுக்கூத்து - யாழ்ப்பாண பிரதேச கலைஞர்கள்
  எழுத்துரு, நெறியாள்கை கலாபூஷணம் பீ.யூல்ஸ் கொலின்
  (அரச நாடக கீர்த்தி விருது)
- ★ கலைஞர் நயப்புரை -திரு.கொ.கரன்சன்
  பேரவை நிர்வாக உறுப்பினர்
- ★ கலைஞர் கௌரவிப்பு - இளங்கலைஞர் விருது
  'யாழ்ரத்னா' விருது
- ★ நன்றியுரை - திரு.இ.ஜோன்சன், கலாசார உத்தியோகத்தர்
- ★ தமிழ்மொழி வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா - 2022




அருட்பணி. நீ. மரியசேவியர் அடிகள் அரங்கு



விருந்தினர்களை அழைத்து வரல்



விருந்தினர்களை வரவேற்றல்



மங்கள இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா - 2022



தமிழ்த்தாய் வாழ்த்து ~ பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்




வரவேற்பு நடனம் (வண்ணைக் கலைமன்றம்)



பேரவைக் கீதம் இறுவெட்டு வெளியீடு ~ கலாசார பேரவை உபதலைவர்



பேரவைக் கீதம் இறுவெட்டு வெளியீடு ~ கலாசார அதிகாரசபை உபதலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா - 2022



புல்லாங்குழல் இசை (கீதவாஹினி இசைக்கல்லூரி)



யாழ்பாடி 6 கலாசார மலர் வெளியீடு



விருந்தினர்கள் கௌரவிப்பு





யாழ்பாடி மலர்களும் விருதுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு விழா - 2022



கௌரவம் பெற்ற கலைஞர்களுடன் விருந்தினர்கள்



பூதத்தம்பி நாட்டுக்கூத்து நூல் வெளியீடு



பூதத்தம்பி நாட்டுக்கூத்து கலைஞர்களுடன் விருந்தினர்கள்



விருந்தோம்பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி இசைவிழா – வாத்தியப் பிருந்தா (கீதவாஹினி இசைக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி இசை விழா ~ பூதத்தம்பி நாட்டுக்கூத்து (யாழ்ப்பாணப் பிரதேசக் கலைஞர்கள்)













எழுத்துரு நெறியாள்கை ~ கலாபூஷணம் பி. யூல்ஸ்கொலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANNAI

" QUALITY THAT TOUCH'S SOUL "

ANNAI SEA FOOD (PVT) LTD

NO. 257, 259, BEACH ROAD, NAVANTHURAI NORTH, JAFFNA.
TEL: 021 222 8721 / 021 221 7488
Email: annaiseafood@yahoo.com

ANNAI AND SONS (PVT) LTD

NO. 257, 259, BEACH ROAD, NAVANTHURAI NORTH, JAFFNA.
TEL: 021 222 2091 / 021 222 2097
Email: annaiandsons@gmail.com

ANNAI HOLDINGS (PVT) LTD

NO. 17, ALATHIVELY, KANDY ROAD, NAVATKULY, JAFFNA.
TEL: 021 222 2925 / 021 222 2825
Email: annaiholdings@gmail.com

www. annai.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org